கல்கி



KALKI செப்டம்பர் 5, 1954

4 அணா




S. 222-50 TM

இந்தியாவில் தயாரித்தது

கல்கி பொருளடக்கம்

மலர் 14 இதழ் 6 | 1954 செப்டம்பர் 5 | ஜய ஆவணி 20

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



EVEREST HTA 54-2-TA

இது நல்ல பல்லவி!

குடியாத்தம் தொகுதியில் நடந்த உபதேர்தலில் முதன் மந்திரி ஸ்ரீ காமராஜ நாடார் கணிசமான அதிக வோட்டுக்கள் பெற்று வெற்றி அடைந்தார்.

இந்த வெற்றிக்காக ஸ்ரீ காமராஜ நாடாரையும் குடியாத்தம் தொகுதி வாக்காளர்களையும் வாழ்த்துகிறோம்.

வேறுவிதமாக முடிந்திருந்தால் குடியாத்தம் தொகுதியில் உள்ள வாக்காளர்கள் "பைத்தியக்காரர்கள்" என்ற பட்டம் பெறுவதற்கு உரியவர்களாவார்கள். எனவே, அவர்கள் ஸ்ரீ காமராஜ நாடாரைத் தேர்ந்தெடுத்ததிலே வியப்பு ஒன்றுமில்லை.

ஸ்ரீ காமராஜ நாடார் இம்மாகாணத்தில் எந்தத் தொகுதியில் நின்றிருந்தாலும் வெற்றி அடைந்திருப்பார். வேறு சில தொகுதிகளில் இன்னும் அதிகப் பெரும்பான்மை வாக்குகளும் பெற்றிருப்பார்.

குடியாத்தம் தொகுதியில் நடந்த உபதேர்தல் எந்தச் சூழ்நிலையில் நடந்தது என்பதை எண்ணிப் பார்க்கும்போது, இன்னும் அபரிமிதமான பெரும்பான்மை வாக்குகள் அவருக்குக் கிடைத்திருக்க வேண்டும் என்றே சொல்லத் தோன்றும்.

முந்தையப் பொதுத் தேர்தலின்போது காங்கிரஸை மூர்த்தண்யமாக எதிர்த்த கட்சியினர் பலர் இந்த உபதேர்தலில் காங்கிரஸுக்காக வலிய வந்து வேலை செய்தார்கள். ஸ்ரீ ஈ. வே. ராமசாமிப் பெரியாரும் ஸ்ரீ பி. டி. ராஜனும் அத்தொகுதிக்குச் சென்று பிரசாரம் செய்து தங்களுடைய ஆதரவை அளித்தார்கள். முஸ்லிம் லீக்கினர் முழுமூச்சுடன் காங்கிரஸின் வெற்றிக்காக வேலை செய்தார்கள். மற்றும் சிலர் எதிர்ப் பிரசாரம் செய்யாமல் சும்மா இருந்ததின் மூலம் தங்கள் ஆதரவைக் காட்டிக் கொண்டார்கள்.

எனவே, ஸ்ரீ காமராஜ் அடைந்த வெற்றிக்காக அவரை வாழ்த்துவதைக் காட்டிலும் தேர்தலின்போது அவர் ஏற்படுத்தி யிருந்த ஒற்றுமைச் சூழ்நிலைக்காக அவரை அதிகம் வாழ்த்துவது பொருத்தமா யிருக்கும்.

அதே சூழ்நிலை தமிழ் நாட்டில் நீடித்து நிலைத்து நிற்பதற்குரிய வகையிலே ஸ்ரீ காமராஜ் பின்னும் தொடர்ந்து பேசி வருவது மிகவும் மகிழ்ச்சிக்குரியது.

அவருடைய சொந்த ஜில்லாவாகிய ராமநாதபுரத்தில் வத்தராயிருப்பு என்னும் இடத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகா இரண்டாவது காங்கிரஸ் இளைஞர் மகாநாடு ஆகஸ்டுமீ 25உ நடந்தது. இந்த மகாநாட்டில் முதன் மந்திரி ஸ்ரீ காமராஜ் பேசிய விவரங்கள் ஆகஸ்டுமீ 28உ "தினமணி"யில் வெளியாகி யிருக்கின்றன.

"ஸ்ரீ காமராஜ் தமது குடியாத்தம் தேர்தலைப் பற்றிக் குறிப்பிடுகையில் கம்யூனிஸ்ட் கட்சியைத் தவிர எல்லாக் கட்சிகளும் காங்கிரஸுடன் சேர்ந்து தமக்காக வேலை செய்ததாகக் கூறினர். ஆகவே தப்பபிப்பிராயங்களை மறந்து வருகிற ஜில்லா போர்டு தேர்தல்களில் காங்கிரஸ் அபேட்சகர்களின் வெற்றிக்காகக் கூட்டாக வேலை செய்யும்படி மக்களைக் கேட்டுக் கொண்டார்."


குடியாத்தம் உபதேர்தலின் பயனாக ஸ்ரீ காமராஜ் இத்தகைய ஒத்துழைப்புப் பல்லவியை மேற்கொண்டிருப்பது பற்றி மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். மற்றும்,

"மாஜி காங்கிரஸ்காரர்கள் எல்லாரும் மீண்டும் காங்கிரஸில் வந்து சேர்ந்து அதைப் பலப் படுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்!" என்று ஸ்ரீ காமராஜ நாடார் கூறியதாகவும் மேற்படி "தினமணி"ச் செய்தி தெரியப்படுத்துகிறது.

வத்தராயிருப்பு மகாநாட்டுக்கு முன்னும் பின்னும் பல இடங்களில் ஸ்ரீ காமராஜ் ஏறக்குறைய இதே கருத்தை வெளியிட்டுப் பேசியிருக்கிறார். ஆகவே, இது அவருடைய நிலைத்த கொள்கையாகி விட்டது என்று நம்புவதற்கு இடம் தருகிறது.

"போனவர்களைத் திரும்பச் சேர்த்துக்கொள்ள முடியாது" "எதிர்ப்பவர்களைக் காங்கிரஸிலிருந்து வெளியேற்றியே தீருவேன்" என்பவை போன்ற பழைய பல்லவிகளுக்கு முதன் மந்திரி ஸ்ரீ காமராஜ் முழுக்குப் போட்டு விட்டார் என்னும் நம்பிக்கையும் உண்டாகிறது.

வேலை யில்லை!



பள்ளிக்கூட மாணவர்கள் பத்தாவது வகுப்பு வரையில் பௌண்டன் பேனா உபயோகிக்கக் கூடாதென்று பம்பாய் சர்க்கார் தடை விதித்திருக்கிறார்கள்.

"காங்கிரஸிலே திரும்பி வந்து சேருங்கள்" என்றும், "காங்கிரஸுடன் ஒத்துழைத்துப் பலப் படுத்துங்கள்" என்றும் ஸ்ரீ காமராஜ் சொல்லத் தொடங்கி யிருப்பது தமிழ் நாட்டின் நல்ல காலம் என்றே சொல்ல வேண்டும்.

இந்தப் புதிய பல்லவி மிக நல்ல பல்லவியாகும். இதை அவர் எக்காரணத்தைக் கொண்டும் கை விட்டுவிடாம லிருக்க வேண்டும். அதிலடங்கிய நோக்கம் காரியத்தில் நடை பெறுவதற்கும் வசதிகள் செய்து தர வேண்டும்.

எல்லாருக்கும் கடைசியாகக் காங்கிரஸை விட்டு வெளியேறியவர்கள் தமிழரசுக் கழகத்தினர். அவர்களைக் காங்கிரஸிலிருந்து வெளியேறச் சொன்னதற்கும் போதிய காரணம் இருக்கவில்லை; அவர்கள் தாங்களாக வெளியேறியதற்குக் கூறிய காரணமும் போதுமானதாக இல்லை.

கடைசியாக வெளியேறியவர்கள் முதலிலே காங்கிரஸில் திரும்பி வந்து சேர்வதற்கு வசதி ஏற்பட்டால் மிக நன்று யிருக்கும்.

* * *

காங்கிரஸை முன்னம் மூர்த்தண்யமாக எதிர்த்தவர்கள் நிபந்தனை ஒன்றும் போடாமல் காங்கிரஸை ஆதரிப்பதற்கு முன் வந்தால், அவர்களை நிராகரிப்பதற்கும் அவசியம் சிறிதும் இல்லை. எந்தக் காரணத்தைச் சொல்லிக் கொண்டு அவர்கள் காங்கிரஸையோ, காங்கிரஸ் திட்டங்களையோ, காங்கிரஸ் மந்திரி சபையையோ ஆதரிக்க முன் வந்தாலும், அவர்களுடைய ஒத்துழைப்பு வரவேற்பதற்கு உரியதுதான்.

தமிழகத்தில் ஜனத்தொகை மிக்க அதிகம்; எல்லையோ மிகவும் சுருங்கிப் போயிருக்கிறது. உணவு உற்பத்தி போதும் போதாத நிலையில் உள்ளது. நவீன இயந்திரத் தொழில் போதிய அளவு பெருகவில்லை. வீட்டுத் தொழில்களில் முக்கியமான கைத்தறித் தொழிலின் நிலை 'நித்திய கண்ட'மாக இருந்து வருகிறது. பெரிய பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களோ, மின்சாரத் திட்டங்களோ அமைக்க இனி வசதி கிடையாது.

தமிழ் மக்களிடம் அதிகமாக உள்ள செல்வம் அறிவுச் செல்வம் ஒன்றுதான். அந்த அறிவைத் தங்களுக்குள் பூசலை வளர்த்துக் கொள்வதில் தமிழர்கள் செலவிடுவது தங்களுக்குத் தாங்களே தீமை செய்து கொள்வதாகும்.

குழப்பங்களிலும் கலகங்களிலும் நம்பிக்கை யில்லாத எல்லாக் கட்சியினரும் எல்லா வகுப்பினரும் ஒத்துழைத்து முயன்றால், தமிழ்நாடு விரைவில் சிறந்த முன்னேற்றம் அடையலாம். பாரத நாட்டின் மற்றப் பிரதேசங்களுடன் சுபிட்சத்தை வளர்ப்பதில் போட்டி யிடலாம்.

முதன் மந்திரி ஸ்ரீ காமராஜ் அடிக்கடி இப்போது இந்த அம்சத்தை வற்புறுத்தி வருவது மகிழ்ச்சி தருகிறது. இந்த நிலையிலிருந்து அவர் மாறாமலிருக்க வேண்டும் என்று விரும்புகிறோம்

"லோஹியாவை விடுதலை செய்!"

தமிழ் நாட்டில் சென்ற மாதத்தில் ரயில் பிரயாணம் செய்தவர்கள் ஒரு காட்சியைக் கண்டிருப்பார்கள். ரயில் பாதையின் இரு புறங்களிலும் உள்ள மதில் சுவர்களில் பெரிய கொட்டை எழுத்தில் "லோஹியாவை விடுதலை செய்" என்று எழுதியிருந்ததைப் பார்த்திருப்பார்கள்.

அங்கங்கே உள்ள கிராம வாசிகளையும், நகர வாசிகளில் அநேகரையுங்கூட "லோஹியா யார்!" என்று கேட்டால் "அது யாரோ! தெரியாது!" என்றே பதில் கிடைத்திருக்கும்.

இதனால் அப்படி எழுதியவர்கள் முட்டாள்தனமாக எழுதினார்கள் என்று கொள்ள முடியாது.

காந்தி என்றால் யார்! நேரு என்பது யார்!—என்று ஜனங்கள் கேட்ட நாட்களும் முன்னொரு காலத்தில் இருந்ததுண்டு.

"லோஹியா யார்!" என்பது பலருக்குத் தெரியாவிட்டாலும், மேற்கண்டவாறு எழுதியிருப்பதைப் படித்த பிறகாவது "லோஹியா யார்!" என்று கேட்டுத் தெரிந்து கொள்வார்கள் அல்லவா!

அகில இந்திய அடிப்படையில் அமைந்த அரசியல் கட்சியில் சேர்ந்திருப்பதின் அனுகூலம் இதுதான்.

திராவிடக் கட்சித் தலைவர்களில் ஒருவரையோ தமிழரசுக் கட்சித் தலைவரையோ இந்த ராஜ்யத்து சர்க்கார் எக்காரணத்தினாலாவது சிறைக்கு அனுப்ப நேர்ந்தால், தமிழ் நாட்டின் பத்து ஜில்லாவுக்குள்ளேதான் அவர்களை விடுதலை செய்வது பற்றிக் கிளர்ச்சி உண்டாகும். கூவம் நதிக்கு வடக்கே யாரும் ஏன் என்று கேட்கமாட்டார்கள்!

ஆனால் லோஹியா சோஷலிஸ்டு கட்சிப் பிரமுகர். ஆனதால் லக்னோவிலிருந்து திருநெல்வேலி வரையில் லோஹியாவை விடுதலை செய் என்று கோஷம் எழுந்தது. பெரிதாகக் கோஷம் போடுவதற்குக் கட்சி பலம் இல்லாத இடங்களில் ஒரு சிலர் சுவரிலாவது எழுதினார்கள்!

"லோஹியா யார்!" என்னும் கேள்வியைக் கேட்டு ஜனங்கள் பதில் தெரிந்து கொள்வதற்கு அநுகூலமாக இன்னும் சில நிகழ்ச்சிகள் தொடர்ந்து நேரிட்டன.

திருவாங்கூர் சர்க்கார் அந்நாட்டில் தமிழர் வாழும் பிரதேசத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து பலர் உயிரிழந்ததைக் கேள்விப்பட்டதும், டாக்டர் லோஹியா சிறைக்குள் இருந்தவண்ணமே அச்செயலைப் பலமாகக் கண்டித்துப் பட்டம் தாணுப் பிள்ளையின் சர்க்காரை ராஜினாமா செய்யும்படி வற்புறுத்தினார். அதோடுகூட, பட்டம் தாணுப் பிள்ளையின் சர்க்கார் பிரஜா—சோஷலிஸ்டு சர்க்கார் ஆனபடியால், அவர்களுடைய செயலுக்குத் தாமும் ஓர் அளவு பொறுப்பேற்று, அக்கட்சியின் பொதுக் காரியதரிசி பதவியை ராஜினாமா செய்தார்!

இதனால் பிரஜா சோஷலிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்களில் நேர்மையும் நெறியும் தவறாத லட்சியவாதிகள் இருக்கிறார்கள் என்று நிரூபணமாயிற்று. இதனால் அந்தக் கட்சியின் நற்பெயர் நாட்டில் பலமாக நிலைநாட்டப்பட்டது.

* * *

எல்லா வற்றிலும் அதிசயமான சம்பவம் என்னவென்றால், தமிழ்நாட்டு மதிற் சுவர்களில் "லோஹியாவை விடுதலை செய்" என்று எழுதியவர்களின் விருப்பத்தை உத்தரப் பிரதேசத்து உயர்தர நீதி மன்றத்தார் காரியத்தில் நிறைவேற்றி வைத்து விட்டார்கள்!

டாக்டர் மனோஹர் லோஹியாவையும் அவரைப் பின் தொடர்ந்து சென்ற இரண்டாயிரம் தொண்டர்களையும் உத்தரப் பிரதேசத்துச் சர்க்கார் எந்தச் சட்டத்தின் கீழ் உத்தரவு போட்டுச் சிறைக்கு அனுப்பினார்களோ, அந்தச் சட்டமே செல்லாது என்றும், இந்திய சுதந்திர சாஸனத்துக்கு அது விரோதமானது என்றும் உ. பி. ஹைகோர்ட்டார் தீர்ப்பளித்தார்கள்.

அதன்பேரில் லோஹியாவும், மற்றத் தொண்டர்களும் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

சிறையிலிருந்து வெளி வந்தவுடனே, டாக்டர் மனோஹர் லோஹியா மறுபடியும் திருவாங்கூரில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தை அழுத்தமாகக் கண்டித்திருக்கிறார்.

பெரிய பெரிய அகில இந்திய காங்கிரஸ் தலைவர்களும், பக்கத்து ராஜ்யமாகிய தமிழ் நாட்டைச் சேர்ந்த அரசியல் தலைவர்களும், மந்திரிமார்களும் திருவாங்கூர் நிலைமை சம்பந்தமாக மௌனம் சாதிக்கும் போது, டாக்டர் மனோஹர் லோஹியா ஒருவர்தான் மேற்படி துப்பாக்கிப் பிரயோகத்தை அழுத்தமாகக் கண்டிக்க முன் வந்திருக்கிறார். இது அவருடைய அரசியல் நேர்மைக்கும் தீரத்துக்கும் எடுத்துக்காட்டு என்பதோடுகூட, அகில இந்திய பிரஜா—சோஷலிஸ்டு கட்சிக்கும் மிக்க பெருமை தருவதாகும்.


ஆசார்ய கிருபளானி போன்ற மற்ற பிரஜா—சோஷலிஸ்ட் கட்சித் தலைவர்களும் 'வழ வழ கொழ கொழ' என்று பேசி வீண் காலம் கடத்தாமல், உடனே திருவாங்கூர் நிலைமை பற்றிக் கவனம் செலுத்தி, உண்மை நிலைமை வெளியாகவும், அநீதிகளுக்கும் கொடுமைகளுக்கும் பரிகாரம் ஏற்படவும் பிரயத்தனம் செய்ய வேண்டும்.

நெருக்கடியான தருணங்களில் இவ்வாறு தீரமான நடவடிக்கைகளைக் கையாண்டால்தான், அகில இந்திய பிரஜா—சோஷலிஸ்ட் கட்சியின் வருங்காலத்தைப் பற்றி நம்பிக்கையுடன் இருக்கலாம்.

வெள்ளம் கொண்ட கொள்ளை

ஒரு நதி சீற்றம் அடைந்து உடைப்பு எடுத்துக் கொண்டாலே அதைச் சமாளிப்பது கஷ்டமான காரியம். சென்ற வருஷம் கோதாவரியில் ஏற்பட்ட வெள்ளம் மக்களையும் சர்க்காரையும் என்ன பாடுபடுத்தி விட்டதென்பதை எல்லோரும் அறிவர். தற்போது வட இந்தியாவில் உள்ள பல பெரிய நதிகள் சீற்றம் கொண்டு மக்களுக்குச் சொல்லொணுக் கஷ்ட நஷ்டங்களை விளைவித்து வருகின்றன. அதன் காரணமாகப் பீஹார், அஸ்ஸாம், மேற்கு வங்காளம், உத்தரப் பிரதேசம் இந்த நாலு மாகாணங்களையும் சேர்ந்த பதினாயிரக்கணக்கான சதுர மைல் பரப்புள்ள பிரதேசங்கள் கடல் போல் காட்சியளிக்கின்றன. எல்லா இடங்களிலுமாக நூறு கோடி ரூபாய்க்கு மேல்

நீதி கிடைத்தது



உத்தரப் பிரதேச உயர் நீதி மன்றத்தின் தீர்ப்புக்கு இணங்க, டாக்டர் லோஹியாவையும் அவரது சகாக்களையும் அந்த ராஜ்ய சர்க்கார் விடுதலை செய்திருக்கிறார்கள்.

பெறுமானமுள்ள சொத்துக்கள் நாசமாகி விட்டன என்று மதிப்பிட்டிருக்கிறார்கள்.

வீடு வாசல்களை இழந்து தவிக்கும் மக்களுக்கு உதவி புரிய உடனடியாக ஏழு கோடி ரூபாய் தேவையாக இருப்பதாக அந்த மாகாண சர்க்கார்கள் இந்திய சர்க்காரைக் கேட்டிருக்கிறார்கள்.

பாரதநாட்டின் சுதந்திரத்தையே விழுங்கி விடுவதுபோல் வந்த அகதிகள் பிரச்னையை இந்திய சர்க்கார் புதிய நகரங்களையே சிருஷ்டித்துச் சமாளித்து விட்டார்கள். இந்திய சர்க்கார் கஜானாவிலிருந்து கோடிக் கணக்கான தொகையை விழுங்கி வந்த உணவுப் பிரச்னையும் தீர்ந்து, சர்க்கார் பல்வேறு ஆக்கத் திட்டங்களிலும் கவனம் செலுத்தும் இச் சமயத்தில், வடக்கே வெள்ள விபத்து ஏற்பட்டிருப்பது பெரும் சோதனையே ஆகும். வெள்ளத்தில் கஷ்ட நஷ்டம் அடைந்தவர்களுக்கு அமெரிக்கா, பிரிட்டன், பர்மா முதலிய வெளி நாடுகளிலிருந்து கூட உதவி கிடைத்திருக்கிறது. எனவே, அவர்களுக்கு உதவி அளிக்கும் விஷயமாக இந்திய சர்க்கார் கைக் கொள்ளும் சகல முறைகளையும் பொது மக்கள் பூரண அநுதாபத்துடன் ஆதரித்து, பல விதத்திலும் உதவி புரிய முன் வருவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

இவ்விதம் வருஷந் தோறும் நதிகள் உடைத்துக் கொண்டு வெள்ளச் சேதம் ஏற்படுவதைத் தடுப்பதற்கான திட்டங்களைச் சர்க்கார் வகுத்து வருவதாக உள் நாட்டு மந்திரி டாக்டர் கட்ஜு பார்லிமெண்டில் அறிவித்துள்ளார். ஒரு தடவை ஏற்படும் வெள்ளத்தினால் மக்களுக்கு உண்டாகும் உயிர்ச் சேதத்தையும் மகத்தான பொருள் நஷ்டத்தையும் கவனிக்கும் போது, வெள்ளத் தடுப்புத் திட்டங்கள் எவ்வளவு அவசரமானவை என்பதைச் சொல்லத் தேவையில்லை.

‘இதோ இருக்கிறது வேலை!’

இந்தத் தலைப்பின் கீழ் சென்ற "கல்கி" இதழில் ஒரு கடிதம் வெளியாகியிருந்தது அல்லவா? மிகத் தொலைவில் உள்ள பீஜித் தீவிலிருந்து அன்பர் ஒருவர் அக்கடிதம் எழுதியிருந்தார். இந்தியாவில் டாக்டர்கள், என்ஜினியர்கள், சர்வேயர்கள், டிராப்ட்ஸ்மன் முதலியோர் வேலையில்லாமல் கஷ்டப்பட வேண்டியதில்லை. பீஜித் தீவில் அவர்கள் தேவையாக இருக்கிறார்கள். மற்றும் பூக்காரர், தகர வேலை செய்வோர், கல் தச்சர், வெண்கலம், ஈயம், பித்தளை செப்பு கன்னார்களும் பீஜித் தீவுக்குத் தேவை என்று குறிப்பிட்டிருந்தார். இந்தக் கடிதத்தைப் படித்த நேயர்கள் பலர் மேற்படி தீவில் கிடைக்கும் வேலைகளின் விஷயமாக மேலும் விவரங்கள் கேட்டு நமக்குக் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். நமது காரியாலயத்துக்கு நேரிலும் வந்து கேட்கிறார்கள்.

பீஜித் தீவில் தற்போது சுமார் இரண்டு லட்சம் இந்தியர்கள் வரையில் பல்வேறு தொழில்களிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். மேற்கொண்டு விவரம் அறிய விரும்பும் நேயர்கள் Sri Krishnamurthi, The Ramakrishna Library, P. B. No. 9, Nadi, Fiji Islands என்ற விலாசத்துக்கெழுதித் தெரிந்து கொள்ளும்படி கோருகிறோம். பீஜிக்கு எழுதுவோர் விமானத் தபாலுக்கு ரூ. 1—2—0ம் சாதாரண தபாலுக்கு 4 அணாவும் தபால் பில்லைகள் ஒட்ட வேண்டும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறோம்.


சௌந்தரியத்திற்கு
3 பெரிய
அழகுதரும்
சாதனங்கள்
வைஜயந்தி மாலா
கூறுகிறார்
"காமினியா அழகு சாதனங்கள் மிகவும்
பிரமாதமாக இருக்கின்றன. காமிரா விளக்
கெதிரில் நான் முழுதும் கடினமான
வேலைக்குப் பின்கூட, காமினியா
சாதனங்களை உபயோகிப்பதால்,
நான் பரிசுத்தத்துடன் குளுமை
யான உணர்ச்சியை அடைகிறேன்.
DIL BAHAR
தில் பஹார்
டாய்லெட் சோப்
காமினியா
ஹேர் ஆயில்
மென்மையாகவும் பட்டுப்
போன்ற கூந்தல் வளர ஆயி
ரக்கணக்காய் பெண்மணி
கள் இந்த தேர்ந்தெடுத்த பரி
மள எண்ணெயை உபயோக்
கின்றனர்.
KAMINIA OIL
காமினியா ஸ்னோ
இதன் மூலம் உங்கள் முகம் புது
மையான சோபையுடன் நாள் முழு
தும் விளங்குகிறது.
KAMINIA SNOW
ஆங்கிலோ இந்தியன் ட்ரக் &
கெமிகல் கம்பெனி
பம்பாய் 2.
மெம்பர் :- இந்தியன் சோப் & டாய்லெட்
தயாரிப்போர் அசோசியேஷன்.
சென்னை ராஜ்யத்துக்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள் : ஸ்ரீ சி. செங்கராஜுலு நாயுடு
9/1, கிராஸ்கட் ரோடு, கோயமுத்தூர்

பாரதத்தின் பெருந்தன்மை

கொழும்பு, ஆகஸ்டு மீ 28உ

இந்தியர்களின் விஷயத்தில் இலங்கை அரசாங்கம் எவ்வளவு படுமோசமாக நடந்து கொண்ட பொழுதிலும் அண்டை நாட்டிடம் ஆத்திர மூட்டப்படும் பொழுதும்கூட பாரதம் பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளுவதற்கு இவ்வாரம் இன்னொரு அற்புதமான உதாரணம் கிடைத்திருக்கிறது. இந்தியாவில் சுமார் 4,500 இலங்கை மாணவர்கள் பல்வேறு கலாசாலைகளிலும் உயர்தரக் கல்வி பயிலுகிறார்கள். இலங்கையிலோ ஏற்கனவே இங்கு வசித்து வரும் இந்தியர்களுடைய குழந்தைகளைக் கூட இலங்கைக்கு வந்து தகப்பன்மார்களுடனிருந்து கல்வி பயிலுவதை அநுமதிக்க இலங்கை அரசாங்கம் தயாராயில்லை. சமீபத்தில் இதைப் பற்றி ஒரு அங்கத்தினர் பார்லிமெண்டில் பிரஸ்தாபித்து இலங்கையைப்போல இந்தியாவும் பதிலுக்குப் பதில் செய்ய ஆரம்பித்தால் அங்கு கல்வி பயிலும் இலங்கை மாணவர்களின் கதி அதோகதி யாகி விடுமே யென்று கவலை தெரிவித்தார். இதற்குச் சர்க்கார் தரப்பில் பதிலளித்த பொழுது, இந்தியாவைப் போலில்லாமல் இலங்கையில் இலவசக் கல்வி அமுல் நடப்பதாயும் உலகிலுள்ள எல்லா மாணவர்களுக்கும் இலவசக் கல்வியளிக்கும் பொறுப்பை இலங்கை ஏற்றுக் கொள்ள முடியாதென்றும் ஒரு மந்திரி கூறி விட்டார்.

விரும்பினால் இலங்கையைப் போலவே இந்தியாவும் இலங்கை மாணவர்களுக்கு இந்தியாவில் விஸா வழங்க மறுக்கலாம். ஆனால் இதைச் செய்வதற்குப் பதிலாக, இந்தியாவில் மேலும் இலங்கை மாணவர்கள் அதிகமாக வந்து படிப்பதற்கு ஊக்கமளிப்பதுதான் தங்களுடைய கொள்கை யென்றும், ஆகையால் அவர்கள் விஷயத்தில் விஸா சட்ட திட்டங்களைச் சற்றே தளர்த்தி விட வேண்டு மென்றும் இந்திய அரசாங்கம் இங்குள்ள தனது ஹை கமிஷனருக்கு இவ்வாரம் ஒரு காகிது அனுப்பி யிருக்கிறது. தற்சமயம் மாணவர்களுக்கு இந்திய ஹைகமிஷன் மூன்று மாத காலத்துக்கு மட்டுமே விஸா வழங்குகிறது. இந்த விஸாவை, மாணவர்கள் இந்தியாவுக்குப் போன பிறகு புதுப்பித்துக் கொள்ள வேண்டு மென்பது ஏற்பாடு. விஸாவைப் புதுப்பிப்பதே மாணவர்களுக்குப் பெருங் கவலையாயுள்ள தென்றும், ஆகையால் அவர்கள் இந்தியாவில் படிக்க வேண்டிய காலம் முழுவதற்குமாகச் சுமார் நான்குவருடகாலத்துக்குத் தாற்காலிக வாச பர்மிட் வழங்க வேண்டுமென்றும் நேருஜியிடம் அவர்கள் முறையிட்டுக் கொண்டிருந்தார்கள். இதற்குப் பதிலளிக்கும் முறையிலேயே அவர்களிடம் தாராள மனப்பான்மை காட்ட இந்திய அரசாங்கம் இப்பொழுது தேவையான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

இன்னொரு முக்கியமான விஷயத்திலும் இந்திய அரசாங்கம் இலங்கைக்கு இவ்வாரம் சலுகை காட்டி யிருக்கிறது. இந்தியாவில் இந்தியர்கள் மட்டும்தான் எதையும் இறக்குமதி செய்யலாமென்பது இந்திய அரசாங்கத்தின் கொள்கை. இதற்கு மாறாக யாழ்ப்பாணத்திலுள்ள புகையிலைக் கூட்டுறவு விற்பனைச் சங்கம் திருவாங்கூரில் ஒரு கிளை ஸ்தாபனத்தை நிறுவிக்கொண்டு யாழ்ப்பாணம் புகையிலையைத் தானே இந்தியாவில் இறக்குமதி செய்து விற்று வந்தது. அதாவது இலங்கையிலிருந்து புகையிலையை ஏற்றுமதி செய்வதும் இந்தியாவில் அதை இறக்குமதி செய்து விற்பதும் ஒரே இலங்கையர் ஸ்தாபனமாகவே இருந்து வந்தது. இந்திய அரசாங்கத்தின் புதிய இறக்குமதிக் கொள்கை அமுலுக்கு வரவும் இந்த ஸ்தாபனம் இந்தியாவில் புகையிலையை இறக்குமதி செய்யமுடியாமல் போய்ப் பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள சுமார் 650 கண்டி புகையிலை இருப்பில் தங்கி விட்டது. யாழ்ப்பாணப் புகையிலைச் சங்கத்தினர் இந்திய அரசாங்கத்திடம் முறையிட்டுக் கொண்டதற்கிணங்க, இந்தக் கையிருப்புப் புகையிலையை மாத்திரம் இந்தியாவில் இறக்குமதி செய்து கொள்ள மேற்படி சங்கத்துக்கு டில்லி அரசாங்கம் விசேஷ லைசென்ஸ் வழங்கி யிருக்கிறது. வருங் காலத்திலும் இந்தியாவில் ஒரு இந்தியப் பிரஜையை இறக்குமதி ஏஜண்டாக நியமித்துக் கொண்டால் யாழ்ப்பாணப் புகையிலை வழக்கம் போல இறக்குமதியாகி வரத் தடையில்லை யென்றும் சொல்லியிருக்கிறது. ஆத்திர மூட்டப்படுகையிலும் அன்பு செலுத்தும் பண்பு காட்டுதல் காந்தியடிகளின் அஹிம்ஸா நெறியைக் கடைப்பிடிக்கும் இந்தியா ஒன்றினால்தான் இன்றைய உலகத்தில் சாத்தியம்!

துவேஷப் பிரசாரம் நிற்கவில்லை

இலங்கையில் இந்தியத் துவேஷத்தைக் கிளப்பி விட்டுக் கொண்டிருக்கும் மூச்சிங்கள முன்னணியின் விஷமப் பிரசாரங்கள் இப்பொழுது இந்திய சர்க்காருக்கும் கவலையைக் கொடுக்க ஆரம்பித்திருக்கிறது. இது சம்பந்தமாக இலங்கை அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை யெடுக்கு மென்று நம்புவதாக இந்திய உதவி வெளிநாட்டு மந்திரி ஸ்ரீ ஏ. கே. சந்தா இவ்வாரம் லோக் சபையில் தெரிவித்தார். ஆனால் துவேஷப் பிரசாரம் நாட்டில் தலை விரித்தாடுகையிலும் அதைத் தடுக்கக் கொத்தலாவலை மந்திரி சபை நடவடிக்கை எடுக்குமெனத் தோன்றவில்லை. அதற்கு மாறாக மூச்சிங்கள முன்னணியின் துவேஷப் பிரசாரங்களுக்கு ஆதரவு காட்டும் முறையில் "இந்தச் சங்கம் யாழ்ப்பாணத்தவர்களுக்கு விரோதமாகவா இயங்குகிறது? இந்தியர்களுக்கு விரோதமாகத் தானே!" என்று பிரதமர் ஸர் ஜான் சமீபத்தில் பார்லிமெண்டில் சொல்லியது அவருடைய மனோபாவத்தைப் பிரதிபலிப்பதாக உள்ளது.

வெளியேற்றும் படலம்

இலங்கை அரசாங்கம் தன்னுடைய நாடு கடத்தும் திட்டத்தின் கீழ் 5000 இந்தியர்களுக்கு இவ்வாரம் நோட்டீஸ் கொடுக்க ஆரம்பித்து விட்டது. நவம்பர் 30ம் தேதிக்குள் இலங்கையை விட்டு வெளியேறிவிட வேண்டு மென்று இவர்கள் கோரப்பட்டிருக்கிறார்கள். போகும்பொழுது இவர்கள் தங்களுடைய சேமிப்பு முழுவதையும் எடுத்துச் செல்லலாமென்பது ஏற்பாடு. ஆனால் இந்தச் சேமிப்புகளை எடுத்துச் செல்லப் பர்மிட்டுகளை வழங்க, செலாவணிக் கட்டுப்பாடு இலாகா அவசியமற்ற கேள்விகளை யெல்லாம் கேட்டுக் கஷ்டப்படுத்துவதாயும் அடியோடு இந்தியாவுக்குப் போகிறவர்களுக்கு அரசாங்கம் பெரிய மனசு வைத்துத் தாராளமாக நடக்காவிட்டால் சம்பாத்தியத்தில் ஒரு பகுதியைத் திரஸ்கரித்து விட்டுப் போக நேரிடுமென்றும் அஞ்சப்படுகிறது. இது சம்பந்தமாக இலங்கை இந்திய வர்த்தகச் சங்கம் அரசாங்கத்தினிடம் முறையிட்டுக் கொள்ள உத்தேசித்திருக்கிறது. — ரஜனி.

உங்கள் பற்களுக்கும் ஈறுகளுக்கும் ஏற்றது



நீம் டூத் பேஸ்ட்

இயற்கையான க்ளோரபிலுடன் கெடுதலை எதிர்க்கும் சக்தி, பூச்சியை அழிக்கும் வன்மை மற்றும் அழிவுச் சக்திகளை ஒழிக்கும் தன்மையைப் பெற்றிருப்பதுடன் பல் வைத்தியம் சம்பந்தப்பட்ட நூதன முறை ஆரோக்கிய விதிகளையும்கொண்டது.

பெரிய சைஸ்களிலும் கிடைக்கும்.



மார்கோப்ரைஸ்
பற்பொடியை விரும்புகிறவர்களுக்கு இது ஏற்றது. நீம் பற்பசையில் இருப்பவை இதிலும் உள்ளன.

CALCHEMICO PRODUCTS


தென் இந்தியா ஆபீஸ்:
5/149, பிராட்வே, மதராஸ்-1



டயபெப்ஸின்
அவளது நீண்ட நாள் அஜீரணக் கோளாறுகளை நீக்கியது

யூனியன் டிரக் கம்பெனி லிமிடெட்
மதராஸ் டிப்போ: 2, ஜோன்ஸ்லேன், மதராஸ்-1






ஜி.ஜி

மிஸ்கி பட்டணம் பெருங்காயம்
கோபால்ஜி & கோ.
பம்பாய் - 3

தென் இந்தியாவில் டிஸ்ட்ரிபூட்டர்கள்:
கோபால்ஜி அண்டு கம்பெனி
203, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை-1



காலிகோ ஷர்ட்டிங்கள்

காலிகோ மில்ஸ், அஹமதாபாத்

1880லிருந்து உயர்ந்த துணி தயாரிப்பவர்கள்.

TAM _ SHILPI-CA-118


அமரதாரா
கல்கி
மணியம்
முதல் பாகம்
இந்துமதியின் கதை

அமர தாரா



முதல் அத்தியாயம்

சுய சரிதம்

உலகம் போற்றுகிற மகான்களும் தேசத் தலைவர்களும் பிரமுகர்களும் தங்கள் வாழ்க்கை வரலாறுகளை எழுதியிருக்கிறார்கள். அவர்கள் எழுதிய சுய சரிதங்களைப் படித்துப் பல்லாயிரக் கணக்கான மக்கள் பலன் அடைந்திருக்கிறார்கள். அச் சரிதங்கள் மற்றவர்களுக்கு உயர்ந்த வாழ்க்கை இலட்சியங்களை அளிக்கின்றன. அந்தச் சரிதங்களைப் படிக்கும் வாசகர்கள் தங்களுடைய சொந்த வாழ்க்கையில் ஏற்படும் சோதனைகளைச் சமாளிப்பதற்கு உதவுகின்றன; இன்னல்களுடன் எதிர்த்துப் போராட ஊக்கமும் மனோ திடமும் தருகின்றன; தர்ம சங்கடங்களிலிருந்து விடுதலை பெறுவதற்கு உதாரணங்களாகப் பயன்படுகின்றன; வாழ்க்கையில் எதிர்பாராத வசதிகளும் வெற்றிகளும் கிட்டும் போது அவற்றை அடக்கத்துடன் அநுபவிக்கத் துணை செய்கின்றன. பெரியோர்களின் சுய சரிதங்களைப் படித்து அவ்வாறு நானும் மிக்க பயன் அடைந்திருக்கிறேன்.

ஆனால் நான் எதற்காக என் கதையை எழுதத் தொடங்குகிறேன்? இதனால் யாருக்கு என்ன உபயோகம்? என் வாழ்க்கை மற்றவர்களுக்கு உதாரணமாகப் பயன்படக் கூடியதன்று; என்னுடைய நடத்தை பிறர் பின்பற்றக் கூடியதன்று; நான் இந்த உலக வாழ்க்கையில் பெற்ற பெருமிதமான வெற்றிகளை மற்றவர்கள் விரும்ப மாட்டார்கள்; நான் அடைந்த துன்பங்களைப் படித்து ஒருவேளை பரிதாபப் படுவார்கள். "இம் மாதிரி புகழும் பணமும் பதவியும் நமக்கு வேண்டாம்! இத்தகைய அதோகதியும் நமக்கு நேர வேண்டாம்!" என்றுதான் பெரும்பாலோர் எண்ணுவார்கள்.

பின் நான் என்னுடைய சுய சரிதத்தை ஏன் எழுதுகிறேன்?—இதைப் பற்றிப் பலமுறை யோசித்துப் பார்த்த பிறகு தான் எழுதத் தொடங்கியிருக்கிறேன். எதற்காக? யாருடைய நன்மைக்காக இதை எழுதுகிறேன்?,

வேறு யாருடைய நன்மைக்காகவும் இல்லை; என்னுடைய சொந்த நன்மைக்காகவேதான் எழுதுகிறேன்.

பெரிய இந்தச் சிறைச்சாலையில் ஒரு தனி அறையில் என்னை வைத்திருக்கிறார்கள். வாழ்வுக்கும் மரணத்துக்கும் இடையில் என் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. ஆம்; மரண தண்டனை விதிக்கப்பட்டவள் நான். தண்டனை நிறைவேற்றப்படும் நாளை ஆர்வத்துடன் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறேன். இவ்வளவு அபகீர்த்திக்கும் அவமானத்துக்கும் ஆளான பிறகு உயிரோடிருக்க யார்தான் விரும்புவார்கள்? அதனால்தான் வழக்கில் வாக்குமூலம் கொடுக்கவும் எதிர் வாதம் செய்யவும் முதலில் மறுத்து விட்டேன். பின்னால் ஏதோ அவருடைய பிடிவாதத்துக்காக நான் 'குற்றமற்றவள்' என்று சொல்லிப் பார்த்தேன். என் பேச்சு நம்பிக்கை தரத்தக்கதா யில்லை என்று விசாரணை செய்த நியாயாதிபதி சொல்லி விட்டார். தீர்ப்பும் அளித்து விட்டார். மிக்க நல்லதாய்ப் போயிற்று என்று எண்ணினேன். என் துயரங்களுக்கெல்லாம் விரைவில் ஒரு முடிவு வந்துவிடும் என்று ஆசையுடன் எதிர்பார்த்தேன்.

ஆனால் இந்தத் துர்ப்பாக்கியவதியின் துன்பங்கள் அவ்வளவு விரைவில் முடிந்து விடுமா? மேலே 'அப்பீல்' செய்யப் போகிறார்களாம். அதற்குப் பிறகு 'கருணை விண்ணப்பம்' கொடுக்கப் போகிறார்களாம். கவர்னர் பார்த்து, கருணை காட்டலாம் என்று நினைத்தால், மரண தண்டனையை ரத்து செய்து ஆயுள் சிறைவாசமாக மாற்றலாமாம்!

எத்தனைதான் நான் துர்ப்பாக்கியசாலியானாலும், அவ்வளவு பெரிய கொடுந் தண்டனை எனக்கு வராது என்று நம்புகிறேன். அதாவது சிறையிலேயே என் ஆயுள் முழுவதையும் கழிக்க வேண்டிய துர்க்கதி எனக்கு ஏற்படாது என்று நம்புகிறேன். அதற்கு முன்னால் ஆண்டவன் தன் பாதார விந்தத்தில் என்னைச் சேர்த்துக் கொண்டு என் துன்பங்களுக்கு முடிவு அளிப்பார். எப்படியாவது இந்த உயிரைக் காப்பாற்றிக் கொண்டு வாழ்ந்திருந்தால் போதும் என்ற ஆசை எனக்குச் சற்றும் இல்லை.

எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் நான் கடவுளிடம் பக்தி கொண்டவள். கடவுளின் கருணையை நம்பியே என் வாழ்க்கையை நடத்தி வந்தேன். வெற்றிக்கு மேல் வெற்றியும் செல்வத்துக்கு மேல் செல்வமும் புகழுக்கு மேல் புகழும் வந்து கொண்டிருந்த போதெல்லாம் நான் கர்வம் அடையவில்லை; என்னுடைய சாமர்த்தியத்தினால் இவ்வளவும் கிடைத்ததாகவும் எண்ணவில்லை. "எல்லாம் ஆண்டவனுடைய கருணை" என்றுதான் எண்ணியிருந்தேன்.

துன்பத்துக்கு மேல் துன்பமாகத் தொடர்ந்து அதோகதியான நிலையை அடைந்த போதும், நான் கடவுள் நம்பிக்கையை இழக்கவில்லை. இந்த ஜன்மத்தில் நான் அறிந்து பெரும் பாவம் எதுவும் செய்யவில்லையாதலால், சென்ற பிறவிகளில் செய்த பாவத்தின் பயனை இப்போது அநுபவிப்பதாகவே எண்ணினேன். "இந்தத் துன்பம், அவமானம் எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ளும் சக்தியை அளிப்பாய், கருணைக் கடலே!" என்று தான் கடவுளைப் பிரார்த்தித்தேன்.

இப்போது அதே இறைவனிடம் "பட முடியாது இனித் துயரம்; பட்டதெல்லாம் போதும், பகவானே! என்னை விரைவிலே உன்னுடைய பாத கமலங்களில் சேர்த்துக் கொள்வாய்!" என்று பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன்.

எவ்வளவோ கொடிய நோய்களுக்கு உள்ளானவர்களும், வறுமையினால் பீடிக்கப் பட்டவர்களும், சொல்ல முடியாத துன்பங்களுக்குள்ளானவர்களும் இந்த உலகத்தில் வாழ்ந்திருக்க விரும்புவதை நான் கண்டிருக்கிறேன். அப்படியிருக்கும் போது, நான் மட்டும் மரணத்தை விரும்புவது ஏன்? அவர்களெல்லாம் பிற்காலத்தில் தங்களுடைய துன்பங்கள் தீர்ந்து நல்ல காலம் பிறக்கும் என்ற நம்பிக்கைகொண்டவர்களாயிருக்கலாம்.

ஆனால் எனக்கு அத்தகைய நம்பிக்கை எதுவும் இல்லை; நம்பிக்கை கொள்வதற்கு இடமும் இல்லை.

உண்மையில், என் வாழ்க்கை நீடிப்பதால், மரணத்தைக் காட்டிலும் மிகக் கொடிய வேறொரு பெருந் துன்பம் எனக்கு நேரிடலாம் என்று அஞ்சுகிறேன். என் அறிவை அடியோடு இழந்து விடுவேனோ, பைத்தியம் பிடித்து விடுமோ என்று பயப்படுகிறேன். பைத்தியக்காரர்களை அடைத்து வைத்திருக்கும் வைத்தியசாலைக்கு என் தொழில் சம்பந்தமாக ஒரு முறை போகும்படி நேர்ந்தது. அங்கேயுள்ள ஸ்திரீ புருஷர்களை நான் பார்த்திருக்கிறேனாதலால், "இறைவா! எனக்கு வேறு எந்தத் தண்டனை விதித்தாலும் ஒப்புக் கொள்கிறேன்; இந்தத் தண்டனை மட்டும் விதிக்க வேண்டாம்!" என்று பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன்.

சென்று போனதையெல்லாம் நினைத்து நினைத்து என் உள்ளம் ஏற்கனவே குழம்பிக் கொண்டிருக்கிறது. போதாததற்கு, இப்போதெல்லாம் "எனக்குப் பைத்தியம் பிடித்து விடுமோ?" என்ற எண்ணம் அடிக்கடி தோன்றிக் கொண்டிருக்கிறது. இந்த அச்சமே அத்தகைய நிலையை நான் அடைவதற்கு ஏதுவாகி விடுமோ என்று பயப்படுகிறேன்.

மரண தண்டனையைக் காட்டிலும், ஆயுள் சிறைவாசத்தைக் காட்டிலும் கொடிய கதி எனக்கு நேராமலிருப்பதற்காகத் தான் என் கதையை எழுதத் தொடங்குகிறேன். இங்கு வெறுமனே உட்கார்ந்து உட்கார்ந்து உட்


MDT 7081

கார்ந்து, இந்தச் சிறிய அறைக்குள்ளே நடந்து நடந்து நடந்து, வாழ்க்கையில் நடந்துபோனவற்றைக் குறித்து நினைந்து நினைந்து நினைந்து, ஒவ்வொரு வினாடியும் ஒவ்வொரு யுகமாகப் போய்க் கொண்டிருக்கிறது.

ஒரு நாளைக்கு இருபத்து நாலு மணி நேரம் இருப்பது போதாது என்று நான் எண்ணிய காலம் உண்டு. அந்த இருபத்து நாலு மணி நேரத்தில் ஒரு மணி நேரங்கூட எனக்கு என்று கிடைப்பது அரிதாயிருந்ததுண்டு; தூங்குவதற்கு ஒரு தினத்தில் மூன்று மணி நேரம்கூடக் கிடைக்காமலிருந்ததும் உண்டு.

தற்போது ஒரு நாளின் இருபத்து நாலு மணி நேரமும் என்னுடையதாயிருக்கிறது. இவ்வளவு நேரத்தையும் என்ன செய்வதென்று தெரியவில்லை. கண்களைச் சுழற்றிக் கொண்டு தூக்கம் வந்த நாட்களில் தூங்குவதற்கு நேரம் கிடைக்கவில்லை; இப்போது இருபத்து நாலு மணி நேரமும் என்னுடையதாயிருக்கும்போது, தூக்கம் வருவதில்லை!

நாடக மேடையிலும், வெள்ளித் திரையிலும், பத்திரிகையிலும், புத்தகத்திலும், சிநேகிதர்களின் சாதாரண சம்பாஷணைகளிலும் கூடச் "சிந்தியுங்கள்!" "சிந்தியுங்கள்!" என்று பலரும் சொல்லுவதைக் கேட்டிருக்கிறேன். ஆயிரம் தடவை அந்தச் சொல்லை நானே உபயோகித்திருக்கிறேன்.

இப்போது சிந்திப்பதற்கு வேண்டிய நேரம் இருக்கிறது; வசதி இருக்கிறது;



சிந்திப்பதைத் தவிர வேறு ஒன்றும் நான் செய்வதற்கில்லாமலிருக்கிறது. சிந்தித்துச் சிந்தித்து என் மூளை குழம்பி விடும் போலிருக்கிறது. அந்த துர்க்கதி எனக்கு நேராமலிருக்கும் பொருட்டே என் வரலாற்றை எழுதத் தொடங்குகிறேன்.

அவரும் என்னிடம் என் சொந்தக் கதையை எழுதும்படி வற்புறுத்திச் சொன்னபோது, இந்தக் காரணத்தையே முக்கியமாகக் கூறினார்.

"இந்தத் தனி அறையில் உட்கார்ந்து சிந்தித்துச் சிந்தித்து என் மூளை குழம்பி விடும் போலிருக்கிறது!" என்று ஒரு நாள் ரங்கதுரையிடம் கூறினேன்.

அதை அவர் பிடித்துக் கொண்டார். "அதற்காகத்தான் உனது வரலாற்றை



எழுது என்று சொல்லுகிறேன். ஒன்று கூட விடாமல் உள்ளது உள்ளபடி, நடந்தது நடந்தபடி, எழுத வேண்டும். முதலிலிருந்து ஒழுங்காக எழுதுவது என்று ஆரம்பித்தால், இப்போது ஞாபகத்தில் இல்லாததெல்லாம் ஞாபகத்துக்கு வரும் என்னுடைய சொந்த அநுபவத்திலிருந்து இதைச் சொல்கிறேன்!" என்றார்.

மேலும் அவர், "எழுதும்போது உன் கரம் வேலை செய்யும். அறிவும் தெளிவாக இருக்கும். பொழுது போவதே தெரியாமல் போய் விடும். ஒரு நிமிஷம் ஒரு யுகமாகப் போவதற்குப் பதிலாக, ஒரு நாள் ஒரு நிமிஷமாகப் போய்விடும்! உன் கதையை உள்ளது உள்ளபடி எழுதிக் கொடுத்தாயானால், என்னுடைய முயற்சிக்கும் அது உபயோகமா யிருக்கலாம். உன்னுடைய நடத்தையில் எனக்குப் புரியாமலிருந்த சில காரியங்களைப் புரிந்து கொள்வேன். அதனால் எனக்கு மன நிம்மதி உண்டாகும்! எனக்காக வேனும் எழுத மாட்டாயா?" என்று கேட்டுக் கொண்டார்.

ஆம்; அவருடைய மன நிம்மதி குலைவதற்கு நான் பெரிதும் காரணமா யிருந்திருக்கிறேன். அவருடைய காரியங்கள் புரியாத காரணத்தினால் அவருக்கு மிக்க துன்பம் அளித்திருக்கிறேன். அவரால் நான் அதிக கஷ்டங்களை அடைந்திருக்கிறேன். அவருடைய மனத்தைத் தெரிந்து கொள்ளாதபடியினால், அவரையும் துன்பத்துக்கு ஆளாக்கி நானும் துன்பப்பட்டிருக்கிறேன். அவரைப் பற்றித் தப்பாக எண்ணி, அதனால் அவரை அலட்சியம் செய்து புறக்கணித்து, அவருக்கு என் மீது வெறுப்பு உண்டாக்கி வளர்த்து வந்திருக்கிறேன். அந்த நடத்தைக்கெல்லாம் பிராயச் சித்தமாக இப்போதாவது அவருடைய விருப்பத்தை நிறைவேற்ற விரும்புகிறேன்.

ரங்கதுரையின் முயற்சிக்கு நான் எழுதுவது உதவியா யிருக்கக் கூடும் என்று அவர் நம்புகிறார். வழக்கு நடந்த போது நான் அவருடன் ஒத்துழைக்க மறுத்தேன். நன்றாகத் தெரிந்தவற்றையே சரியாகச் சொல்லவில்லை. ஞாபகப்படுத்திக் கொண்டு சொல்லும்படி அடிக்கடி அவர் வற்புறுத்திக் கேட்டார். பெரும்பாலும் மௌனம் சாதித்தேன்; அல்லது வாழ்க்கையில் என் வெறுப்பைக் காட்டிப் பதில் சொன்னேன். உயிர் வாழ்வதில் எனக்கு ஆசை இருக்கவில்லை; இப்போது நேர்ந்து விட்டதைக் காட்டிலும் வேறு என்ன பெரிய கேடு வந்து விடப் போகிறது என்கிற மனப் போக்கில் அலட்சியமாகப் பதில் சொன்னேன். இதனாலெல்லாம் அவருக்குப் பெரிதும் மனவருத்தத்தை அளித்தேன்.

இப்போதாவது நான் முன்னே நடந்தது எல்லாவற்றையும் நினைத்துப் பார்த்துக் கொண்டு முறையாகக் கதை போல் எழுதினால், அது என் உயிரைக் காப்பாற்றுவதற்கு உதவியா யிருக்கலாம் என்று அவர் ஆசைப்படுகிறார். எனக்கு அந்த ஆசையும் இல்லை; நம்பிக்கையும் இல்லை.

ஆனால் அவருடன் ஒத்துழைக்க மறுத்தபடியால் அவர் மனத்தை எவ்வளவு புண்படுத்தி யிருக்கிறேன் என்பதை இப்போது உணர்கிறேன். அது எவ்வளவு பெரிய குற்றம் என்பதையும் உணர்

கிறேன். என் பேரில் சுமத்தியிருக்கும் குற்றங்கள் எதையும் உண்மையில் நான் செய்யவில்லை. அவருடைய மனம் நோகச் செய்தது ஒன்றுதான் என்னுடைய பெருங் குற்றம். அதற்குப் பரிகாரமாக இப்போதாவது அவருடைய விருப்பத்தை நிறைவேற்ற எண்ணுகிறேன். என்னுடைய சுய சரிதத்தை நான் எழுதத் தொடங்குவதற்கு அது ஒரு முக்கிய காரணம்.

அவர் என் மீது வைத்திருக்கும் அன்பு எவ்வளவு அதிசயமானது என்பதைச் சமீபத்திலேயே நான் உணர்ந்து கொண்டேன். அவர் வகித்திருந்த பெரிய பதவியை எனக்காக விட்டு விட்டிருக்கிறார். நான் படித்திருக்கும் கதைகளிலும், நடித்திருக்கும் கதைகளிலுங்கூட இம்மாதிரி அதிசயமான அன்புக்கு உதாரணம் கண்டதில்லை. ரங்க துரையின் உள்ளத்தை நான் முன்னமே அறிந்து கொள்ளாமல் அவரைத் துன்பப் படுத்தினேன். அவர் மீது அன்பில்லாதவள் போலவும், வெறுப்புக் கொண்டவள் போலவும் நடந்து கொண்டேன். 'நடித்தேன்' என்று சொன்னாலும் தவறில்லை.

இவ்வளவையும் பொறுத்துக் கொண்டு நிலைத்திருக்கிறது அவருடைய அன்பு. அந்த அன்பின் பெருமையை என்னவென்று சொல்ல முடியும்?

அப்படிப்பட்ட தெய்வீகமான அன்புக்குப் பிரதியாக நான் இந்த வாழ்க்கையில் இனிச் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. இந்த உடம்பில் கடைசி மூச்சு இருக்கும் வரையில் அவருடைய நல்வாழ்வுக்காகப் பிரார்த்தித்துக் கொண்டிருப்பேன்.

என் உள்ளத்தை அவருக்குத் திறந்து காட்டுவேன். எவ்வளவோ பெருமைகளிலும் சிறுமைகளிலும் அவரிடம் நான் கொண்ட நேயத்தை மறந்ததில்லை என்று தெரிவிப்பேன். நான் மறக்க முயன்றும் என் நெஞ்சம் மறக்கவில்லையென்பதை எடுத்துக் கூறுவேன். அவரைப் பற்றி நான் தப்பபிப்பிராயம் கொண்டது எப்படி என்பதையும் தெளிவுபடுத்துவேன். அவரிடம் நான் அலட்சியமாகப் பேசியதெல்லாம் ஆத்திரத்துடன் கூடிய நடிப்பு என்பதை விளக்குவேன்.

இதையெல்லாம் அவரிடம் நேரில் சொல்ல முடியாது. அரங்க மேடையிலோ, வெள்ளித் திரையிலோ, எழுதிக் கொடுத்ததை நெட்டுருச் செய்துகொண்டு வந்து பாடம் ஒப்புவிக்கும் காரியம் அல்ல. மனத்திற்குள் 'இவன் நம்மை நெருங்கி வருகிறானே?' என்ற அருவருப்புடன், நாவினால் அன்பு மொழி பேசும் காரியம் அல்ல. நெஞ்சிலே குரோதத்துடன் கண்ணினால் காதலாகிக் கசிந்துருகுவதுபோல் பாவனை செய்வது அல்ல.

உள்ளத்தில் உண்மையான அன்பு குடிகொண்டிருக்கும் போது, அதை வாயினால் வெளியிட்டுச் சொல்வது சுலபமான காரியம் அன்று. அதிலும் என்னுடைய நிலையில் அது அசாத்தியம். நாடக மேடையிலும், படம் பிடிக்கும் இடங்களிலும் பல பேருக்கு முன்னிலையில் காதலைப் பற்றிப் பேசலாம்; நெஞ்சில் குடிகொண்ட நேயத்தைப் பற்றிப் பிரசங்கமும் செய்யலாம். ஆனால் இங்கே, பக்கத்தில் ஒருவர் இருந்தாலும், நெஞ்சில் உள்ளது நாவில் வருவதில்லை.

ஆகையினால்தான், என் வரலாற்றை எழுத ஆரம்பிக்கிறேன். இதை அவர் ஒருவர் படிப்பதற்காகவே முக்கியமாக எழுதுகிறேன். இன்னும் என் பேரில் அபிமானம் உடையவர்களும், இத்தனை துர்ப்பாக்கியம், அவமானம், அபகீர்த்திகளுக்கு மத்தியில் என் பேரில் அன்பு குன்றாமலிருக்கும் சில சிநேகிதர்களும் இதைப் படித்து, நான் குற்றமற்றவள் என்பதை உணர்ந்து கொண்டால், திருப்தி அடைவேன்.

இதன் மூலம் ரங்கதுரை என் நெஞ்சின் உண்மை நிலையைத் தெரிந்து கொண்டால் இன்னும் அதிகத் திருப்தி கொள்வேன்.

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் எங்கள் அழகிய ஊருக்கு அருகில் புன்னை மரத்தினடியில் அவரைக் கண்டவுடன் நெகிழ்ந்த என் நெஞ்சம் இன்னமும் அவர் விஷயத்தில் அணுவளவும் மாறவில்லை, எந்தச் சந்தர்ப்பத்திலும் மாறவில்லை என்பதை இதைப் படிக்கும் போது அவர் உணர்ந்து கொள்வார்.

அன்று அவர் என் முன்னால் நின்ற தோற்றமும், பார்த்த பார்வையும், முதன் முதலாக மௌனம் கலைந்து அவர் சொன்ன சொற்களும் இன்னமும் அப்படியே என் மனத் திரையில் பதிந்திருக்கின்றன. நேற்று நடந்ததைப்போல் அவை என் நினைவுக்கு வருகின்றன.

புன்னை மரத்தடியில் உதிர்ந்து கிடந்த இனிய மணம் பொருந்திய மலர்களைப் பொறுக்கினேன். அவற்றை மடியில் கட்டிக்கொண்டு, பூவும் மொட்டும் இளந்தளிர்களுமாக இருந்த ஒரு சிறிய கிளை

நுனியை ஒடித்துக் கையில் வைத்துக் கொண்டேன். தாழ்ந்து தழைத்திருந்த புன்னை மரத்தின் அடிக் கிளை ஒன்றை ஒரு கையினால் பிடித்துக் கொண்டு, இன்னொரு கையில் அந்தப் பூங்கிளைக் கொத்தை வைத்துக் கொண்டு, அந்தப் பூங்கொத்தின் அழகைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது திடீரென்று அவர் என் முன்னால் தோன்றினார். சற்று நேரம் மேலும் கீழும் என்னை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர்தான் முதலில் பேசட்டுமே என்று நான் பேசாமல் நின்றபடியே நின்றேன். ஆனால் அவர் பேசுவதாகத் தோன்றவில்லை. நான் பொறுமை இழந்து "ஏன் இப்படி உற்றுப் பார்த்துக் கொண்டு நிற்கிறீர்கள்? பேசத் தெரியாதா? நீங்கள் ஊமையா?" என்று கேட்டேன்.

உடனே அவர் மிக்க அதிசயம் அடைந்தவர்போல் தம்முடைய கண்ணிமைகளை அகல விரித்துப் பார்த்தார். "ஓ! பேசும் பெண்மணிதானா நீ? அஜந்தாச் சித்திரம் என்றல்லவோ நினைத்தேன்!" என்று கூறிக் குறுநகை புரிந்தார்.

அச் சமயம் 'அஜந்தா சித்திரம்' என்றால் என்னவென்று எனக்குத் தெரிந்திருக்கவில்லை. அவரைக் கேட்கவும் நான் விரும்பவில்லை. வீட்டுக்குப் போன பிறகு, என் தந்தையைக் கேட்டுத்தான் 'அஜந்தா சித்திர'த்தின் அதிசயங்களைப் பற்றித் தெரிந்து கொண்டேன்.

என் தந்தை! அவரை எண்ணும் போது என் கண்களில் நீர் ததும்புகிறது. இறைவா! அவரை நீ அருள் கூர்ந்து உன்னிடம் அழைத்துக் கொண்டு விட்டாய்! அவர் தமது உயிரைக் காட்டிலும் அருமையாக வளர்த்த செல்வக் குமாரி இந்தக் கதியை அடைந்திருப்பதைப் பார்த்தால் என்ன பாடு படுவார்? எப்படித் துடிதுடிப்பார்! இதையெல்லாம் அவர் பார்க்காத வண்ணம் அவரை உன்னுடைய கமல சரணங்களில் ஏற்றுக் கொண்டு விட்டாய்! உன் கருணையைப் போற்றுகிறேன்!

இரண்டாம் அத்தியாயம்

என் தந்தையர்

மேலே 'என் தந்தை' என்று குறிப்பிட்டிருக்கிறேன் அல்லவா? என்னை வளர்த்த தந்தையைப் பற்றித்தான் சொல்லியிருக்கிறேன். குங்குமத்துறைப் பண்ணையார் மந்திரமூர்த்தி என்பவர் என்னை வளர்த்த தந்தை. எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து அவரைத் தான் "அப்பா!" என்று அழைத்து எனக்குப் பழக்கம்.

என்னைப் பெற்ற தந்தையைப் பற்றி அதிகமாக எனக்குத் தெரியாது. நான் சிறு குழந்தையாயிருந்த போது என்னைப் பார்க்க அவர் சில சமயம் வருவது வழக்கமாம். ஆனால் ஒரே தடவை அவரைப் பார்த்தது மட்டுமே எனக்கு ஞாபகம் இருக்கிறது. அதுவும் ஏதோ கனவிலே கண்டது போல் மங்கிய தோற்றமாகக் காணப்படுகிறது. அது என் நாலாவது பிராயத்தில் நடந்தது என்று பின்னால் விசாரித்துத் தெரிந்து கொண்டேன்.

ஒரு நாள் இரவு தூங்கிக் கொண்டிருந்த என்னை அப்பா அன்புடன் தட்டி எழுப்பினார். நான் கண்ணைக் கசக்கிக் கொண்டு எழுந்தேன். "என்ன, அப்பா?" என்றேன். அருகில் படுத்திருந்த அம்மாவைக் காணோம். "அம்மா எங்கே?" என்று கேட்டேன். "இந்து! உன்னையும் அம்மாவையும் பார்ப்பதற்கு ஒருவர் வந்திருக்கிறார்! சற்று எழுந்து வா! அவரைப் பார்த்து விட்டு வந்து மறுபடியும் தூங்கலாம்!" என்றார்.

"இப்போது என்ன அவசரம்? இராத்திரி நேரந்தானா அவருக்கு அகப்பட்டது? நாளைக்குப் பார்த்துக் கொள்ளக் கூடாதா?" என்றேன்.

அப்பா அதற்குப் பதில் சொல்லாமல், தூக்கக் கலக்கத்தோடு என்னை அடுத்த அறைக்கு அழைத்துக்கொண்டு போனார்.

அங்கே என் தாயார் கண்களில் கண்ணீர் ததும்பிக் கொண்டிருப்பதைக் கண்டேன். எதிரில் ஒரு புதிய மனிதர் இருந்தார். ஏனோ, அவரைப் பார்க்கவே எனக்கு அச்சமாக இருந்தது. நான் அம்மாவிடம் ஓடி அவளைக் கட்டிக் கொண்டு, "அம்மா! ஏன் அழுகிறாய்? இவர் யார்?" என்று கேட்டேன்.

அம்மா கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "கண்ணே, இவர்தானடி உன் அப்பா!" என்றாள்.

"ஒன்றுமில்லை! என் அப்பா இதோ இருக்கிறாரே!" என்று சொல்லிக் கொண்டே அம்மாவிடமிருந்து ஓடிப் போய் அப்பாவைக் கட்டிக்கொண்டேன்.

தேசீய திட்டக் கடனுக்கு

தாராளமாக உதவுங்கள்

அந்தக் கடன்

★ தேசீயப் புனர் நிர்மாண சேவைக்கு அர்ப்பணமாகிறது

★ தேசத்தின் வருங்கால சுபிட்சத்திற்கு நம்பிக்கை அளிக்கிறது

★ தேசத்தின் விதியில் பொதுவான நம்பிக்கையைப் பிரசாரப்படுத்துகிறது

ஞாபகமிருக்கட்டும்

செப்டம்பர் 16ம் தேதியோடு இக்கடனுக்காக பணம் ஏற்றுக் கொள்வது நிறுத்தப்படும்.

இந்தியாவின் வருங்கால சுபிட்சத்திற்கு முதலீடு செய்யுங்கள்

AC 582

என் அன்னையின் கண்களில் மறுபடி யும் கண்ணீர் பெருகியது.

"கண்ணே! நானும் உன் அப்பா! அவரும் உன் அப்பாதான்!" என்றார், என் தந்தை யென்று நான் அதுவரையில் எண்ணிக் கொண்டிருந்தவர்.

"அது எப்படி? எல்லாப் பெண் களுக்கும் ஒரு அப்பாதானே? எனக்கு மட்டும் இரண்டு அப்பாவா?" என்றேன்.

அம்மா "இங்கே வாடி, கண்ணே! உன் அப்பா உனக்குப் பட்டுச் சொக் காய், விளையாட்டுச் சாமான் எல்லாம் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறார்! வந்து பார்!" என்றாள்.

புதிய மனிதருக்கு முன்னால், புதுப் புடவை, சொக்காய்த் துணி, விளையாட் டுக் கருவிகள் எல்லாம் கிடப்பதைக் கவனித்தேன்.

ஆனாலும் அவரிடம் அணுகுவதற்கு எனக்கு அச்சமாகவே இருந்தது. அம்மா விடம் மறுபடி சென்று, "நீ ஏன் அம்மா, அழுகிறாய்? உன்னை இவர் அடித்தாரா?" என்று கேட்டேன்.

இந்த என் வார்த்தைகள் அந்தப் புது மனிதருக்கு மிக்க ஆத்திரத்தை உண் டாக்கி விட்டன.

"பார்! உன் கண்ணீரால் வந்த வினையை! நான் பெற்ற மகள் என்னைக் கண்டு மிரளும்படி செய்து விட்டாயல் லவா?" என்று கோபக் குரலில் கூறினார்.

அப்போது அவரை நான் நன்றாக உற்றுப் பார்த்தேன். அவ்வளவாக அவரைக் கண்டு பயப்பட வேண்டிய தில்லை யென்று தோன்றியது. உண்மை யாகவே இவர் என்னைப் பெற்ற தந்தை தானா என்று என் குழந்தை உள்ளம் வியப்படைந்திருக்கலாம்.

அவர் கடுமையான குரலில் பேசிய தற்கு என் தாயார், "ஆமாம்; என் பேரில்தான் குற்றம்! பெற்ற குழந்தைக் குத் தகப்பனாரின் முக அடையாளங் கூடத் தெரியாதபடி நீங்கள் செய்து வருவது குற்றமில்லை! நான் கண்ணீர் விட்டதுதான் குற்றம்!" என்றாள்.

பிறகு, என்னைக் கட்டித் தழுவிக் கொண்டு "இந்து! இவர் என்னை அடிக்க வில்லை! அடித்ததற்காக நான் அழவும் இல்லை. என்னையும் உன்னையும் இவரோடு அழைத்துப் போகும்படி சொல்லுகிறேன். இவர் மாட்டேன் என் கிறார். அதற்காகத்தான் அழுதேன்!" என்றாள் என் அன்னை.

குழந்தையாகிய எனக்கு என்ன தெரி யும்? "நான் மாட்டேன், அம்மா! நான் வரமாட்டேன். நீ வேண்டுமானால் போ! நான் என் அப்பாவுடன் இங்கேதான் இருக்கப் போகிறேன்!" என்று சொல்லிக் கொண்டே மந்திர மூர்த்தியிடம் ஓடிச் சென்று அவரைக் கட்டிக் கொண்டேன்.

என் தாயார் கோபத்துடன் "இந்த அசட்டுப் பெண்ணை அழைத்துப் போங்கள்! அப்பாவைப் பார்த்த லட் சணம் போதும்!" என்றாள்.

இம்மாதிரி அம்மா சில சமயம் காரண மில்லாமல் என் பேரில் கோபிப்பது உண்டு. ஆகையால் அதை நான் பொருட் படுத்தவில்லை.

நானே போய்ப் படுக்கையில் படுத்துக் கொண்டேன். அம்மாவின் குரலும் புதிய மனிதரின் குரலும் கோபமாகக் கேட்டன. என்னை மிரட்டி அனுப்பி விட்டதற் காகவே அவர் என் தாயாரைக் கோபித் துக் கொண்டதாகத் தோன்றியது.

பிறகு, தூங்கிப் போய் விட்டேன்.

பொழுது விடிந்த பிறகு, இரவில் நடந்த தெல்லாம் கனவா, உண்மையா என்று சந்தேகமாகவே இருந்தது.

ஆனால் என்னைப் பெற்ற தகப்பனார் வாங்கிக் கொண்டு வந்த பட்டுச் சொக் காய், விளையாட்டுக் கருவிகள் முதலிய வற்றைப் பார்த்து உண்மையாக நடந் திருக்க வேண்டுமென்று எண்ணினேன்.

இரவில் வந்து போனவரைப் பற்றி அம்மாவிடம் பலகேள்விகள் கேட்டேன்.

ஒன்றுக்கும் அம்மா சரியான பதில் சொல்லவில்லை. சில சமயம் எரிந்து விழுந் தாள். சில சமயம் "உனக்கு இப்போது சொன்னால் புரியாது! கொஞ்சம் வயதா கட்டும்; பிறகு சொல்கிறேன்!" என்றாள்.

எனக்கு வயதாக ஆக, ஊரார் என் அன்னையைப் பற்றியும் என் பிறப்பு வளர்ப்புப் பற்றியும் பேசிய வார்த் தைகள் என் காதில் விழத் தொடங்கின. ஒருவாறு அவற்றின் பொருள்கள் விளங் கவும் தொடங்கின. அவர்கள் சில சம யம் தாறுமாறாகப் பேசிய வார்த்தைகள் என் மனத்தைப் புண் படுத்தின. என் பெற்றோர்களைப் பற்றியும், நான் பிறந்த கதை, வளர்ந்த கதையைப் பற்றியும் தெரிந்து கொள்ள எனக்கே ஆவல் உண்டாகி வளர்ந்து வந்தது.

எப்போது கேட்டாலும் என் தாயார் ஏதேனும் சாக்குப் போக்குச் சொல்லிக்

கொண்டே வந்தாள். கடைசியாக, என்னை வளர்த்த தந்தையிடந்தான் கேட்டுத் தெரிந்து கொண்டேன். ஒரு தடவை அவர் மனம் விட்டு என்னிடம் பேசத் தொடங்கிய பிறகு சிறிது கூடத் தயக்கமின்றிச் சமயம் வாய்த்தபோதெல்லாம் என் பெற்றோர்களைப் பற்றிப் பேசத் தொடங்கினார். முதன் முதலில் அவர் என் தாய் தந்தையரைச் சந்திக்க நேர்ந்த விதத்தைப் பற்றி எத்தனை தடவை சொன்னாலும் அவருக்கு அலுப்பது கிடையாது. அவருடைய வாழ்க்கையிலேயே அச்சம்பவம் ஒரு பெரிய மாறுதலை உண்டு பண்ணி விட்டது. அதை அவர் பலமுறை எனக்குக் கூறியபடி இங்கே எழுதுகிறேன்.

* * *

மந்திர மூர்த்தி ஏழைக் குடும்பத்தில் பிறந்து செல்வக் குடும்பத்தில் சுவீகாரம் புகுந்தவர். சுவீகாரத் தகப்பனார் தமக்கு உறவான குடும்பத்தில் அவருக்கு விவாகம் செய்து வைத்தார். மிகச் சிறிய பிராயத்திலேயே கலியாணம் ஆகி விட்டது. நம் நாட்டில் பெரும்பாலான குடும்பங்களில் நடப்பதுபோல் அவர்கள் கணவனும் மனைவியுமாக வாழ்ந்தார்கள். ஆனால் இல் வாழ்க்கையில் மந்திரமூர்த்தி அதிகமான இன்பம் எதுவும் காண வில்லை. நாலு பேர் இருக்கும்போது ஒருவருக்கொருவர் பேசக் கூடக் கூச்சப் படுவார்கள். ரயிலில் ஏறிப் பிரயாணம் செய்யும்போது கூடக் கணவன் முன்னால் உட்காரக் கூடாது என்று அந்த அம்மாள் ஒரு பக்கமாக நின்று கொண்டே இருப்பாள். தமது மனைவிக்கு நாகரிகம் கற்பிக்க மந்திர மூர்த்தி செய்த முயற்சிகள் எல்லாம் வீணாயின.

மூன்று குழந்தைகள் அவர்களுக்குப் பிறந்தன; ஆனால் மூன்றும் சில மாதத்துக்குள்ளாகவே இறந்து போயின. குழந்தைகளைச் சரியாக வளர்க்கத் தெரியாத படியாலேயே அவை இறந்து போயின என்று மந்திர மூர்த்தி மனத்துக்குள் வருத்தப்பட்டார். சொல்லிப் பயனில்லை யென்று சும்மா இருந்தார். கடைசியில், ஒரு நாள் அந்த அம்மாளும் கண்ணை மூடினாள்.

மந்திர மூர்த்தி ஏகாங்கி யானார். பாங்கியில் பணம் இருந்து என்ன பயன்? வீடும் நிலமும் தோப்பும் துரவும் இருந்து தான் என்ன பயன்? வாழ்க்கையில் இன்பம் இல்லை; மனத்தில் நிம்மதி இல்லை. ஏதிலாவது கொஞ்சம் உற்சாகம் இருந்தது என்றால், அதே ஊரில் இருந்த பெரிய ஜமீன்தாருடன் கோர்ட் விவகாரங்கள் நடத்துவதிலேதான் இருந்தது!

மந்திரமூர்த்தியுடன் கூடப் பிறந்த சகோதரிகள் இருவர் இருந்தார்கள். அவர்கள் ஏழ்மையான குடும்பங்களில் வாழ்க்கைப் பட்டிருந்தார்கள். அவர்களுக்கு மந்திரமூர்த்தி தம்மாலியன்ற பண உதவி அவ்வப்போது செய்து வந்தார். அதனால் அச் சகோதரிகள் திருப்தி அடைய வில்லை.

இரண்டு சகோதரிகளுக்கும் பெண்கள் இருந்தார்கள். மந்திரமூர்த்தியின் மனைவி காலமான போது அவருக்கு நாற்பது வயதுக்கும் குறைவுதான். ஆகையால் சகோதரிகள் இருவரும் தங்கள் புதல்விகளில் ஒருத்தியை அவருக்கு இரண்டாந் தாரமாக மணம் செய்து வைப்பதில் முனைந்தார்கள். எவ்வளவோ அதற்காகப் பாடுபட்டார்கள். மந்திரமூர்த்திக்கு முதல் கலியாணத்தின் அநுபவம் அவ்வளவு திருப்திகரமாக இல்லையல்லவா? ஆகையால், இரண்டாவது தடவையும் அதே தவறைச் செய்வதற்கு அவர் விரும்பவில்லை. ஆகையினால் சகோதரிகளின் போதனை அவர் காதில் அவ்வளவாக ஏறவில்லை.

ஆனாலும் எத்தனை காலம் இப்படி ஏகாங்கியாகக் காலங் கழிக்க முடியும் என்ற ஏக்கமும் அவர் மனத்தில் இருந்து கொண்டிருந்தது. கலியாணத்தைப் பற்றி அவர் யோசனை செய்யாமலில்லை. கலியாணம் செய்து கொள்வது வழியோடு போகிற சனியனை விலைக்கு வாங்குகிறதாக முடிந்தால் என்ன செய்வது என்கிற எண்ணம் அவரைத் தடைசெய்தது. இவ்வாறு அவர் மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்த போது, ஒரு நாள் ஜில்லாத் தலை நகருக்குக் கோர்ட்டு விவகாரமாகப் போய் விட்டு ஊருக்கு மோட்டார் பஸ் வண்டியில் திரும்பி வந்து கொண்டிருந்தார்.

அந்தச் சாலை இருபுறமும் உயர்ந்த மரங்கள் வளர்ந்து இனிய நிழல் படர்ந்த மனோகரமான சாலை.

எங்கள் ஊரே மிக அழகான ஊர். மலையாள நாட்டையும் தமிழகத்தையும் பிரிக்கும் மேற்கு மலைத் தொடரின் கீழ்த் திசை அடிவாரத்தில் அமைந்துள்ளது. எங்கள் ஊரை நெருங்கி வரும்போது, பூமாதேவியின் வளமும் வனப்பும் அதிகமாகி வருவதைக் காணலாம். நெடிய மரங்களும் பசுமையான வயல்களும்

அல்லியும் தாமரையும் மலர்ந்து குலுங்கும் வாவிகளும் குளுகுளுவென்று ஒலித்துக் கொண்டு நீர் பாயும் ஓடைகளும் எங்கெங்கும் காணப்படும். மேற்கே நீல நிற மலைத் தொடர்கள் சில இடங்களில் உயர்ந்தும் சில இடங்களில் தாழ்ந்தும் நீண்ட கோட்டைச் சுவர்போல் அமைந்திருக்கும். ஆங்காங்கே மலைகளின் உச்சியிலிருந்து பால் வண்ண அருவிகள் மாலை மாலையாக விழுந்து கொண்டிருக்கும்.

இப்படிப்பட்ட அழகான சூழ்நிலையுள்ள சாலைகளில் பிரயாணம் செய்வது பண்ணையார் மந்திரமூர்த்திக்கு எப்போதுமே உற்சாகம் அளிப்பது வழக்கம்.

அன்றைக்கு அவருடைய குதூகலத்தை அதிகப்படுத்துவதற்கு வேறொரு காரணம் சேர்ந்து கொண்டது. அவர் பிரயாணம் செய்த அதே பஸ்ஸில் இளம் பிராயத்துத் தம்பதிகள் இருவர் ஏறியிருந்தார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வதிலும் நடந்து கொள்வதிலும் வெளியான அன்பும் ஆதரவும் மந்திரமூர்த்தியின் சிந்தையைக் கவர்ந்தன. அவர்கள் ஒருவரை யொருவர் பார்த்த பார்வையிலேயே கரைகாணாத உணர்ச்சி வெள்ளம் ததும்புவதைக் கண்டார். அவ்வப்போது அந்த வாலிபர் அப்பெண்ணிடம் "தலைவலி இப்போது எப்படி இருக்கிறது?" என்று பரிவுடன் கேட்டதும், கூஜாவிலிருந்து தண்ணீர் எடுத்துக் குடிப்பதற்காகக் கொடுத்ததும், "இப்படியும் உண்டா?" என்று அவரைப் பிரமிக்கச் செய்தன. அந்தப் பெண் கூறிய மறுமொழிகள் தேனைக் காட்டிலும் இனிமையாக அவருடைய காதில் விழுந்தன.

பழைய இலக்கியங்களிலும், புதிய கதைகளிலும் 'காதல்' 'காதல்' என்று சொல்கிறார்களே, அது இந்தத் தம்பதிகளிடம் அல்லவா குடிகொண்டிருக்கிறது?—என்று மந்திரமூர்த்தி வியந்தார். இவர்கள் யாரோ, எந்த ஊரோ, எப்போது கலியாணம் செய்து கொண்டவர்களோ என்று ஆச்சரியப்பட்டார். புதுமணம் புரிந்து கொண்ட தம்பதிகளாகவே இருக்க வேண்டுமென்றும், ஒருவர் மேலொருவர் இஷ்டப் பட்டுக் கலியாணம் செய்து கொண்டிருக்க வேண்டுமென்றும் மனத்திற்குள் எண்ணினார். அவர்களைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்வதற்கு அவருக்கு ஆர்வம் மிகுந்தது. அடிக்கடி அவர்களைக் கடைக்கண்ணால் பார்த்தார். ஏதாவது தவறாக எண்ணிக் கொள்ளப் போகிறார்களே என்ற பயமும் ஒரு பக்கம் இருந்தது. எந்தக் காரணத்தைக் கொண்டாவது அவர்களுடன் பேச்சுத் தொடங்க விரும்பினார். "எங்கேயோ பார்த்தமாதிரி இருக்கிறது. தம்பி! நாம் முன்னால் சந்தித்ததுண்டா?" எனப் பேச்சுத் தொடங்கலாமென்று தீர்மானித்துக் கொண்டார்.

இதற்காக அவர் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, தொண்டையைக் கனைத்துக் கொண்டிருந்தபோது, பஸ்ஸின் முற்பகுதியிலிருந்து 'ஓ!' என்ற கூக்குரல் எழுந்தது.

பிரயாணிகள் அனைவரும் திடுக்கிட்டுச் சாலையில் பஸ்ஸுக்கு முன்னால் பார்த்தார்கள். எருமை மாடு ஒன்று சாலையின் குறுக்கே விழுந்தடித்து ஓடி வந்தது. எருமையின்மேல் பஸ் மோதாமல் இருப்பதற்காகப் பஸ் ஓட்டியவர் வண்டியை மிகத் துரிதமாக வளைத்துத் திருப்பினார். அடுத்த சில வினாடிகளில் என்ன நடந்தது என்பது பிரயாணிகளுக்கு அச்சமயம் தெரியவில்லை. ஒரு பெரிய அதிர்ச்சி உண்டாயிற்று. பஸ் ஒரு பக்கமாகச் சாய்ந்து விழுந்தது. சடசடவென்று பலகைகள் முறியும் சத்தமும் கண்ணாடிகள் உடையும் சத்தமும் பிரயாணிகள் அலறும் குரலும் கேட்டன.

மந்திரமூர்த்தி கண்களை மூடிக் கொண்டார். கண்ணுக்குத் தெரியாத ராட்சதன் ஒருவன் அவரைத் தூக்கி விட்டெறிந்தது போலிருந்தது. தடாரென்று பூமியில் விழுந்தார். அவர் மீது இன்னும் ஏதேதோ விழுந்தது. ஒரு நிமிடம் மூச்சு விட முடியாமலிருந்தது. பிறகு மூச்சு வந்தது. தமது உயிருக்கு ஆபத்து ஒன்றுமில்லை என்பதை உணர்ந்தார். அவர் மீது விழுந்து கிடந்தவைகளை அப்புறப்படுத்த முயன்றார். ஏதோ மிருதுவான ஒரு பொருளைத் தொட்டதும் அவருக்கு ரோமாஞ்சனம் உண்டாயிற்று. கண்களைத் திறந்து பார்த்தார். வளையல்கள் அணிந்த மிருதுவான ஒரு பெண்ணின் கரத்தை அவர் பற்றியிருப்பதைக் கண்டார். சற்று முன்னால் காதல் தெய்வத்தின் வடிவமாகக் காட்சி அளித்த பெண் தமக்கு அருகில் விழுந்து கிடப்பதைப் பார்த்தார். அந்தப் பெண்ணின் உடம்பில் பாதி, மோட்டார் பஸ்ஸின் அடியில் மாட்டிக் கொண்டிருப்பதைக் கண்டு "ஆஹா!" என்று அலறினார்.

(தொடரும்)



S. R. ஞானம் பட்டணம் பொடியும் எமது தயாரிப்பே

உயர்ந்த தானம்

ஸ்ரீ கிருபானந்த வாரியார்

உயர்ந்த ஆடையும் உயர்ந்த அணிகலன்களும் அணிய வேண்டுமென்று தான் எல்லோரும் எண்ணுகின்றார்கள். உயர்ந்த உணவு உண்பதிலும் விருப்பந்தான். வீடு, வாகனம் எல்லாமே உயர்வாக இருக்க வேண்டும் என்று தான் எண்ணம்.

அது போல் தானமும் உயர்ந்த தானமாகப் புரிய வேண்டும் என்று எண்ணுதலும், எண்ணியவாறு செய்தலும் அவசியம் அல்லவா ?

முக்தியுலகத்தின் முதல் வாயிலில் இரண்டு கதவுகள் உள்ளன. அவையிரண்டும் திறக்கப்பட வேண்டுமாயின் தானமும் தவமும் புரிதல் வேண்டும். தானத்தால் ஒரு கதவும் தவத்தால் ஒரு கதவும் திறக்கப்படும்.

"தானமும் தவமும்தான் செய்வராயின்
வானவர் நாடு வழி திறந்திடுமே"

என்கிறார் ஔவையார்.

கண்ணுக்கு அணிகலம் கண்ணோட்டம்
காதுக்கணிகலம் நல்ல கேள்வி
நாவுக்கணிகலம் சத்தியம்
மனத்துக்கு அணிகலம் தியானம்
கரங்களுக்கு அணிகலம் தானதர்மம்

என்று நான், 'மணி மொழி' என்னும் நூலில் எழுதியிருக்கின்றேன்.

ஆகவே ஒவ்வொருவரும் தான தருமம் புரிந்து கரங்களை அலங்கரிக்க வேண்டும்.

தானம்: தான் உய்யத் தருவது.
தருமம்: பிறர் உய்யத் தருவது.

தானம்: கோதானம், பூதானம், வஸ்திர தானம், சொர்ணதானம் எனப் பலவகைப்படும். ஆகவே அத்தகைய தானங்களில் உயர்ந்த தானம் எது என்று ஆராய்தல் இன்றியமையாத கடமையல்லவா ?

எல்லாத் தானங்களையும் நம்மால் செய்ய முடியாதுதானே ? ஆதலினால்தான் உயர்ந்த தானம் எது என்று அறிந்து அதனைச் செய்ய வேண்டும்.

தானத்திலே சிறந்தது அன்னதானம்.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்பது ஆன்றோர் வாக்கு.

உணவு இல்லையானால் ஒன்றும் நிகழாது. ஆகவே உயிரைத் தழைக்க வைக்கும் அன்ன தானம் புரிதல் வேண்டும்.

இனி, இந்த அன்னதானத்தினும் ஆயிரம் மடங்கு உயர்ந்த தானம் ஒன்றுள்ளது. எத்தனை உயர்ந்த உணவேயானாலும் 5, 6 மணி நேரந்தான் துணை புரியும்; பின்னர் பசி எடுக்கும். ஆகவே அன்னதானத்தினும் ஆயிரம் மடங்கு உயர்ந்தது அறிவுத் தானம்.

இந்த அறிவுத் தானம் ஒருவனுக்கு என்றும் துணை புரிவது. வாழ்நாள் முழுவதும் இன்பத்தை நல்குவது. ஆகவே ஒருவனை அறிவுடையவனாகச் செய்கின்ற தானமே உயர்ந்தது. எழுத்தாலும் சொல்லாலும் பிறருக்கு அறிவைப் புகட்டுவது அறிவுத் தானமாகும்.

உணவு உடம்பை வளர்க்கும்.
அறிவு உள்ளத்தை வளர்க்கும்.

எனவே, எல்லோரும் அன்னதானம் புரிவதுடன் அறிவுத் தானத்தையும் புரிதல் வேண்டும்.

இனி இந்த அறிவுத் தானத்தைவிட ஒரு லட்சம் மடங்கு உயர்ந்த தானம் ஒன்று உளது. அது எது ? நிதானம்.

எவ்வளவு அறிவு படைத்தவனாயினும் அவனுக்கு நிதானமில்லையானால் அவனுடைய அறிவுக்குப் பயனில்லை. அறிவின் பயனே நிதானந்தான். அதாவது அமைதி.

பேசும் போதும், செயல் புரியும் போதும் நிதானம் இருக்க வேண்டும்.

இனி நிதானத்திலும் கோடிமடங்கு உயர்ந்த தானம் ஒன்றுளது. அது எது ? சமாதானம்.

இதற்கு மேற்பட்ட தானமே கிடையாது. சமாதானம் முதலில் உள்ளத்தில் வர வேண்டும். சித்த சமாதானமே சிறந்த சாதனம்.

கணவனுக்கும் மனைவிக்கும் சமாதானம் வேண்டும்.

உடன் பிறந்தாருள் சமாதானம்; ஒரு ஊருக்குள் சமாதானம்; நாட்டுக்குள் சமாதானம்; தேசத்தில் சமாதானம்.

சண்டையைக் கிளப்பி விடுபவன் சிறியவன். சமாதானம் புரிபவன் பெரியவன்.

"ஐந்து வீடாவது கொடு" என்று துரியோதனனைக் கேட்டுச் சமாதானத்துக்குப் பாடுபட்டார் ஸ்ரீ கிருஷ்ண பகவான்.


தேசம் சமாதானமாக வாழ வேண்டும் என்றும், இந்து முஸ்லிம்கள் சமாதானமாக இருக்க வேண்டுமென்றும் இறுதி வரை உறுதியுடன் வாழ்ந்தவர் காந்தியண்ணல்.

அவருடைய உள்ளம், உரை, செயல், எழுத்து எல்லாம் சமாதானம்.


சமாதானத்துக்கு உயிரையுந் தியாகம் புரிந்த அண்ணலாருடைய மணி மண்டபம் சென்னையில் இராஜபவனத் தோட்டத்தில் நிர்மாணிக்கப் பெறுகின்றது. காந்தி அண்ணலை நமக்கு நினைவூட்டுவதற்காக அமைக்கப்படும் இந்த மணி மண்டபம், அண்ணலார் வகுத்த முறைப்படி, பிரார்த்தனைகள் நடைபெறும் சர்வ சமயக் கோயிலாகவும் விளங்கும்.

இத்தகைய பெரும் பணிக்கு நாம் அன்புடன் வழங்குவது தானங்களுக்குள் மிக உயர்ந்த தானம் ஆகும். *


** மேற்கண்ட அருமையான கட்டுரையுடன் ஸ்ரீ கிருபானந்தவாரியார் அவர்கள் காந்தி மண்டபத் திருப்பணிக்காக ரூ. 101 தமது அன்புக் காணிக்கையாக அனுப்பியுள்ளார்கள். தொகையைக் கவர்னர் ஸ்ரீ பிரகாசா அவர்களுக்கு அனுப்பிக் காந்தி மண்டப நிதியில் சேர்த்துவிட்டோம். — ஆசிரியர்.*



ஹமாமை நான் இவ்வளவு விரும்புவது—



அது எனக்கு மிகுந்த — புத்துணர்ச்சி — கொடுப்பதுதான்



TATA PRODUCT

(ஒவ்வொரு கட்டியும் நெடுநாள் வருவதால் அது சிக்கன முடையதென்றும் உங்களுக்குத் தெரியவரும்!)

அது சிறந்ததென்பதை நீங்கள் நிச்சயமாக அறிவீர்கள்—
ஏனெனில் அது டாடா தயாரிப்பு

இந்திய மூலதனத்தைக் கொண்டு, இந்திய நிர்வாகத்தில்,
இந்தியாவிலேயே தயாரிக்கப்படுவது.

ஸ்ரீ ஏ.எப்.எஸ். தல்யார்க்கானின் டாடா ஸ்போர்ட்ஸ் ரிவியூவை
செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில் இரவு 9 மணிக்கு
ரேடியோ ஸிலோனில் கேளுங்கள்.

TS. 9771

சக்கரவர்த்தித்

22. கைகேயி வியந்தாள்.

ஒரு பக்கம் இயற்கை வேகம் ராமனைப் பற்றிய அன்பு. மற்றொரு பக்கம் செய்த பிரதிக்ஞையை எவ்வாறு என் போன்றவன் பொய்யாக்கலாம் என்கிற தரும சங்கடச் சிக்கல். கைகேயி முடிவில் எப்படியோ இரக்கம் கொள்வாள், தரும சங்கடம் தீர்ந்து விடும் என்று தசரதன் எதிர்பார்த்தான். ஆனால் அது இல்லையென்று இப்போது முடிவாகத் தெரிந்து விட்டது.

இனி ஒரே ஒரு கடைசி ஆசை — "நான் தந்து விட்ட வரப் பிரதிக்ஞையில் எவ்விதத்திலும் ராமன் கட்டுப்படவில்லை. என் பிரதிக்ஞையைப் பற்றி அவனுக்கென்ன தரும சங்கடம்? அவனுக்குப் பலம் இருக்கிறது. ஆதரவு இருக்கிறது. அவன் என் பேச்சைப் புறக்கணிக்கலாம். ஆனால் அவன் சுபாவத்துக்கு இது விரோதம். ஆயினும் ஒரு வேளை தெய்வாதீனமாக என்னை எதிர்க்கும் எண்ணம் அவனுக்குத் தோன்றலாம். அப்படிச் செய்வானானால் என் சத்தியமும் என்னால் குறைவின்றிக் காப்பாற்றப் பட்டதாகும்; குல நீதி, தருமம், ஜனங்களுடைய விருப்பம் இவையும் அவன் எதிர்ப்பின் மூலம் வெற்றியடையலாம். ராமன் என் பேச்சைக் கேளாமற் போனால் எல்லாம் சரியாகிப் போகும்."

இவ்வாறு தசரதன் எண்ணினான். பித்ரு வாக்கிய பரிபாலன தருமத்தை ராமன் கைவிடமாட்டான் என்கிற விஷயத்தைத் தசரதன் மறந்து விட்டு இவ்வாறு குழப்பமும் துக்கமும் நிறைந்த தன் மனத்தைச் சமாதானப் படுத்திக் கொண்டதாகத் தோன்றுகிறது.

தன்னுடைய மரணத்தை எப்படியும் நிச்சயமாக எதிர்பார்த்தான். இந்தத் தரும சங்கடத்தில் இது அவனுக்குக் கொஞ்சம் ஆறுதல் தந்தது. பின்னால் வரப் போகும் கஷ்டங்களைத் தன்னுடைய கண்களால் பார்க்க வேண்டியதில்லையல்லவா?

மரணம் அருகில் வந்து நிற்பதைக் கண்டு விட்டதும் பூர்வ நிகழ்ச்சிகள் ஞாபகத்துக்கு வந்தன. சிறு வயதில் தான் செய்த பாபம் நினைவுக்கு வந்தது. "அதன் வினையை இப்போது அனுபவிக்கிறேன். ரிஷி குமாரனைக் கொன்று அவனுடைய வயோதிகப் பெற்றோர்களுக்கு எத்தகைய பெரும் துக்கம் உண்டாக்கினேன்? அது வீண் போகுமா? நானும் புத்திரனைப் பிரியும் சோகத்தை அனுபவித்தால் அந்தப் பாபம் தீரும்" — இவ்வாறு தன் உள்ளத்தைத் தசரதன் சமாதானப் படுத்திக் கொண்டான்.

எப்படியாயினும் கொடிய மனைவி தன்னிடம் பெற்று விட்ட வாக்கை நிறைவேற்றுவதைத் தவிர வேறு வழியில்லை என்று தீர்மானித்து விட்டான். ஆனபடியால் காரியக் கிரமத்தை யெல்லாம் கைகேயிக்கு விட்டு விட்டான்.

* * *

பொழுது விடிந்தது. முகூர்த்த காலம் நெருங்கி விட்டதென்று வசிஷ்ட முனிவரும் சிஷ்யர்களும் பொன் பாத்திரங்களில் புண்ணிய நதிகளின் ஜலமும், இன்னும் பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய சாமான்களும் எடுத்துக் கொண்டு அரண்மனை நோக்கி நகரத்து ராஜ வீதியில் சென்றார்கள். தெருவெல்லாம்



திருமகன்



ராஜாஜி

மகோற்சவத்துக்காக அலங்கரிக்கப்பட்டு எங்கும் ஜனங்கள் நிறைந்து நின்றார்கள். எப்போது? எப்போது? என்று குதூகலமாகப் பேசிக் கொண்டிருந்த ஜனங்கள் வசிஷ்ட முனிவரும் அவருடைய சிஷ்யர்களும் செல்வதைப் பார்த்ததும் அடங்கா மகிழ்ச்சி அடைந்தார்கள். நீர்க் குடங்கள், தானியங்கள், ரத்தினங்கள், தேன், தயிர், நெய், பொரி, தர்ப்பைப் புல், சமித்து, புஷ்பம், பால், கன்னிகள், யானை, குதிரை, ரதம், வெண் குடை, சாமரம், காளை, குதிரை, புலித்தோலாசனம் இவையெல்லாம் வாத்திய கோஷத்துடன் செல்லுவதைக் கண்டதும், ஜனங்களுடைய ஆரவாரமும் உற்சாகமும் முன்னைவிட அதிகமாயின.

வசிஷ்டர் அரண்மனை வாயிலண்டை சுமந்திரனைக் கண்டார்.



"எல்லாரும் காத்திருக்கிறார்கள்; சகல ஏற்பாடுகளும் செய்து ஆயிற்று என்று அரசனுக்கு உடனே தெரிவிக்க வேண்டும்" என்றார்.

சுமந்திரனும் கை கூப்பி வணங்கி அரசன் படுத்திருந்த படுக்கை அறைக்கு வெளியிலிருந்து கொண்டு வழக்கப்படி மங்கள ஸ்துதி செய்து விட்டு வசிஷ்டருடைய பிரார்த்தனையைத் தெரியப் படுத்தினான்.

"அரசனே, இந்திரனுக்குச் சமானமானவனே, இந்திரனுடைய சூதனை மாதலியைப்போல் நான் உம்மை எழுப்புகிறேன். எல்லா தேவர்களும் உமக்கு வெற்றி தருவார்களாக. பெரியோர்களும் படைத் தலைவர்களும் நகரத் தலைவர்களும் தரிசனத்துக்குக் காத்திருக்கிறார்கள். ராத்திரிதேவி மறைந்தாள். காலையில் செய்ய வேண்டியது சகலமும் உம்முடைய ஆணையை எதிர் பார்த்து நிற்கிறது. அரசர்க்கரசே, எழுந்தருள வேண்டும்! வசிஷ்ட பகவான் பிராமணர்களுடன் காத்திருக்கிறார்" என்றான்.

அச்சமயம் அரசனோ பேச முடியாமல் சங்கடத்தின் உச்சியை அடைந்திருந்தான். ஆனபடியால் அரசனுக்குப் பதிலாகக் கைகேயி தைரியமாகச் சுமந்திரனிடம் சொன்னாள்:

"சுமந்திரரே! மகாராஜா ராத்திரி முழுதும் ராம பட்டாபிஷேகத்தைப் பற்றியே பேசிக் கொண்டு தூங்காமல் கழித்தார். இப்போதுதான் அயர்ந்து கொஞ்சம் தூங்குகிறார். சீக்கிரம் சென்று ராமனை அழைத்து வாரும்" என்று சமத்காரமாகப் பேசிச் சுமந்திரனை ராமனிடம் அனுப்பினாள்.

தசரதன் தன் யோசனைக்கு ஒப்புக்கொண்டு விட்டான்; ஆயினும் அதைச் செய்து முடிக்கும் ஆற்றல் அவனுக்கு இல்லை; ஆனபடியால் இனிச் செய்ய வேண்டியதை யெல்லாம் தானே செய்ய வேண்டும் என்று கைகேயி தனக்குள் தீர்மானித்து விட்டாள்.

* * *

சுமந்திரன் ராமனுடைய அரண்மனைக்குச் சென்றான். சீதையும் ராமனும் மகோத்சவத்துக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள்.

அந்தச் சமயம் சுமந்திரன் "மன்னனும் கைகேயி அரசியும் உம்மை உடனே வரச் சொன்னார்கள்" என்று சங்கதியைத் தெரிவித்தான்.

ராமன் உடனே புறப்பட்டான். இந்தத் தாமதமும் நடவடிக்கைகளும் கண்டு எல்லாருக்குமே கொஞ்சம் சந்தேகம் உண்டாயிற்று. ஆனாலும் அவர்களுக்கு விஷயம் விளங்கவில்லை. அதைப் பற்றிப் பேசவும் மனமில்லை. எல்லாம் நல்லதாகத்தான் முடியும் என்று அவரவர்கள் செய்ய வேண்டியதைச் செய்து கொண்டு போனார்கள்.

தெருக்களெல்லாம் உற்சவ அமர்க்களம். முகூர்த்தமோ அடுத்து வந்து விட்டது. இதனிடையில் அரண்மனை அந்தப்புரத்தில் ஜனங்கள் கொஞ்சமும் எதிர்பாராத காரியம் நடந்து கொண்டிருந்தது.

ஏன் வீணைத் தாமதம் செய்கிறார்கள்? ஒரு வேளை ஏதோ செய்ய வேண்டிய கிரியைகளும் முறைகளும் நீடித்துக் கொண்டு போகிறது போலிருக்கிறது என்று ஜனங்கள் சமாதானப் படுத்திக் கொண்டு காத்திருந்தார்கள்.

வீதிகளில் ஜனக் கூட்டம் வர வர அதிகரித்து வந்தது.

* * *

சுமந்திரன் ராமனை அழைத்து வந்தான். கூட்டமாக நின்ற ஜனங்களை மெதுவாக ஒதுக்கி வழி செய்து கொண்டு அவர்கள் சென்றார்கள். அந்தப்புரத்தில் தந்தையின் படுக்கை யறையில் ராமன் நுழைந்தான். நுழைந்ததும் பாம்பின் மேல் கால் வைத்தாற் போல் பயந்து திடுக்கிட்டான். அங்கே தந்தையின் நிலையைப் பார்த்து ராமனுக்கு ஒன்றும் விளங்க வில்லை.

அரசன் ஏதோ பெருந் துக்கத்தில் மூழ்கிக் கிடந்தான். அவனுடைய முகம் மல்லிகைப் புஷ்பம் வெய்யிலில் உலர்ந்து போனால் எப்படி யிருக்குமோ, அப்படி யிருந்தது.

தந்தையின் பாதங்களைத் தொட்டு வணங்கினான். பிறகு கைகேயியின் பாதங்களையும் தொட்டு அவளையும் வணங்கினான்.

"ராம" என்று ஒரு வார்த்தை தீன சுரத்தில் தசரதன் சொல்லி விட்டு சும்மா இருந்து விட்டான். பேசவில்லை. ராமனுடைய முகத்தை நேராகப் பார்க்க அரசனால் முடிய வில்லை.

தன்னுடன் பேசாமலும் பாராமலும் படுத்துக் கிடந்த தந்தையின் நிலையைப் பார்த்து ராமன் வியப்பும் பயமும் அடைந்தான்.

• • •

தாங்க முடியாத வேதனையிலிருந்த அரசனைப் பார்த்து ஒன்றும் விளங்காமல் திகைத்து ராமன், "அம்மா! இதென்ன ஆச்சரியமாக இருக்கிறது. எவ்வளவு கோபமாயிருந்தாலும் என்னிடம் எப்போதும் இனிய பேச்சுப் பேசுவாரே தந்தை? ஏதாவது நானும் அறியாமல் தவறு செய்து விட்டேனா? ஏதாவது உடம்பில் திடீர் என்று அசௌக்கியம் ஏற்பட்டு விட்டதா? யாராவது ஏதாவது அவருக்குக் கோபம் மூட்டும்படியான சொல் பேசிவிட்டார்களா? தயவுசெய்து நடந்ததை எனக்குச் சொல்ல வேண்டும். இதை என்னால் பொறுக்க முடிய வில்லை" என்றான்.

இப்படி ராமன் துக்கத்திலும் வியப்பிலும் மூழ்கிக் கேட்ட கேள்விக்குக் கைகேயி கூச்சம் கொஞ்சமு மின்றித் தன் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளும் சமயம் வந்து விட்டது என்று பேசினாள்.

"அரசருக்கு யார் பேரிலும் கோபமில்லை, ராமனே! உடம்பில் ஏதும் குறையில்லை. ஏதோ அவர் மனத்திலுள்ள விஷயத்தை உன்னிடம் சொல்லப் பயப்படுகிறார். அவ்வளவுதான். நீ மனம் நொந்து கொள்வாய் என்று உன்னிடம் விஷயத்தைச் சொல்லப் பயப்படுகிறார். அதனால் பேச முடியாமலிருக்கிறார். முன்னொரு சமயம் என்னிடம் சந்தோஷப் பட்டு எனக்கு வரம் தந்தார். இப்போது 'ஏன் தந்தேன்' என்று பாமரர்களைப் போல் அரசர் வருத்தப்படுகிறார். இது அவருக்குத் தகாததல்லவா? கொடுத்தேன் என்று ராஜாவான ஒருவர் பிரதிக்ஞை செய்து விட்டுப் பிந்தி வருத்தப்படுவது மடமையல்லவா? அவர் கொடுத்த வரத்தைச் செய்து தீர்க்க வேண்டியது உன் கையில் இருக்கிறது. உனக்குச் சொல்லப் பயந்து கொண்டு கொடுத்த வரத்தையும் செய்த பிரதிக்ஞையையும் பொய்யாக்கலாம் என்று யோசிக்கிறார். இது அவருக்குத் தகுமா? 'பயப்பட வேண்டாம். எனக்காக நீர் சத்தியத்தைக் கைவிட வேண்டாம்' என்று நீ அவருக்குத் தைரியமும் உறுதியும் சொல்லி விட்டால் அவர் பேசுவார். அவருக்கு நீ உதவி செய்ய வேண்டும். எல்லாம் உன் கையிலிருக்கிறது. 'செய்து தீர்க்கிறேன், அதற்குத் தடையில்லை' என்று நீ எனக்கு உறுதி கூறினால் விஷயத்தைப் பிற்பாடு சொல்லுகிறேன்" என்றாள்.

இதைக் கேட்டு ராமன் வருத்தம் மேலிட்டு அரசன் பக்கத்தில் நின்ற கைகேயிக்குச் சொன்னான்:

"அம்மா! என்னைப் பற்றியா இந்த கஷ்டம்? என்னைப் பற்றி நீங்கள் இம்மாதிரி சந்தேகப்படலாகாது. நான் அவ்வளவு கெட்டுப் போனவனல்ல. என்னைத் தந்தை நெருப்பில் விழச் சொன்னால் விழுவேன். விஷத்தைச் சாப்பிடு என்றால் உடனே சந்தோஷமாகச் சாப்பிடுவேன். இது உங்களுக்குத் தெரியாதா? கடலில் விழச் சொன்னாலும் விழுவேன் என்று நீங்கள் அறிவீர்கள். இதோ தாயே, சபதம் செய்கிறேன். ஒன்றும் விசாரிக்க வேண்டியதில்லை. அரசர் இதைச் செய்ய வேண்டும் என்று என்னால் ஆகக்கூடியதை ஆணையிடலாம். அவர் ஆணை எதுவாயினும் அதைச் செய்வேன், சத்தியம்" என்றான்.

• • •

இப்படி ராமன் சொன்னதைக் கேட்டதும் 'முடிந்தது காரியம்' என்று மகிழ்ச்சி அடைந்தாள் கைகேயி. அரசனும் 'இனி தப்புவதற்கு வழியில்லை' என்று துக்கத்தில் மூழ்கினான்.

அதன்மேல், நாணம், இரக்கம் கொஞ்சமுமின்றி மகா பயங்கரமான விஷயத்தைப் பாவி கைகேயி சொன்னாள்:

"ராமா, நீ சொன்ன மொழி உனக்கே தகும். தந்தையைச் சத்தியவானாகச் செய்வதை விட ஒரு மகனுக்கு வேறு என்ன மேலான காரியம்? விஷயத்தை இப்போது சொல்லுகிறேன், கேள். ஏன் உனக்குச் சொல்ல அரசர் பயந்தார் என்பது உனக்கு விளங்கும். சம்பரனுடன் உன் தந்தை சண்டையிட்டுக் காயம்பட்ட காலத்தில் அவருடைய உயிரைக் காப்பாற்றிய எனக்கு அவர் நான் இஷ்டப்பட்ட இரண்டு வரங்களைத் தருவேன் என்றார். 'இப்போது வேண்டாம், வேண்டும் போது கேட்பேன்' என்றேன். 'அப்படியே ஆகட்டும்' என்று அவரும் ஒப்புக் கொண்டார். இப்போது அந்த வரங்களைக் கேட்டுப் பெற்றேன். பரதனுக்குப் பட்

டாபிஷேகம் செய்ய வேண்டும் என்றும், இன்றே நீ ராஜ்யத்தை விட்டு விலகி தண்டகாரணியம் போக வேண்டும் என்றும் இந்த இரண்டு வரங்களை யும் அரசனிடம் அடைந்திருக்கிறேன். உன்னுடைய பிரதிக்ஞையையும் தந்தை யின் சத்தியத்தையும் காப்பாற்றுவா யாக. நீயும் பொய்யனாகப் போனால் அது வேறு சங்கதி. இல்லையேல், நான் சொல்லுவதைக் கேள்; தாமத மில்லாமல் உனக்கு அபிஷேகம் செய்ய வைத்திருக்கும் ஜலத்தைக் கொண்டே பரதனுக்குப் பட்டாபிஷேகம் நடத்தி விடச் சொல். ஜடையும் மரவுரியும் தரித்து நீ தண்டகவனம் உடனே செல். சம்மதித்தேன் என்று சொல்லி அரச னுடைய பெருங் கஷ்டத்தைத் தீர்ப்பா யாக. இது உனக்குப் புகழ் தரும்" என்றாள்.

* * *

'புகழ் தரும்' என்று கைகேயி வாய் வழி வந்த வார்த்தை உண்மையே அல்லவா? இமயமலையும் கங்கை யாறும் சமுத்திரமும் இருக்கும் வரையில் ராம னுடைய புகழ் இருந்தே வரும்!

* * *

இதையெல்லாம் கேட்டுக் கொண் டிருந்த தசரதனுடைய உள்ளம் கொதித் தது. ஆனால் கைகேயியின் வியப்பே வியப்பு! ராமனுடைய முகத்தில் வருத் தம் என்பது அடையாளத்துக்குக் கூடக் காணப்படவில்லை. சக்கரவர்த்தித் திரு மகன் புன்னகை செய்து பேசினான்:

"அப்படியா, தாயே? அரசனுடைய பிரதிக்ஞை நிறைவேறும்படி சடையும் மரவுரியும் தரித்து இன்றைக்கே வனம் செல்லுகிறேன்" என்றான்.

* * *

ராமன் கைகேயியைப் பார்த்துக் கம்பீரமாகப் பேசலானான்:

"தாயே, எனக்கு எள்ளளவும் வருத் தம் இல்லை. பரதனுக்கு நான் எதையும் கொடுத்துவிட்டுப் பரம சந்தோஷத்தை அடைவேன். நீங்கள் யாரும் என்னைக் கேட்காமலே நான் அவனுக்குத் தருவேன். அப்படி யிருக்கத் தந்தையின் ஆணை ஏற் பட்டதும் ஒரு கணம் தயங்குவேனா? அர சர் சந்தேகப்பட்டதுதான் எனக்கு வருத் தம் தருகிறது. அவர் இஷ்டத்தை எனக்கு நேரில் சொல்ல அவருக்கு ஏன் கூச்சம்? அவருக்கு நான் அடிமை யல்லவா? அவ ருடைய வாக்கைச் சத்திய வாக்காகச் செய்வதை விட எனக்கு வேறு என்ன புகழ், என்ன பாக்கியம்? இதற்காகவா தந்தை எப்போதும் போல் பிரியமாகப் பேசாமல், முகத்தை எனக்குக் காட்டா மல் கஷ்டப்பட்டது? அவரே நேரில் என்னை அழைத்து இந்த ஆணையைச் சொல்லாததுதான் என்னுடைய குறை. இன்றே ஒரு விசாரமுமில்லாமல் வனம் செல்லுகிறேன். உடனே தூதர்களை வேகமாகப் போகச் சொல்லி பரதனை அழைத்து வர ஏற்பாடு செய்யுங்கள், தாமதிக்க வேண்டாம்" என்றான்.

சக்கரவர்த்தித் திருமகன் முகத்தில் அந்தக் கணத்தில் தேஜசு நெய் விட்ட அக்கினி போல் வளர்ந்தது. பாவி கைகேயியோ தான் வெற்றி யடைந்து விட்டதாக எண்ணிச் சந்தோஷப் பட் டாள். வரப் போகும் துக்கத்தை அவள் அறியவில்லை. பெற்ற மகனுடைய இகழ்ச் சியை விட வேறு என்ன வேண்டும் ஒரு ஸ்திரீக்குத் துக்கம்? ஆசை என்பது அவளை ஏமாற்றி விட்டது. சொந்த மகனான பரதனுடைய குணத்தைக்கூட அவள் சரியாக உணர முடியாமல் செய்து விட்டது.

* * *

நாலாபக்கமும் வழியடைத்து அகப் பட்டுக் கொண்ட காட்டு யானை போல் தசரதன் தவித்துக் கொண்டிருக்க, கைகேயி அனாவசியமாக "அரசன் பேசுவ தற்காகத் தாமதிக்க வேண்டாம்" என்று ராமனைத் துரிதப் படுத்தினாள்.

"தாயே! என்னை நீ அறிந்து கொள்ள வில்லை" என்றான் இராமன். "தந்தை யின் சொல்லை நிறைவேற்றுவதை விட நான் எந்த சுகத்தையும் அதிகமாக மதிக்கவில்லை. பொருளுக்கு ஆசைப்படு வேன் என்று எண்ண வேண்டாம். பரதன் ராஜ்ய பாரத்தை வகித்து மூப்படைந்த தந்தையைச் சரியாகப் பார்த்து வர வேண்டும். அதுவே என் னுடைய மகிழ்ச்சியு மாகும்."

இதை யெல்லாம் கேட்டுக் கொண் டிருந்த தசரதன் 'ஓ!' என்று பெருங் குரலிட்டு அழுதான். அரசனையும் கைகேயியையும் பாதங்களைத் தொட்டு

வணங்கி விட்டு ராமன் துரிதமாக அவ்விடத்தை விட்டு வெளியே சென்றான்.

* * *

வெளியே இருந்த லக்ஷ்மணன் கண்கள் சிவந்து மகா கோபத்துடன் ராமன் பின் சென்றான்.

வழியில் அபிஷேக ஜலக் குடங்களைக் கண்டு முகத்தில் கொஞ்சமும் வருத்தக் குறி இல்லாமல் கம்பீரமாக அவற்றை வலம் செய்து ராமன் சென்றான். தன்னுடன் வந்த வெண்குடை சாமரம் முதலியவைகளை விலக்கி விட்டு அங்கிருந்த நகரத்து ஜனங்களையும் கலைந்து போகச் சொல்லிவிட்டு ஜிதேந்திரியனை சக்கரவர்த்தித் திருமகன் கௌசல்யா தேவியின் மனைக்குச் சென்றான். தாயிடம் விஷயத்தைச் சொல்லி உடனே வனம் செல்வதற்கு விடை பெற்றுக் கொள்ளச் சென்றான்.

* * *

இந்தக் கட்டத்தில் நிகழ்ந்த உணர்ச்சி வேகங்களை வெறுமனே எழுதியதைப் படித்தால் மட்டும் உணர்வது கஷ்டம். அவரவர் பெற்றிருக்கும் கற்பனைச் செல்வத்தை உபயோகித்து அகக் கண்ணால் நிகழ்ச்சிகளைக் காண வேண்டும். தசரதன் உள்ளமும், சக்கரவர்த்தித் திருமகன் உள்ளமும், ஆசைக்கு இரையான பரதனுடைய தாயின் உள்ளமும் வாழ்க்கையில் தினமும் அடிபடும் நம்முடைய உள்ளங்கள்.

வால்மீகி அகக் கண்ணால் முற்றிலும் ராம சரித்திர நிகழ்ச்சிகளைக் கண்டு பாடினார். கம்பரும் அப்படியே பாடினார். ஆழ்வார்களும் கண்டு உள்ளம் உருகிப் பாடியிருக்கிறார்கள். எந்த இடத்திலும் எங்கேயாயினும் ராமாயணக் கதையை யாரேனும் சொன்னால் அவ்விடம் "பாஷ்பவாரி பரிபூர்ண லோசன"த்துடன் கண்களிலிருந்து நீர் பெருக ஆஞ்சனேயர் கை கூப்பி நின்று கேட்டுக் கொண்டிருப்பார் என்று பெரியோர்கள் சொல்லுவதின் கருத்து இதுவே.

இந்தக் கட்டத்தைப் பக்தியுடன் படிக்கும் ஆண் பெண் குழந்தைகளுக்கு எப்போது எந்தத் துக்கம் வந்தாலும், ஸ்ரீ ராமன் அருளால் அந்தத் துக்கத்தைத் தாங்கும் சக்தி உண்டாகுக.

உங்கள் நரம்புகள்!

வலுவுள்ளதாக உறுதியுடன் இருக்க வேண்டும் — அதுவும் ஓய்வில்லாத உழைப்பும் ஓழியாத கவலையும் நிறைந்த தற்கால வாழ்க்கையில்

அஸ்வான்

நீண்ட காலமாய் மனோ பலமும் தேக திடனும் வியர்த்தமாகி யிருந்தாலும் ஈடு கொடுத்து போஷாக்கு அளிக்கக் கூடிய ஒரு உயர்ந்த டானிக்

இன்றே ஒரு பாட்டில் வாங்குங்கள். எப்போதும் கையிருப்பாக வைத்திருங்கள்



சிறியோர்

•

முதியோர்

•

நோயாளிகள்

யாவருக்கும் உகந்தது

பெங்கால் கெமிகல்

கல்கத்தா : பம்பாய் : கான்பூர்

ஏஜண்டுகள் :

என். தேசாய் கௌண்டர் & கோ.
41, பந்தர் தெரு - சென்னை



புதுமை பெறுங்கள்!



மிருதுத் தன்மை பெறுங்கள்!



நீடித்த இனிமையுடன் இருங்கள்!

புதுமை பெறுங்கள்! முதலில் ஸ்நானம் செய்ததும் சார்மிஸ் டால்கம் பவுடரை உடல் முழுவதும் தூவுங்கள். எத்தகைய புதுமை உணர்ச்சி அது அளிக்கும் தெரியுமா?

மிருதுத்தன்மை பெறுங்கள்! உடலில் சுரணையுள்ள இடங்களிலும் பவுடரை நன்றாக தடவிவிடுங்கள். அது பட்டைப்போல படர்ந்து எரிச்சல் வராமல் பாதுகாக்கிறது.

நீடித்த இனிமையுடன் இருங்கள்! சார்மிஸ் டால்கம் பவுடரை தாராளமாக அடிக்கடி உபயோகியுங்கள். அது செலவில்லாமல் பெருவாழ்வு அளிக்கும் சாதனம். அழகிற்கும் காதல் கவர்ச்சிக்கும் இதுவே சிறந்த ரகசியம்.



சார்மிஸ்

டால்கம் பவுடர்

பரவசப்படுத்தும் மனோஹரமான நறுமண முள்ளது.

பாப்பா மலர்

கண்ணனின் கருணை



விஜயம்

கண்ணனுக்குக் கதை கேட்பதென்றால் ரொம்பப் பிரியம். அவன் அப்பாவுக்குக் கதை சொல்லுவது என்றால் ரொம்பப் பிரியம். கண்ணனுடைய அப்பாவுக்கு நிறையக் கதைகள் தெரியும். ஞாயிற்றுக் கிழமை வந்து விட்டால் கண்ணன் பாடு கொண்டாட்டம்தான். ஏனென்றால் அப்பாவுக்கு அன்று ஓய்வு நாள். ஆபீஸுக்கு அன்று போக மாட்டார். பகல் வேளையிலேயே கதை கேட்கலாம்.

அன்று ஞாயிற்றுக் கிழமை. 'சோ' வென்று மழை கொட்டிக் கொண்டிருந்தது. கொட்டும் மழையில் வெளியே எங்கும் போய் விளையாட முடியாதாகையினால் கண்ணன் வீட்டுக்குள்ளேயே விளையாட வேண்டியதாயிற்று. விளையாட்டுக்குக் கூட ஒருவரும் இல்லாமல் கண்ணனுக்கு விளையாடப் பிடிக்கவில்லை. நல்ல மழையாகையினால் அவனுடைய விளையாட்டுத் தோழர்கள் யாரும் வரவில்லை.

கண்ணன் அப்பாவிடம் வந்து, "அப்பா, கதை சொல்லுகிறாயா?" என்று கேட்டு நச்சரிக்க ஆரம்பித்தான். கண்ணன் ரொம்பப் புத்திசாலி. ஆகையினால் ரொம்பவும் கவனமாகக் கதை கேட்பான். கேட்ட கதையை எத்தனை நாளானாலும் மறக்காமல் நினைவில் வைத்துக் கொண்டிருப்பான். மற்றப்பையன்களுக்கு அந்தக் கதைகளைச் சொல்லுவான். ஆகையினால் அப்பாவும் ஆசையோடு கதை சொல்லுவார்.

அப்பா வழக்கம்போல் அன்றும் ஒரு கதை சொல்ல ஆரம்பித்தார் :

"ஒரே ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தான். அவன் தன் நாட்டு ஜனங்களிடம் மிகவும் அன்போடு நீதி தவறாமல் அரசு புரிந்து வந்தான்.

"ஒரு நாள் அரசன் உற்சாகமாகப் பொழுது போக்க விரும்பிக் காட்டுக்கு வேட்டையாடப் போனான். அவனுடன் ஆயுதம் தாங்கிய படை வீரர்கள் தாரை, தப்பட்டை, கொம்பு முதலிய வாத்தியங்களுடன் போனார்கள்.

"காட்டு விலங்குகள் இந்த வாத்தியங்களின் கொடிய சத்தம் கேட்டுக் குழப்பமடைந்து நாலாபுறமும் ஓட ஆரம்பித்தன. உடனே வீரர்களும் அரசனும் கையில் வில்லும் அம்புமாக அவைகளைத் தொடர்ந்து சென்று போராடிக் கொன்று தீர்த்தனர்..."

அப்பா இப்படிக் கதை சொல்லிக் கொண்டிருக்கும் போது கண்ணன் குறுக்கிட்டு, "அப்பா, அவர்கள் மான்களைக் கூடக் கொன்று விட்டார்களா?" என்றான்.

"ஆமாம், கண்ணா!" என்றார் அப்பா.

கண்ணன் உடனே எழுந்திருந்து 'குடு குடு' வென்று ஓடி, அலமாரியிலிருந்து ஒரு மான் குட்டி பொம்மையை எடுத்துக் கொண்டு வந்து, "அப்பா, இந்த மாதிரி அழகாகப் பார்க்கும் மான் குட்டிகளைக்கூட அவர்கள் கொன்று விட்டார்களா? பெரிய மான்களோடு பல குட்டி மான்களும் செத்துப் போயிருக்குமல்லவா? இவ்வளவு அழகான மான்களையும், மான் குட்டிகளையும் என்னத்துக்காகக் கொல்ல வேண்டும்? அந்த ராஜா ஒரு கொலைகாரரா?" என்று மிகவும் அநுதாபத்தோடு கேட்டான்.

"இல்லை, கண்ணா! வேட்டையாடுவது மகா ராஜாக்களுக்கு ஒரு இன்பமான பொழுது போக்கு!" என்றார் அப்பா.

"அரசனுக்கு அது இன்பமான பொழுது போக்காயிருக்கலாம். மானுக்கு அது தாங்க முடியாத துன்பமாகத்தானே இருந்திருக்கும், அப்பா? எப்படியிருந்தாலும் அது கொலைதானே?" இப்படிக் கேட்கும் போது கண்ணனின் குரலில் சோகம் கலந்திருந்தது.

"வேட்டையாடுவதைக் கொலைக் குற்றத்தில் சேர்க்க முடியாது, கண்ணா! இந்தக் காலத்தில் கூட ஜமீன்தார்களும் அரசாங்கத்து அதிகாரிகளும் வேட்டையாடுகிறார்கள்; மிருகங்களைக் கொல்லுகிறார்கள்!" என்றார் கண்ணனின் அப்பா.

"மிருகங்களைக் கொன்றால் அது கொலையில்லையா, அப்பா! இந்த மாதிரி வேட்டையாடும் கொலைகாரர்களைப் போலீஸ்காரர்கள் ஏன் பிடித்துக் கொள்ளக் கூடாது?" என்று ஒரு பெரிய உண்மையைக் கண்டு பிடித்து விட்டது போன்ற உணர்ச்சியோடு கேட்டான் கண்ணன்.

அப்பா, "மானையும் மற்ற மிருகங்களையும் வேட்டையாடிக் கொன்றால், போலீஸ்காரர்கள் வேட்டையாடிய மனிதர்களைப் பிடித்துக் கொள்ளக் கூடாது. மனிதனைக் கொன்றால்தான் போலீஸ்காரர்கள் பிடித்துக் கொள்ளுவார்கள்!" என்றார்.

கண்ணனுக்கு ஆத்திரம் வந்து விட்டது. "மானைக் கொன்றாலும் அந்த மனிதனைப் பிடித்துச் சிறையில் அடைக்க வேண்டும், அப்பா! இது என்ன அநியாயம்?" என்றான் கண்ணன்.

"மிருக வேட்டை யாடலாம். அதற்குச் சட்டம் இடம் தருகிறது, கண்ணா!"

"மனித வேட்டை......?"

அப்பா, சிரித்துக் கொண்டே, "மனிதர்கள் மனித வேட்டையும் ஆடுகிறார்கள், கண்ணா! அதற்குத் தான் யுத்தம் என்று பெயர்!" என்று அவனுக்கு விளக்கினார்.

கண்ணனுக்கு அது விளங்கவில்லை. மேலும் அவன் இன்னும் மானின் நினைவிலேயே இருந்தான்.

"ஏன் அப்பா, மனிதனைக் கொன்றால் போலீஸ்காரர்கள் பிடித்துக் கொள்ளுகிறார்கள்? மானைக் கொன்றால் மட்டும் ஏன் பிடித்துக் கொள்ளுவதில்லை? எனக்கு விளங்கும்படி சொல்லுங்கள்!"

"மானைக் கொல்லுவதற்கும் ஒரு மனிதனைக் கொல்லுவதற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது..."

"...இப்படி மனிதன்தானே அப்பா, நினைக்கிறான்? மான் என்ன நினைக்கிறது என்று யாருக்காவது தெரியுமா?"



கண்ணனின் இந்தக் கேள்விக்கு அப்பாவால் நேரடியாக எதுவும் பதில் சொல்ல முடியவில்லை.

மனித உயிரின் மேன்மையைப் பற்றிக் கண்ணனுக்கு விளங்கும்படியாக அப்பா என்னென்னவோ சொல்லிப் பார்த்தார். ஆனால் அவனைச் சமாதானப் படுத்த அவரால் முடியவில்லை.

கண்ணன் மறுபடியும் 'குடு குடு'வென்று ஓடினான். அலமாரியிலிருந்து அழகிய புத்தர் பொம்மையை எடுத்துக் கொண்டு வந்தான். அது மண்ணில் செய்த பொம்மையானாலும், உயிரும் உணர்ச்சியும் கொண்ட கௌதம புத்தரின் நிஜ உருவமாகவே தோற்றம் அளித்தது; நொண்டி ஆட்டுக் குட்டியின் மீது அநுதாபம் கொண்டு அதைத் தம் தோளில் போட்டுக் கொண்டிருக்கும் பாவனையில் புத்தர் பிரான் கருணை பொங்கும் பார்வையுடன் காட்சி தந்தார்.

அப்பா புத்த பகவான் பொம்மையையும் கண்ணனையும் மாறி மாறிப் பார்த்தார். எல்லையற்ற அன்பு புத்த பகவான் முகத்தில் ததும்பியது. கண்ணனின் முகத்திலும் அதே களையைக் கண்டார், அப்பா. கண்ணனின் முகம் அவரை வசீகரித்தது.

"அப்பா, இந்த புத்தர் பொம்மையைப் பாருங்கள். ஆகா! கள்ளம் கபடு தெரியாத ஒரு ஆட்டுக் குட்டிக்காக அவர் மனம் எவ்வளவு இரக்கம் பாராட்டியிருக்கிறது! ராஜ்யம் ஆள வேண்டிய ராஜாவாகப் பிறந்த அவர் இந்த மாதிரி ஆட்டுக் குட்டியைத் தோளில் போட்டுக் கொண்டு நிற்பது நம்முடைய மனசை உருக்கவில்லையா? இவரைப் பற்றி அன்றைக்கு ஒரு நாள் சொன்ன போது, 'புத்த பகவான் உண்மையாக வாழ்ந்திருந்த மகா புருஷர்' என்று சொன்னீர்களே! மனித குலத்துக்கு உலகில் ஏற்படும் கஷ்டங்களை நீக்குவதற்காகவே அந்த மகா புருஷர் அரண்மனை வாழ்வைத் துறந்தார் என்று சொல்லவில்லையா நீங்கள்? மனித உயிரைப் போலவே அந்த மகான் எல்லா உயிர்களையும் நேசித்து அன்பு பாராட்டியிருக்கிறாரே! அவருக்கு இந்தச் சட்டம் தெரியாதா?" என்று கண்களில் தனி ஒளியுடன் கேட்டான் கண்ணன்.

அப்பா என்ன பதில் சொல்லுவார் அவனுக்கு! வியப்பும் அன்பும் பொங்கக் கண்ணனை வாரிக் கட்டித் தழுவிக் கொண்டார். புத்தர் பிரானின் களை பொருந்திய பொம்மை சாந்தம் தவழும் முகத்துடன் அவர்கள் பக்கத்தில் இருந்தது.

பிரஷால் தேய்ப்பதால்
கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் ஈறுகளைப் பலப்படுத்துகிறது



இதோ! குளோரோபில்* டூத் பேஸ்டின் பூரண நன்மைகள் அடங்கிய புதிய, விசேஷ கால்கேட் சூத்திரம்!

குளோரோபிலின் நன்மைகளை பத்திரமான, ரஞ்சிதமான உருவில் தருகிறது கால்கேட் சூத்திரம்....கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் துரிதமாக, திருத்தமாகச் செயலாற்றுகிறது...அது தரும் சுத்தம் மணிக்கணக்காக நீடிக்கும்!

...பலமான ஈறுகள் புதிய, இனிய சுவாசம் பெற...சாப்பிட்டவுடன் கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை உபயோகிக்கவும். சிறந்த பற்பசைகளைத் தயாரிக்கும் உலகிலேயே மிகப் பெரிய ஸ்தாபனத்தின் உன்னத குளோரோபில் டூத் பேஸ்ட்.

பாக்டீரியாவை ஒழிக்கிறது!

எனாமலை அறிக்கும் தீய அமிலங்களையும் ... அவற்றைத் தோற்றுவிக்கும் பாக்டீரியாவையும் குறைக்கிறது.

ஈறுகளைப் பலப்படுத்துகிறது!

குளோரோபிலின் நன்மைகளைப் பயன்படுத்தி, ஈறுகளைப் பலப்படுத்த கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் உதவுகிறது.



* நீரில் கரையும் குளோரோபிலின்ஸ் சேர்ந்தது

CTP/6/4

புதிய பச்சை டூத்பேஸ்ட் பரீட்சித்து உத்தரவாதம் அளிப்பது கால்கேட்

பெருமையில் பங்கு

சரலன்

மனிதன், யாருக்கு வசப்பட்டாலும் படாவிட்டாலும், விதிக்கு வசப்பட்டுத்தான் ஆகவேண்டும் என்பது எத்தனை உண்மை!

சுப்புரத்தினம் திடமாயிருந்தவர்தான். வயது நாற்பத்தெட்டு தான் ஆகின்றது; இன்னும் ஏழெட்டு வருஷம் உத்தியோகம் பார்த்தபின், ஓய்வுபெற வேண்டியவர். ஆனால் திடீரென்று பாரிச வாயுவினால் வலக்கையின் சேவையை இழக்க நேரிட்டது. விதியின் திருவிளையாடல் என்று சொல்லாமல் வேறென்னவென்று சொல்வது!

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பே மனைவியை இழந்து விட்ட அவர், அவள் விட்டுச் சென்ற இரு குழந்தைகளின் எதிர்காலத்தைக் கருதி, மறு மணம் புரிந்து கொள்ளாமலே, குழந்தைகளை அக்கறையுடன் வளர்த்து உருவாக்கினர். மூத்தவன் ராமு என்ற ஆண். இளையவளின் பெயர் கோதாவரி.

குழந்தைகள் தங்கள் தாயாரை இழந்தபோது, முறையே ஒன்பது வயதும் ஏழு வயது முள்ளவர்களாயிருந்தனர். வயதுக் கிரமப்படிப் பார்த்தால் ராமுதான் முதலில் ஸ்கூல் பைனல் பரீட்சையில் தேறியிருக்க வேண்டும். எனினும் இந்தப் பொல்லாத பரீட்சைப் பேய், இருமுறை அவனை மேல் வகுப்புக்குச் செல்லவொட்டாமல் தடுத்து நிறுத்தி விட்டது. ஆனால் அதே பேயின் ஜபம் கோதாவரியிடம் சாயவில்லை. எனவே சகோதர சகோதரி இருவரும் ஒரே ஆண்டில் ஸ்கூல் பைனலில் படிக்க நேர்ந்தது.

அந்த வருஷந்தான் சுப்புரத்தினத்தின் கை சுவாதீனத்தை இழந்தது. அதன் பலனாக அவர் வேலையிலிருந்து கட்டாய ஓய்வு பெறவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. வேறு சொத்து சுதந்திரம் இல்லாத காரணத்தினால், உத்தியோகம் போனபின் அவருடைய நிலை அவலமாகி விட்டது.

பெண்ணின் கல்யாணத்துக்கென்று கொஞ்சம் பணம் சேமித்திருந்தார். இப்போது வேலை இன்றித் தவிக்கவே, அதைக் கொண்டு ஜீவனத்தை நடத்தும்படியாகி விட்டது.

ராமு ஸ்கூல் பைனலில் தவறி விட்டான். தங்கை தேறி விட்டாள். அப்பொழுது அவன் மனம் பட்ட பாட்டைச் சொல்லி முடியாது. ஓர் தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டு அவன் உள்ளத்தை உருக் குலைத்துக் கொண்டிருந்தது. ஓர் பெண்ணுக்கு உள்ள அறிவும் ஆற்றலும் தனக்கில்லையே என்று மிகவும் தாபப்பட்டான்.

சுப்புரத்தினம் தன் பெண் தேறியதற்காகத் துள்ளிக் குதிக்கவில்லை. ஆனால், பையன் பரீட்சையில் தவறி விட்டதற்காக ரொம்பவும் தாபப்பட்டார். ஏனெனில், அவனை நம்பித்தான் இனி குடும்பம் நடக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டிருந்தது. இதை எதிர்பார்த்த அவருக்கு அவனுடைய பரீக்ஷைத் தோல்வி பலமான தாக்குதலாயிருந்தது. இந்தக் காலத்தில் படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கே வேலை கிடைப்பது துர்லபமாயிருக்கும்போது, பரீக்ஷையில் தேறாத தன் மைந்தனுக்கு யார் வேலை தரப் போகிறார்கள்! தன் குடும்பத்தின் எதிர்காலத்தின் நிலைதான் என்ன!


இதை எண்ணிப் பார்த்தபோது ஒன்றும் தோன்றாமல் தவித்தார் சுப்புரத்தினம். மாதங்கள் ஓடிக் கொண்டிருந்தன. சேமிப்புப் பணமும் ஜலத்திலிட்ட சர்க்கரை போலக் கரைந்து கொண்டே வந்தது. பெண்ணின் கல்யாணத்துக் கென்று வைத்திருக்கும் பணமும் தீர்ந்து விட்டால், பின்னால் குடும்பம் எப்படி நடப்பது என்ற கவலை அவரை வெகுவாய் வாட்டியது. அப்போதுதான் அவன் நண்பர் மணியான யோசனை ஒன்று கூறினர்.


"வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு ஏங்குவார் உண்டா, ஐயா! உங்களுடைய பெண் கோதாவரிதான், எஸ். எஸ். எல். ஸி. தேறியிருக்கிறாளே! நானேக்கே அவளுக்கு வேலை தேடித் தருகிறேன். அவள் சம்பாதிக்க ஆரம்பித்தால், நிலைமை சரியாகி விடும். என்ன சொல்லுகிறீர்கள்!" என்று கேட்டார்.

ஒருகணம் சிந்தித்தார் சுப்புரத்தினம். வீட்டில் இரண்டு ஆண்கள் இருக்கும் போது, பாவம், ஒரு பெண் சம்பாதித்துப் போடுவதா! என்ன கொடூரம்! ஆனால் வேறு மார்க்கம்! பெண்ணின் விருப்பம் எப்படியோ!

அவருடைய மனத்தில் தோன்றிய எண்ணத்தைக் கோதாவரி எப்படித் தான் ஊகித்தாளோ! "அப்பா, ஏன் யோசிக்கிறீர்கள்! நான் உத்தியோகம் செய்யத் தயாராயிருக்கிறேன்" என்றாள்.

குழந்தையின் பொறுப்புணர்ச்





நிலையைக் கண்டு அவர் பேசக் கூடச் சக்தியற்று உணர்ச்சி வசப்பட்டார்.

"குழந்தாய்! என் துரதிர்ஷ்டம் உன்னையுமா வாட்ட வேண்டும்! இந்த வயதில் கல்யாணம் செய்து கொண்டு, கணவனுடன் இன்பமாக வாழ வேண்டிய நீ, நமது குடும்பத்தைக் காக்க முன் வருகிறாய். உன் அண்ணன் ஒன்றுக்கும் உதவாமல் வெட்டிச் சோறு தின்கிறான். என்ன காலக் கேடு இது!" என்றார் கப்புரத்தினம்.

கோதாவரி இடை மறித்து, "அப்பா! அண்ணாவைப் பற்றி இம்மாதிரி சொல்லாதீர்கள். பரீக்ஷை தவறியது முதலே அவன் மனம் ஒடிந்திருக்கிறான். கேவலம் இந்தப் பரீக்ஷையின் முடிவைக் கொண்டு ஒருவனுடைய திறமையை நிர்ணயித்துவிட முடியுமா! நான் பரீக்ஷையில் தேறி விட்டதால் மகா பிராக்ஞையாகி விட்டேன் என்று அர்த்தமா! எழுத்து வாசனையே இல்லாத எத்தனையோ பேர் ஏராளமாய்ப் பணம் குவிக்கவில்லையா! அண்ணாவின் காதில் படும்படி நீங்கள் இம்மாதிரி பேசாதீர்கள். நாளைக்கே காலம் மாறலாம். அண்ணா சம்பாதிக்கத் தொடங்கலாம்" என்று கூறினாள் கோதாவரி.

ஏதோ ஆத்திரத்தினால் அம்மாதிரி கூறி விட்டாரே தவிர கப்புரத்தினத்துக்குப் பின்னால் மனம் வேதனையடையத்தான் செய்தது. அந்த வேதனையோடு குடும்பத்தைக் காப்பாற்றப் பெண் சம்பாதிக்கப் போவதா என்ற வேதனையும் வேறு சேர்ந்து அவரை இரவு முழுதும் தூங்க விடவில்லை.

மறுநாள் காலை எழுந்தபோது, உற்சாகமின்றிக் காணப்பட்ட ராமுவைப் பார்த்து, "அண்ணா! ஏன் ஒருமாதிரியாய் இருக்கிறாய்!" என்று கேட்டாள் தங்கை கோதாவரி.

"கோதாவரி! தடியன் போல நான் இருக்கும்போது நீ சம்பாதிக்கப் போகிறதா! இதை நினைக்கவே என் மனத்தை என்னமோ செய்கிறது. இப்படி உதவாக் கறையாக, பூமிக்குப் பாரமாக நான் வாழ வேண்டுமா!" என்றான்.

அதைக் கேட்ட கோதாவரிக்குப் பகீரென்றது. ஏதாவது விபரீதமாய் முடிந்து விடுமோ என்று அஞ்சினாள். ஒருவேளை முதல் தினம் தன் தந்தை அவனைப் பற்றி வெறுப்புடன் கூறியதைக் கேட்டு விட்டுத்தான் இம்மாதிரி துயரப் படுகிறானோ என்றும் எண்ணினாள்.

"அண்ணா! நீ ஏன் பயப்படுகிறாய்! சிறிது காலம் நான் உத்தியோகம் பார்ப்பதில் தவறு ஒன்றுமில்லை. உனக்குக் கௌரவக் குறைவு ஏற்பட்டு விடாது. நீ பேசாமலிரு. ஒருநாள் நீயும் சம்பாதிக்காமல் இருக்கப் போவதில்லை. வீணாக ஏங்காதே" என்று சமாதானப் படுத்தினாள்.

இருந்தாலும் அவன் மனம் சலனமுற்றுத் தவித்தது. ஒரு பெண் சம்பாதித்து நாம் குடும்பம் நடத்துவதா! ஆணினத்துக்கே அவக்கேடான விஷயம் அல்லவா என்ற எண்ணம்தான் மேல் ஓங்கி நின்றது. இருந்தாலும் அந்த நிலையில் அவன் என்ன செய்ய முடியும்!

சொன்னபடி கப்புரத்தினத்தின் நண்பர் கோதாவரியை வேலைக்காக அழைத்துக் கொண்டு போனார். அந்தக் காரியாலய அதிகாரி கேட்ட

கேள்விகளுக் கெல்லாம் தக்க பதில் கூறினுன் கோதாவரி. அதிகாரிக்கு அவளைப் பிடித்து விட்டது. அவளுக்கு வேலை தரச் சம்மதித்தார்.

கோதாவரிக்கு உத்தியோகத்துக்கு உத்தரவும் தோழியின் திருமண அழைப்பிதழும் சேர்ந்தாற்போல் வந்தன. அவள் உத்தியோகத்தை உடனே ஒப்புக் கொள்ளாமல் தோழியின் கல்யாணத்துக்குச் சென்று விட்டாள். நான்கு தினங்களுக்குப் பிறகு சுப்புரத்தினத்துக்கு ஒரு திடுக்கிடும் செய்தி கிட்டியது. தன் மகளுக்குக் கிடைப்பதா யிருந்த வேலையை இன்னொரு பையனுக்கு ஒதுக்கிவிட்டார்கள் என்பதுதான் அந்தச் செய்தி. அதைக் கேட்டதும் அவர் தம் பெண்ணின் பேரில் ஆத்திரப்பட்டார். முதலில் பெண் சம்பாதித்துத் தாம் சாப்பிடுவதா என்று தாபப்பட்டவர், இப்பொழுது கைக்குக் கிட்டிய வேலை நழுவி விட்டதே என்று எண்ணி ஆத்திரப் பட்டார்.

"அப்பா! அப்பா!" என்று உற்சாகத்துடன் உள்ளே நுழைந்தான் ராமு அப்போது. அத்தனை உற்சாகத்துடன் அவன் சமீப காலமாக இருந்ததில்லை. எனவே "என்னடா!" என்ருர்.

"எனக்கு வேலை கிடைத்திருக்கிறது. நாளை முதல் வேலையை ஒப்புக் கொள்ள வேண்டும்" என்ருன் ராமு துள்ளியபடியே.

"பரீட்சையில் தேருத உனக்கு எவன் வேலை கொடுத்தான்!" என்ருர் அவநம்பிக்கையுடன்.

"இந்த அக்டோபர் பரீட்சையில் நான் தேறி விட்டேன், அப்பா! உங்கள் யாருக்கும் தெரியாது அது. இதோ பாருங்கள், உத்தரவை" என்று நீட்டினுன் காகிதத்தை.

ஆம். அவனை வேலையில் நியமிக்கும் உத்தரவுதான் அது. சம்பளம் எண்பது ரூபாய்!

கண்களை அகல விரித்தபடியே அதைத் திரும்பத் திரும்பப் படித்தார் சுப்புரத்தினம். "நீ எப்போது இதற்கு விண்ணப்பம் போட்டாய்! என்னிடம் கூறவில்லையே!" என்று கேட்டார்.

"அதுதான் அப்பா, எனக்கும் ஆச்சரியமாக இருக்கிறது. நான் விண்ணப்பமே போடவில்லை. என் பெயரும் விலாசமும் இந்தக் காரியாலயத்துக்கு எப்படித் தெரிந்தது என்பதே புதிரா யிருக்கிறது!" என்ருன் ராமு. பரீட்சை தேறியதில் மகிழ்ச்சி யடைந்தானே தவிர, தனக்கு இந்த வேலை யாருடைய உதவியால் கிட்டியது என்பது அவனுக்குத் தெரியவில்லை.


தந்தையும் தனயனும் இப்படி ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுதுதான் கோதாவரி உள்ளே பிரவேசித்தாள். அவளுடன் கூடவே ஒரு பெரிய மனிதரும் உள்ளே நுழைந்தார்.

"அப்பா! இவர்தான் எனக்கு வேலை தருவதாக வாக்களித்த அதிகாரி" என்று அவரைக் கோதாவரி அறிமுகம் செய்து வைத்தாள்.


"ஐயா! உங்கள் பெண்ணின் விவேகத்தை எப்படிப் போற்றுவது என்று எனக்குத் தெரியவில்லை. வேலையை ஒப்புக் கொள்ளப் பத்துநாள் தவணை கேட்டாள். என்ன காரணம் என்று கேட்க வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. இருந்தாலும் அன்று அதை அடக்கிக் கொண்டேன். நான் சென்றிருந்த ஒரு கல்யாணத்தில் எதிர்பாராதபடி இவளைச் சந்தித்தேன். அப்போதுதான் சொன்னுள். அதாவது தனக்காக வேலை தேடவில்லையாம் இவள்! இவளுக்கு ஒரு தமையன் இருக்கிருனும். அவன் ஸ்கூல் பைனல் பரீட்சையில் தவறி விட்டதால், மனச் சஞ்சலப்பட்டுத் தவிக்கிருனும். ஆனல் அவன் இந்த அக்டோபர் பரீட்சைக்குப் போயிருக்கிருனும் ரகசியமாக. அதை எப்படியோ உங்கள் பெண் அறிந்து கொண்டிருக்கிருள். இன்னும் ஒரு வாரத்துக்குள் பரீட்சை முடிவு வெளி வரப் போவதாய்த் தெரிய வந்ததால், அநேகமாய் அதில் தேறி விடுவான் என்றும், பின்னர் தனக்கு நான் தருவதாய்ச் சொன்ன வேலையைத் தன் தமையனுக்குக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்கத் திட்டமிட்டுத்தான் தவணை கேட்டாளாம். கல்யாணத்தில், பரீட்சை சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் வந்திருந்தார். அவர் மூலம் உங்கள் பையன் தேறிய செய்தியை அறிந்து கொண்டாள். உடனே என்னிடம் விஷயத்தைக் கூறி, தன் தமையனுக்குத்தான் அந்த வேலையைத் தர வேண்டும் என்று வேண்டினுள். அவனே விலாசமும் கொடுத்தாள். நான் 'டிரங்கு டெலிபோ'னில் என் காரியாலயத்துடன் பேசி, உத்தரவு போடச் சொன்னேன். உத்தரவும் கிடைத்திருக்குமே உங்கள் மைந்தனுக்கு! இத்தனை புத்திசாலியான பெண்ணைப் பெற்றதில் பெருமையடையத் தகுந்தவர் நீங்கள். அந்தப் பெருமையில் நானும் பங்கு கொள்ளத் தீர்மானித்து விட்டேன்" என்று கூறிப் புன்னகையுடன் கோதாவரியை நோக்கினுர் அவர். அவள் நாணத்தினுல் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

"ஆம்! என் நாட்டுப் பெண்ணும் இவளே ஏற்றுக் கொண்டு, உங்கள் பெருமையில் நானும் பங்கு கொள்ள நிச்சயம் செய்து விட்டேன்" என்று முடித்தார் அந்த அதிகாரி.

சுப்புரத்தினமும் ராமுவும் உணர்ச்சி வசமாகி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர்.



தேய்ந்த டயர்கள்
நீடித்து
உழைக்க
செப்பனிட்டுத்
தருகிறோம்
புதுப்பிக்கிறோம்
டிரக் டயர்
கார் டயர்
இதனால்
சிலவு குறைவு
பாதுகாப்பு
நீடித்த உழைப்பு
இதற்கு
உத்திரவாதமளிப்பவை
முழு வட்ட
மோல்டுகளால்
தயாரிப்பு,
டி. வி. எஸ்.
அனுபவ சாதனம்
சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
புதுக்கோட்டை
(டி.வி.எஸ். ஸ்தாபனம்)



வெற்றியின் ரகசியம்

சோலை இருசன்

"நேத்ரா! இன்றைக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. என் சட்டைப் பையில் வைத்திருக்கிறேன், பார்" என்றான், அவள் கணவன் கிருஷ்ணமூர்த்தி, முகத்தை நன்றாகக் கழுவிக் கொண்டே.

ஓடிப் போய் அந்தக் கடிதத்தை எடுத்து அவசரம் அவசரமாகப் பிரித்துப் படித்தாள். சின்ன சேலத்திலிருந்து வத்ஸலா எழுதியிருந்தாள். அந்தக் கடிதம் இதுதான்:

அன்புள்ள நேத்ராவுக்கு,

நீண்ட நாட்களுக்குப் பிறகு இந்தக் கடிதம் எழுத நானே வருந்துகிறேன். மன்னித்துவிடு. உன் நினைவு இல்லாமல் இல்லை; ஓய்வுதான் இல்லை. என் கணவருக்கு இந்த மாதம் பதினைந்து நாட்கள் லீவு கிடைக்கிறது. அந்த லீவை உன்னுடன் பெங்களூரில் கழிக்கலாமென்று நினைக்கிறோம். அடுத்த ஞாயிறு காலை ஜனதாவில் அங்கு வந்து சேர்ந்து விடுவோம்.

அன்புள்ள
வத்ஸலா

இந்தக் கடிதத்தைக் கண்டதும் அவள் மன அரங்கில் பலவிதமான புதுமைக் காட்சிகள் தாண்டவமாடின.

வத்ஸலாவும் அவள் கணவன் ஸ்ரீதரனும் அவள் வாழ்வில் குறுக்கிட்டு எத்தகைய பரீட்சைகள் நடத்தி மன வேதனையை உண்டாக்கி விட்டார்கள்? அந்த முடிவு கூட இன்ப வேதனையாகத்தான் முடிந்தது. இருந்தாலும் மறக்க முடியுமா?

அந்த வேதனை அலையில் சிக்குண்டு அவள் மூச்சுத் திணறியபோது கைகொடுத்துக் காப்பாற்றியது அவள் அத்தான் கிருஷ்ணமூர்த்தி தான். "அத்தான்......நீங்கள்தான் என் வாழ்வின் தெய்வம்!" என்று அவள் உதடுகள் முணுமுணுத்தன. நேத்ராவின் இதய அடித்தலத்திலே, மங்கி மறைந்திருந்த அந்த நிகழ்ச்சிகள் புது நினைவு பெற்றுச் சுழன்று வந்து நின்றன.



குழந்தைப் பிராயத்திலிருந்தே நேத்ராவை நல்ல அதிர்ஷ்டக்காரி என்றே சொல்வார்கள். பெங்களூரில் பிரபல தேக்கு மர வியாபாரியான ராம மூர்த்தியின் மூன்று பெண்களுள் கடைக் குட்டிப் பெண்ணை அவளை வேறு எப்படிச் சொல்ல முடியும்? அவளுக்கு அண்ணன், தம்பி என்று யாரும் கிடையாது. மற்ற இரண்டு பெண்களுக்கும் நல்ல இடத்தில் கல்யாணமாகி விட்டது. ஆகவே நேத்ராதான் அந்த வீட்டுக்குச் செல்லக் குழந்தை.

இரண்டு வயதுக் குழந்தைப் பிராயத்திலிருந்தே, தாய் தந்தையை இழந்து விட்ட

அவளுடைய ஒன்றுவிட்ட அத்தான் கிருஷ்ண மூர்த்தியும் அந்த வீட்டிலேயே வளர்ந்து வந்தான். கிருஷ்ணமூர்த்தி, நேத்ராவை விட இரண்டு மூன்று வயது மூத்தவன்தான்; இருந்தாலும், அவளை அதிகாரம் செய்து மிரட்டுவதும், கட்டளை யிடுவதும் நேத்ரா வுக்கு உடம்போடு வளர்ந்து விட்ட ஒரு குணமாகி விட்டது. அவனும் அவள் சொல் வதைத் தட்டாமல் செய்து விடுவான். மீண் டும் வந்து "தங்கள் உத்தரவுகளை நிறை வேற்றி விட்டோம்;....இன்னும் ஏதாவது... எந்த நாட்டின்மீது படை எடுக்கவேண்டும்?" என்று கேட்டுச் சிரித்துக் கொண்டே நிற் பான். அந்தச் சிரிப்பைப் பார்த்தாலே அவ ளுக்குக் கோபம் கோபமாய் வரும்.

ஆண்டு காலண்டர்கள் சில கன வேகமாக மாறி விட்டன. கிருஷ்ண மூர்த்தியின் கேலி யும் கெக்களிப்பும் நேத்ராவுக்கும் பிடிக்கவே இல்லை. அவன் தன்னை ஒரு அஃறிணைப் பொருளாக எண்ணி விட்டதாகவே தோன் றியது, அவளுக்கு.

கிருஷ்ணமூர்த்தியும், அவள் தன்னையே கோபித்துக் கொண்டாலும் சரி, வீட்டில் தாயாரிடம் அடம் பிடித்துத் தொல்லை கொடுத்தாலும் சரி அதை யெல்லாம் பொருட் படுத்தவே மாட்டான்.

நேத்ராவுக்கு அம்மா மீதுதான் அளவு கடந்த ஆசை; தன் மனசிலுள்ள எந்த விஷயமானாலும் தாயாரிடம் ரகசியமாகச் சொல்லி, காரியத்தைச் சாதித்துக் கொள் வாள். அன்று ஒரு நாள்கூட அப்படித்தான்



அவள் அம்மாவிடம் தன் அத்தானைப் பற்றிப் புகார் சொன்னாள்.

"இங்கே பாரம்மா; என் சோளி ரவிக்கை யில் இங்கியைக் கொட்டி வைத்திருக்கிறான். இது...இவன் கதை எழுதற லட்சணம்; கதை எழுதறதுன்னு, தன்னை ஏதோ ரொம்பப் பெரிய மனிதன் மாதிரியும் என்னை என் னமோ சின்ன ஜடப் பொருளாகவும் இந்த அத்தான் எண்ணிக் கொண்டிருக்கிறான். நான் ஒரு பெண்; நானும் படித்திருக்கிறேன்; எனக்கும் அறிவு உண்டு என்பதை அவன் நினைப்பதே இல்லை" என்றாள்.

அந்தச் சமயத்தில் எங்கிருந்தோ ஓடி வந்த கிருஷ்ணமூர்த்தி "நேத்ரா...ஏன் இப்படி யெல்லாம் பொய் சொல்றே? நானா உனக்கு மதிப்புத் தரவில்லை? ஹூம்...... நின்று கொண்டே பேசினால் கால் வலிக்குமே, ராணி! இப்படி இந்தச் சோபாவில் உட் கார்ந்து கொண்டே பேசலாமே?" என்று சோபா பக்கத்தில் போய் நின்று கொண்டு "சோபாவுக்குத் தாங்களே வந்துவிடுகிறீர் களா? அல்லது தங்கள் இருப்பிடம் தேடிச் சோபாவை வரவழைக்கட்டுமா?" என்று ஒரு நமட்டுச் சிரிப்பைச் சிந்தியபடியே கேலியாகக் கேட்டான்.

"அம்மா, பாரம்மா இவன் கேலி பண்ணு கிறதை?" என்று உரக்கக் கத்தினாள்.

"இதுக்குக் கூடவா நேத்ரா, இப்படி ஆர்ப் பாட்டம் செய்யறது? நீ மாமா பொண்ணு; இவன் அத்தை பிள்ளை; இப்படிக் கேலி செய்யறதுக் கெல்லாம் யாராவது கோபித் துக் கொள்வார்களா?" என்று அவள் அம்மா சொன்னது, அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. "என்னை, யார் வேண்டு மானாலும், எது வேண்டுமானாலும் சொல்லிக் கலாமோ? சேச்சே, இந்த அம்மா கூட இப்படியா?" என்று கருவிக் கொண்டே அங்கிருந்து போய் விட்டாள்.

நேத்ரா, பாவாடை கட்டும் பால பரு வம் தாண்டி, வாயல் சேலை கட்டும் வனிதை யானாள். பொட்டிட்டுப் பூச்சூடிய புதுக் குத்துவிளக்கைப் போல் அவள் அழகு பெரு கிக் கொண்டே இருந்தது. அவள் அத்தான் கிருஷ்ணமூர்த்தி சென்னையில் டாக்டர் பரீட் சைக்குப் படித்துக் கொண்டிருந்தான். ஒவ் வொரு விடுமுறையின் போதும், தன் மாமா வீட்டுக்கு வந்து விடுவான். அவளை "உலகம் தெரியாதவள்" என்று பாவித்து வந்த அவ னது சுபாவம் இன்னமும் மாறவே இல்லை.

"நேத்ரா, இந்த வயதில் நீ உன் உடல் எடையைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்; அதற்கு ஒரு வேளைச் சாப்பாட்டை நிறுத்தி விட்டு நன்றாக வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டும். கூடுமான வரையில் கோபித்துக் கொண்டு மனசை அலட்டிக் கொள்ளாமல் இருப்பது உன் உடம்புக்கு நல்லது!" என்று அவன் சொல்லிய போது அவளுக்கு

உதடுகள் படபட வெனத் துடித்தன; கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

"என் உடம்பைப் பற்றி உங்கள் 'சர்டிபி கேட்'டை யாரும் கேட்க வில்லை; ஒன்றும் கவலைப்பட வேண்டாம்; ஆமாம். தேவாங்கு மாதிரி இருந்தால் உங்கள் கண்களை உறுத் தாது. அப்படித்தானே?"

"அடடா......நான்......"

"டாக்டர்'னு தெரியும்; அதோடு இருக் கட்டும்!" என்று கோபமாக அவனைப் பார்த்து விட்டு எழுந்து போய் விட்டாள்.

கிருஷ்ணமூர்த்தி வாட்ட சாட்டமாக வளர்ந்திருந்தான். சுருள் சுருளாகக் கிராப்பு அலை பாய்ந்து கொண்டிருந்தது. பிறர் மதிக் கத் தக்க தன்மையான நடை, மூக்குக் கண்ணாடிக்குள்ளே அறிவு ஒளி வீசும் அமை திக் கண்கள். அறிவில் மட்டுமல்ல, அமைப்பி லும் நீ சிறியவள்தான் என்று பறைசாற்று வதுபோ லிருந்தது, அவளுக்கு அவனுடைய கம்பீரமான உருவம்.


அன்று ஒரு நாள் அவள், தன் பெற் றோர்கள் பேசுவதை ஒற்றுக் 'கேட்டாள். "இந்தா, தை பொறக்கப் போகிறது. இந்தத் தையில் கிருஷ்ணமூர்த்திக்கும் நம்ம நேத்ராவுக்கும் முடிச்சுப் போட்டு விட வேண்டியதுதான். நேத்ராவும் எஸ். எஸ். எல். சி.யோடு முடித்துக் கொள்ளட்டும். கிருஷ்ணமூர்த்தியும் இந்த வருஷம் 'டாக்டர், டிகிரி' வாங்கி விடுவான். நம்ப வீட்டிலேயே சந்தோஷமாக இருக்கட்டுமே?" என்றார் அவள் அப்பா.

"கிருஷ்ணமூர்த்தியும் அவளும்தான் எப்ப பார்த்தாலும் எலியும் பூனையும் மாதிரி எட்டிக்குப் போட்டியா யிருக்கிறார்களே?" என்றாள் நேத்ராவின் அம்மா.

"கல்யாணத்தைப் பண்ணி வைச்சுட்டா எல்லாம் சரியாய்ப் போய் விடும்" என்று அந்த பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டார் அவள் அப்பா.

தன் கல்யாண விஷயத்தைக் கேட்ட தும், நேத்ராவுக்கு உடல் சூடேறித் துடித் தது. அவளுக்குத் தன் அத்தான் கிருஷ்ண மூர்த்தியை மணந்து கொள்வதில் சிறிது கூட விருப்பமே இல்லை. பழகின பாலாகி விட்டாள். "பணத்திற்காகவும், என் தகப் பனுக்காகவுமேதான் என்னை மணந்து கொள்ள அத்தான் ஆசைப்படுகிறார்!" என்று நினைத்தாள். அதோடு "அத்தானுக்கு நான் சரியான ஜோடியாக, அழகும் அறிவும் உள்ளவளாகவே படவில்லையே? அவர் கண்களுக்கு நான் ஒரு பொம்மை; ஒன்றும் அறியாத பாப்பாவாக அல்லவா இருக் கிறேன்!" என்றும் எண்ணமிட்டாள்.

ஆகவே அவள், தன் பெற்றோர்களிடம் "நான் பி. ஏ. பாஸ் செய்து விட்ட பிறகு தான் கல்யாணம் செய்து கொள்வேன்!" என்று அடம் பிடித்து, கண்டிப்பாகக் கூறி



ஸ்ரீமான் ஜாப்வாலா முப்பத்தெட்டு ஆண்டுகளாகப் பம்பாய் மாகாணத்தில தொழிலாளர் சமூதாயத்துக்கு அருந் தொண்டு செய்து வந்திருக்கிறார். நூற்றுக் கணக்கான தொழிற் ஸ்தாபனங்களில் தலைவராகவும், காரியதரிசியாகவும் ஆலோசகராகவும் இருந்து தொழிலாளர் நலன்களைப் பாதுகாத்து வந்திருக்கிறார். இவர் எந்த அரசியல் கட்சியின் ஆதரவையும் நாடாமல் தொண்டாற்றி வந்திருக்கிறார். இவரது 70வது பிறந்த தின விழாவைப் பம்பாய் டெலிபோன் தொழிலாளர் சங்கத்தினர் ஜூலை 31ம் தேதி பம்பாய் தொழில் மந்திரி ஸ்ரீ சாந்திலால் ஷாவின் தலைமையில் நடத்தினார்கள். மேலேயுள்ள படத்தில் ஸ்ரீமான் ஜாப்வாலாவின் படம் திறந்து வைக்கப்பட்ட வைபவத்தைக் காணலாம்.

அதில் வென்றும் விட்டாள். கடைசியில் அவள் தகப்பனார் திருச்சி கல்லூரி ஒன்றில் சேர்த்து ஒரு நண்பர் வீட்டில் இருந்து கொண்டு படிக்க ஏற்பாடு செய்தார். அந்த நண்பரின் பெண் வத்ஸலாவும் நேத்ராவும் வகுப்புத் தோழிகள். தன் திருமணத்தையும், அத்தானையும் முற்றும் மறந்து விட்டுக் கல்லூரிப் படிப்பில் கவலையின்றி ஒன்றிவிட்டாள் நேத்ரா.

அந்தச் சமயத்தில்தான் அவள் சற்றும் எதிர்பாராத அந்தச் சம்பவம் நடந்தது. அன்றைய தினம் நேத்ராவும், வத்ஸலாவும் கல்லூரியிலிருந்து திரும்பி வந்தபோது, கையில் ஒரு தோல் பையுடன் வீட்டு முன் ஹாலில் நின்றுகொண்டிருந்தார் ஒருவர். அவரது எடுப்பான தோற்றம் அவள் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்தது. நெஞ்சம் விம்மித் தணிந்தது. புரியாத புதிரையெல்லாம் புரிய வைக்கும் கருவிதான் பெண்கள் உள்ளத்திலிருந்து கிளம்பும் பெருமூச்சு! பெண்களைக் கண்டதும் "அவர்" தயங்கினார்.

"அப்பாவைப் பார்க்க வந்திருக்கிறீர்களா?" என்று வத்ஸலா கேட்டாள்.

"ஹூம்......ஆமா...ம்..." என்று சொல்லுவதற்குள் ஆயிரம் அர்த்த வட்டமாக வளைந்து நெளிந்தார். வெட்கத்தால் அவர் முகம் வெளுத்துப் போய் விட்டது.

"அப்பா கம்பெனியிலிருந்து இன்னும் கால் மணி நேரத்தில் வந்து விடுவார். தயவு செய்து இப்படி உட்காருங்கள்" என்று ஹாலில் இருந்த சோபாவைச் சுட்டிக் காட்டினாள், வத்ஸலா.

வந்தவர் பெயர் ஸ்ரீதர் என்றும் வத்ஸலாவின் தந்தை வேலை செய்து வந்த தொழிற்சாலையில் உதவி மானேஜர் என்றும் அடுத்தடுத்துத் தெரிய வந்தது.

வத்ஸலாவின் தந்தை, அந்தத் தொழிற்சாலையில் மானேஜர்; ஆகவே, ஸ்ரீதர், அவர் வீட்டுக்கு அடிக்கடி வந்து கொண்டிருந்தார். கதையை வளர்த்துவானேன்; முதன் முதலாக ஸ்ரீதரனைக் கண்டதுமே நேத்ரா தன் உள்ளத்தை இழந்து விட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

அன்று ஒரு நாள் அவர் வந்தார்; வீட்டில் நேத்ராவைத் தவிர வேறு யாரும் இல்லை.

"நீங்கள் ஒரு உதவி செய்ய முடியுமா? என் பாட்டி எனக்குச் சமைத்துப் போட, ஊரிலிருந்து வந்திருக்கிறார். நல்ல காலமாக, அதிகக் கஷ்டமில்லாமலே ஒரு வீடும் கிடைத்து விட்டது. வீட்டுக்கு வேண்டிய சாமான்கள் சில வாங்க வேண்டும். அவைகளை எந்தக் கடையில் வாங்கினால் நல்ல தாயும், மலிவாயும் இருக்கும்? நான் இந்த ஊருக்குப் புதிது. அதனால்..." என்றார்.

நேத்ரா, தனக்குத் தெரிந்த சில கடைகளைச் சொல்லி, அந்தக் கடைகள் எங்கு இருக்கின்றன என்பது போன்ற விவரங்களையும் சொல்லி யனுப்பினாள்.

சாமர்த்தியமாகப் பேச்சுவாக்கிலேயே வீட்டில் யார் யார் இருக்கிறார்கள் என்பதையெல்லாம் தெரிந்து கொண்டு கடைசி வார்த்தையாக, "கல்யாணம்" என்பது அவருக்கு இன்னும் ஆகவில்லை என்பதையும் அவள் தெரிந்து கொண்டாள்.

ஸ்ரீதரனுக்கும், தன் அத்தான் கிருஷ்ண மூர்த்திக்கும் உள்ள வித்தியாசத்தை நினைத்துப் பார்த்தாள், நேத்ரா. தன் அத்தானாக இருந்தால் இந்தச் சாதாரண சாமான்கள் வாங்குவதற்குப் போய், எங்கே கிடைக்கும் என்று தன்னை மதித்துக் கேட்டுக் கொண்டிருப்பாரா? தானே கடைக்குப் போய் எல்லாம் தெரிந்த மாதிரியல்லவா வாங்கிக் கொண்டு வந்திருப்பார்? அத்தான் தவறு செய்யாத, தன்னம்பிக்கை யுள்ள ஒரு "இயந்திரம்." ஸ்ரீதர் மற்ற மனிதர்களைப் போலச் சாதாரண மனிதர்; இவருக்கு இதயம் உண்டு. பிறருக்கு மதிப்புத் தரும் சுபாவம் உண்டு. இது நேத்ராவுக்குப் பிடித்திருந்தது.

ஸ்ரீதர் அந்த வீட்டுக்கு வந்தால் அவருக்குச் சந்தேகமும் கூடவே வந்து விடும். ஏதாவது ஒன்றைக் குறித்துக் கேள்விகள் கேட்பார். "தபால் இங்கே எத்தனை மணிக்கு வரும்?" "வண்ணான் வாரம் ஒரு முறைதானா?" "திருச்சியில் எத்தனை காலேஜுகள் இருக்கின்றன?" இப்படிக் கிராமத்தார் கேட்கக் கூடிய எத்தனையோ

கேள்விகளை யெல்லாம் நேத்ராவைக் கேட்பார். அவள் கூறும் பதில்களும் ஸ்ரீதருக்குத் திருப்தியை யளிக்கும்.

நேத்ராவுக்குத் தன்னால் கூட ஒருவருக்கு உதவி செய்ய முடியும் என்கிற எண்ணம் நிரம்பி இன்பம் சுரந்தது. "அத்தானுக்கானால் நான் ஒரு அசட்டுப் பெண்-ஜடப் பொருளுங்கூட; ஸ்ரீதரனுக்கு நான் ஒரு அறிவுள்ள - உபயோகமுள்ள பெண்ணாகத் தோன்றுகிறேன்!" என்று நினைத்தாள்.

தினமும் மாலை வேளைகளில் ஸ்ரீதரனின் வருகையை ஆவலுடன் எதிர் பார்ப்பாள், நேத்ரா. வீட்டில் மற்றவர்கள் முன் அவர்கள் எப்படிப் பேச முடியும்? புன்சிரிப்பிலும், கண்களின் பார்வையிலும்தான் பேசிக்கொள்வார்கள். வீட்டில் யாரும் இல்லாதபோது நேத்ராவோடு ஸ்ரீதர் சகஜமாகப் பேசுவார். எல்லா விஷயங்களிலும் ஸ்ரீதரனுடைய நோக்கம் நேத்ராவுக்கு மிகவும் பிடித்துப் போயிருந்தது. பற்பல இன்பக் கனவுகள்; ஒரு நீல மணி மாளிகை; சுற்றிலும் வண்ணப் பூந்தோட்டம்; ரத்ன்மணி ஊஞ்சல்; அந்த வான ஊஞ்சலில், தானும் ஸ்ரீதரனும் சிறகடித்துப் பறப்பதாக நேத்ராவின் உள்ளம் உருவகப் படுத்தியது.

பிறகு ஒரு நாள் தன் வகுப்புத் தோழியான ஞானத்தின் வீட்டுக்குப் போய் விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தாள்; வீட்டுக்குள் நுழைந்ததும் முன் அறையில் மெதுவான பேச்சுக் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு அங்கேயே நின்று கேட்டாள்.

"ஆமாம், வத்ஸலா! ஆறு மாதமாக உன் சம்மதத்துக்காகக் காத்துக் கொண்டிருந்தேன்; இந்த உன்னுடைய சம்மதத்தை நீயே உன் அப்பாவிடம் சொல்லப் போகிறாயா? அல்லது நானே கேட்கட்டுமா?" என்றார் ஸ்ரீதரன்.

"ஊஹூம்...நான் எப்படிக் கேட்கிறது? நீங்கள் அப்பாவிடம் எப்பொழுது கேட்கப் போகிறீர்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்று இழுத்தாள் வத்ஸலா.

இதைக் கேட்டதும் வானம் இடிந்து தலை மேல் விழுந்து, இந்த அண்ட சராசரங்கள் எல்லாம் தன்னை விட்டு எங்கோ விலகி விட்டது போலிருந்தது, நேத்ராவுக்கு.

"ஸ்ரீதர் என்னைக் காதலிப்பதாக அல்லவா நினைத்து ஏமாந்தேன். வத்ஸலாவின் தோழி என்றல்லவா என்னிடம் அவர் மரியாதை காட்டியிருக்கிறார்; அதை வேறு விதமாக நினைத்துக் கொண்டது என் தவறுதானே? தவறா? இருக்காது; இருக்கவே இருக்காது. நான் தவறாக நினைக்கவே மாட்டேன். நான் நினைத்தது தவறு அல்ல; ஸ்ரீதர் இப்பொழுதுதான் தமது அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டிருக்கவேண்டும்..."

வத்ஸலாவையும் ஸ்ரீதரனையும் சேர்த்து பார்க்கும் போது, நேத்ராவின் உடல் கூனிக் குறுகியது. கல்லூரி விடுமுறை விட்டதும் படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு ஊருக்குத் திரும்பி வந்தாள். இங்கேயும், டாக்டர் பட்டம் பெற்று ஊருக்குத் திரும்பி வந்திருக்கும் அத்தான், தன்னை அவமதிக்கும் வீட்டில் எப்படிக் காலந் தள்ளப் போகிறோம் என்று நினைத்ததும் அவள் மனம் பலவிதமாக அலைக்கழிந்தது.

ஆனால், அவள் நினைத்தமாதிரி ஒன்றும் நடக்கவில்லை. முன்பெல்லாம் வீடே உலகமாக நேத்ராவே ராஜ்யமாக அவளைச் சுற்றிச் சுற்றி வந்து அவள் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தி இப்போது ஒரு நிமிஷம்கூட வீணாக்காமல் ஓடியாடி நோயாளிகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். பணத்தை எதிர் பாராமல் சேவையே தன் லட்சியமாகக் கொண்ட டாக்டர்களுக்குத் தளர்வு ஏது?

இப்பொழுதெல்லாம் கிருஷ்ணமூர்த்தி நேத்ராவைக் கேலி செய்வதில்லை; அதற்கு அவனுக்கு நேரம்தான் ஏது? அவனுடைய முகம் எப்போதும் பெருமிதம் நிறைந்தே காணப்பட்டது.

இரண்டு மாத லீவு முடிந்து கல்லூரி திறந்ததும் மீண்டும் நேத்ராவைத் திருச்சியில் கொண்டு விடுவதற்காக ஏற்பாடு செய்து வந்தார், அவள் அப்பா. "படிப்பில் விருப்பமில்லை!" என்று அவள் எப்படிச் சொல்ல முடியும்? எந்தக் காரணத்துக்காகத் திருச்சிக்குப் போக மாட்டேன் என்று அவரிடம் சொல்ல முடியும்?

ஒரு நாள் அவள் அம்மாவைக் கட்டித் தழுவி, தன் உள்ளத்தை அரித்துக் கொண்



ஆகஸ்டு மீ 15உ சுதந்திரத் திருநாள் கொண்டாட்டத்தை யொட்டி முத்தியாலுப் பேட்டை யுவர் காங்கிரஸின் ஆதரவில் ஸ்ரீமதி எஸ். சீதாலக்ஷ்மியின் இனிய சங்கீதக் கச்சேரி நடைபெற்றது.

டிருந்த அந்த ஏக்கத்தை வெளியிட்டுக் கதறினாள். "இதற்குத்தானா இப்படி அழுது கொண்டிருக்கிறாய்? நான் அப்பொழுதே நினைத்தேன், அடி அசட்டுப் பெண்ணே! இதற்குப் போய் யாராவது அழுவார்களா? ஸ்ரீதரன்தானா இந்த உலகத்தில் கடைசி மாப்பிள்ளை? அவனைவிட அழகானவன்தான் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறான்!" என்று அவளுக்குத் தைரியம் சொன்னாள் அம்மா.

ஒரு நாள் நேத்ரா உடம்பை வலிக்கிறதென்று படுத்து விட்டாள். அப்பா ஏதோ வேலை நிமித்தமாய் வெளியூர் போய் விட்டிருந்தார். அவள் அம்மாதான் அவளைக் கவனித்துக் கொண்டாள். அவள் அத்தான் கிருஷ்ணமூர்த்தியும் மத்தியானம் சாப்பிட்டு விட்டு, வெளியில் போய் விட்டிருந்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் நேத்ராவுக்கு நடுக்கம் கண்டது. குளிர் காய்ச்சல் வந்து தூக்கித் தூக்கிப் போட்டது. கம்பளியை எடுத்து அவள் மீது போர்த்தி விட்டுப் பக்கத்திலேயே இருந்தாள் அம்மா.

"சுவாமி! என்னைக் காப்பாற்று!" என்று பிரார்த்தித்துக் கொண்டாள். அத்தானைக் கூடக் காணோமே! அத்தானாவது வரக் கூடாதா?" என்று கண்களில் கண்ணீர் புரள வாசல் பக்கம் பார்த்தாள்.

சாயங்காலம் கையில் தோல்பையை ஏந்தியபடி கிருஷ்ணமூர்த்தி வீட்டுக்குத் திரும்பினான்.

அங்கிருந்த நிலையைப் பார்த்து விட்டு "நேத்ராவுக்கு உடம்பு சரியில்லையா?" என்றான் நிதானமாக. பிறகு பையைத் திறந்து 'ஸ்டெதஸ்கோப்'பை எடுத்து அவள் முதுகில் வைத்துப் பார்த்தான். பிறகு ஒரு ஊசியும் போட்டான்.

"பயமொன்றுமில்லையே?"—நேத்ராவின் கண்களில் கண்ணீர் பொங்கி வழிந்தது.

கிருஷ்ணமூர்த்தி அவளைப் பார்த்துச் சிரித்தான். "இன்னும் சின்னக் குழந்தை மாதிரி அழலாமா? இது ஒரு சாதாரணக் காய்ச்சல். சீக்கிரம் குணமாகி விடும். இதற்காக ஏன் மனசை அலட்டிக் கொள்ளுகிறாய்? பால் மட்டும் சாப்பிட்டு விட்டு நன்றாகத் தூங்கு" என்றான்.

இப்போது தன் அத்தானின் சிரிப்பைப் பார்த்தோ, அந்தப் பதிலைக் கேட்டோ, நேத்ராவுக்குக் கோபமே வரவில்லை. ஆனால் அசாதாரணமான தைரியத்தையும், விவரித்துக் கூற முடியாத மன ஆறுதலையும் பெற்றாள். தன் அத்தானின் அசைக்க முடியாத நம்பிக்கையும் உறுதியும், அவளுக்குப் புதிய பலத்தை அளித்தன.

எந்த உறுதியையும் நம்பிக்கையையும் முன்பு வெறுத்து வந்தாளோ அவைதான் இப்போது அவளுக்குப் புதுத் தெளிவை உண்டாக்கியது.

கிருஷ்ணமூர்த்தி, நேத்ராவை மிகுந்த சிரத்தையுடன் கவனித்து மருந்து கொடுத்துக் கொண்டிருந்தான். மறுநாள் அவள் அப்பாவும் வந்தார். கிருஷ்ணமூர்த்தியின் இடைவிடாத கவனிப்பின் காரணமாக, எதிர்பார்த்திருந்ததை விடச் சீக்கிரமே குணமாகி எழுந்து விட்டாள் என்றால் அந்த வீட்டாரின் மகிழ்ச்சியை அளவிட முடியுமா?

"அத்தான்! உங்களால்தான் நான் பிழைத்தேன். என் கண்களைத் திறந்து விட்டதும் தாங்களே; நான் ஏதாவது தவறு செய்திருந்தால் மன்னித்துவிடுங்கள், அத்தான்!" என்று ஓடிப்போய்த் தன் அத்தானின் காலில் விழுந்து குழந்தையைப் போலத் தேம்பித் தேம்பி அழுதாள் நேத்ரா.

"நேத்ரா, எப்பொழுதும் நீ குழந்தைதானா?" என்று கிருஷ்ணமூர்த்தி அவளைத் தூக்கினான். அத்தான் கரத்தின் அந்த ஸ்பரிசம் அவள் உள்ளத்தையும் உடம்பையும் சிலிர்க்க வைத்து விட்டது.

அடுத்துச் சில மாதங்களுக்குப் பிறகு கிருஷ்ணமூர்த்திக்கும் நேத்ராவுக்கும் திருமணம் வெகு சிறப்பாக நடந்தது.

கல்யாணத்துக்கு இரண்டு நாட்களுக்கு முன்பே திருச்சியிலிருந்து வத்ஸலாவின் குடும்பத்தினரும் ஸ்ரீதரனும் வந்திருந்தனர். கல்யாணத்துக்கு முதல் நாள் தோட்டத்துப் பக்கம் சென்ற நேத்ரா, அவள் அத்தானும், ஸ்ரீதரனும் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டுத் திடுக்கிட்டாள்.

"உன்னுடைய உதவிக்கு ரொம்பவும் நன்றி, ஸ்ரீதர். உன்னுடைய அருமையான யோசனையின்படியல்லவா எனக்கு நேத்ரா கிடைக்கிறாள்? நமது திட்டப்படி முதலில் நீ நேத்ராவைக் காதலிப்பது போல் காதலித்து அதாவது நடித்துக் கடைசியில் அவளை ஏமாற்றி விட்டதால்தான், அவள் படிப்பைக் கூட விட்டு விட்டு ஊருக்கு வந்துவிட்டாள்; நானும் அவளை மணந்து கொள்ளப் போகிறேன். எல்லா நண்பர்களும் உன்னைப் போல் உதவிசெய்ய மாட்டார்கள்!" என்றார் கிருஷ்ணமூர்த்தி.

"இதென்ன மூர்த்தி, பெரிய உதவி? என்னுடைய வேலையைச் சென்னையிலிருந்து திருச்சிக்கு மாற்றத்தான் கொஞ்சம் சிரமமாயிருந்தது. அடுத்து, சந்தர்ப்பங்கள் எனக்கு உதவி செய்தன. ஒரே கல்லில் இரண்டு மாங்காய். ஆமாம், அந்தச் சந்தர்ப்ப உதவியின் பயனாக அல்லவா நானும் வத்ஸலாவைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்!" என்றார் ஸ்ரீதர்.

"அப்போ இரண்டு பேருக்குமேதான் வெற்றின்னு சொல்லு; நம்முடைய இந்த "வெற்றியின் ரகசிய"த்தை யாரிடமும் சொல்லி விடாதே, அப்பா! நம் இரண்டு பேருக்குள்ளேயே இருக்கட்டும்." என்றார் கிருஷ்ணமூர்த்தி.

கடைசியில் இத்தனையும் அத்தானின் ஏற்பாடுதானா என்று எண்ணியவளாய், "ஏன் அத்தான் அந்த ரகசியம் மூன்றாவதாக யாருக்கும் தெரியக் கூடாதா?" என்றாள் நேத்ரா.


எல்லோரும் கலீரென்று சிரித்தார்கள்!

கோடக் அளிக்கிறார்கள்—
உங்களுக்கு குதூகலமூட்டும் 2 புதுமாடல்கள்—
யாரும் வரவேற்கும்படியான விலையில்!



அழகான தோற்றம்

உலோகத்தில் தயாரிக்கப்பட்டதான, வலுவான கேஸ். கறுப்பு நிறம். வசீகரமான முறையில் குரோமியம் ப்ளேட் செய்யப்பட்டிருக்கிறது. பலம் பொருந்தியதும், சிறந்ததும் நன்றாக பொருத்தப்பட்டதுமான பிட்டிங்ஸ். இதைவிட அழகான காமரா எந்த விலையிலும் தென்படாது!



அழகான தோற்றம்

சிறந்த சேவனம்

அவைகளை உங்கள் கோடக் வியாபாரியிடம் சென்று பாருங்கள்!

'கோடக்' ஜூனியர் I காமரா

பாக்ஸ் காமராவை போலவே மிகவும் எளிதானது. 'ஜூனியரி'ன் போகஸிங் பாக்டரியிலிருந்து தானே சரிசெய்யப்பட்டு வருகிறது. மிக எளிதில் அவுட்-டோர் படங்கள் எடுக்கலாம். மங்கின ஒளியில் பீரி-டைம் எக்ஸ்போஷர்களும் மிக எளிதானது. ரூ. 78/-

லெதர் கேஸ் ரூ. 9/8/-

'கோடக்' ஜூனியர் II காமரா

பாஸ்ட்-லென்ஸ் (f/6.3) மங்கின ஒளியில் கூட மிக சிறந்த படங்கள் கிடைக்கும். பெரிய படங்களுக்கு 4 அடிவரை போகஸிங் கிடைக்கிறது. இரண்டு ஸ்நாப் ஷாட் - ஸ்பீடுகளுடன், டைம் எக்ஸ்போஷர்களும் கூட. இன்டோர் படங்களுக்கோ, அல்லது இரவில் படம் பிடிப்பதற்கோ ஒரு 'கோடக்' ப்ளாஷ் ஹோல்டரை பொருத்திக் கொள்ளுங்கள். ரூ. 115/-


லெதர் கேஸ் ரூ. 9/8/-

கோடக்' ப்ளாஷ் ஹோல்டர் மாடல் II விரைவில் கிடைக்கும்.



ஐ-லெவல் வ்யூ பைண்டர்

லென்ஸ்-டைப் வ்யூ-பைண்டரில் நீங்கள் படம் பிடிக்க விரும்பும் வஸ்துவும் மிக தெளிவாகவும் பிரகாசமாகவும் தெரிகிறது. எச்சமயத்திலும் உங்கள் உபயோகத்திற்கு தயாராக இருக்கிறது இந்த காமரா.





தானாகவே திறக்கிறது

பொத்தானை அழுத்துங்கள் உங்கள் 'ஜூனியர்' காமரா தானாகவே திறந்துகொள்கிறது. அதேபோல் மீண்டும் நன்றாக அடைத்துவிடும். உங்கள் காமராவை போட்டோ எடுப்பதற்கு தயார் செய்வதற்காக நீங்கள் உங்கள் அவகாசத்தை வீண் செய்ய வேண்டியதில்லை.



பெரிதான படங்கள்

உங்களுக்கு மிகவும் பிரியமான $2\frac{1}{4} \times 3\frac{1}{4}$ அங்குல சைஸில் எட்டு படங்கள் ஒரே ரோல் பிலிமிற்கும் கிடைக்கிறது. அவை உங்கள் ஆல்பத்தின் அழகை பன்மடங்கு அதிகரிக்கவைக்கும்

இன்னும் ஏராளமானவைகள்

எந்த தேவைகளுக்கும் யாருக்கும் பொருத்தமான ஏராளமான மாடல்களில் ரூ. 17/8/- லிருந்து விதவிதமான 'கோடக்' காமராக்கள் இருக்கின்றன. உங்கள் கோடக் வியாபாரியை விசாரியுங்கள் காண்பித்துத் தருவார்.


மேல் கொடுத்திருக்கும் விலைகளில் விற்பனைவரிசேராது.

கோடக் லிமிடெட்

(இங்கிலாந்தில் இணைக்கப்பெற்றது)

பம்பாய் - கல்கத்தா - டில்லி மதராஸ்

K 9013



16. நண்பர்கள் விவாதம்

சாந்தாகௌரியின் அந்தச் சொற்களைக் கேட்டதும் குஸுமாவுக்குத் தன் காலம் சென்ற தாயாரின் நினைவு இலேசாக எழுந்தது. அவள் தாயார் அப்போது நோய் வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாகக் கிடந்தாள். பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் குஸுமாவை அன்பே உருவெடுத்து வந்தவள் போல் அடிக்கொரு தடவை அவள் அந்த நிலையிலும் தடவிக் கொடுத்திருக்கிறாள். அவ்வளவுதான் குஸுமாவுக்குத் தன் தாயாரைப் பற்றி நினைவு இருந்தது. ஆனால் அவள் தன் வீட்டில் தாயாரின் பற்பல விதமான புகைப் படங்களைப் பார்த்திருக்கிறாள். வீட்டில் உள்ள வேலைக்காரர்களும் வேலைக்காரிகளும் அவளைப் பற்றிக் கதை கதையாகச் சொல்லக் கேட்டிருக்கிறாள். ஸர் பிஹாரிலாலின் வாய் மொழியாகச் சிற்சில சமயம் தன் தாயாரைப் பற்றி எழுந்த மனவெழுச்சிகளையும் அவள் கண்களால் கண்டு காதால் கேட்டிருக்கிறாள். இவற்றின் பலனாக அவள் இருதயத்திலே தாயாரின் அன்புருவமும் இன்ப நினைவும் அழியாச் சித்திரமாகப் பதிந்திருக்கின்றன.

இருதய வீணையின் மென்மையே உருவான கம்பிகளை மீட்டும் விஷயத்தில் காலஞ்சென்ற தாயாரின் நினைவுக்கு ஈடாக வேறு எதுவும் ஆக முடியாது. தாயாரின் நினைவு எழ வேண்டியதுதான் தாமதம்; கண்களை நீர் திரையிட்டு மறைத்து விடும். தாயாரை இழந்த குஸுமாவின் நிலையும் அப்படித்தான் ஆகி விட்டது. அவள் அப்படி எத்தனை நேரம்தான் கல்லாகச் சமைந்து தாயாரின் நினைவில் திளைத்திருந்தாளோ, தெரியாது.

சிறிது நேரம் வரை லோகாபிராமமாகப் பேசிக் கொண்டிருந்த குஸுமாவுக்கு அதிக நேரம் ஆகிவிட்டது போன்ற ஐயம் எழுந்தது. உடனே வீட்டுக்குப் புறப்படுவதற்காக விடைபெற்றுக் கொண்டு எழுந்தாள்.

அவள் எழுந்து விட்டதைக் கண்ட சாந்தா கௌரி, "குஸுமா! அடிக்கடி நம் வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிரு! உன் அப்பாவிடம் சாந்தா ரொம்பவும் விசாரித்தாள் என்றும் சொல்லு!" என்றாள்.

அதைச் சொல்லி முடித்ததும் சாந்தா கௌரி மறுபடியும் புத்தகத்தில் பார்வையைப் புதைத்து விட்டாள். குஸுமா புறப்பட்டு விட்டாளா, இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ளும் விஷயத்தில் அவள் கொஞ்சங்கூட ஆர்வம் காட்டவில்லை.


குஸுமா புறப்பட்டுப் போன சிறிது நேரத்துக்கெல்லாம் ஜனங்கள் தோட்டத்தில் கூடலாயினர். அதைக் கண்ட சாந்தா கௌரி அவ்விடத்தை விட்டு எழுந்து போகலானாள். அவளுடைய உடல் சதைப் பற்று காரணமாகக் கொஞ்சம் ஸ்தூலமாகக் காட்சி அளித்த பொழுதிலும், அழகும் தேஜஸும் ஒருங்கே அமையப் பெற்றதாகத்தான் தோன்றியது. ஆனால் அவளுடைய முகத்தில் ஏன்தான் அத்தகைய திரஸ்காரமும் கடுமையும் தாண்டவமாடிக் கொண்டிருந்தனவோ, புரியவில்லை!

அன்று நடக்க விருந்த கூட்டத்துக்காக வந்தவர்களில் ஜுகல் கிஷோரும் ஒருவன். அவன் தோட்டத்துக்குள் வந்து கொண்டிருந்த பொழுது சாந்தாகௌரி பக்கத்திலிருந்த சிறு பங்களாவுக்குப் போய்க் கொண்டிருந்தாள். அதைக் கவனித்து விட்ட ஜுகல் கிஷோர் தன்னுடன் வந்து கொண்டிருந்த ஒரு வாலிபனுக்கு அவளைச் சுட்டிக் காட்டி, "அப்பப்பா! இந்த அம்மாள்தான் எத்தனை பருமனாயிருக்கிறாள், பார்!" என்றான்.

ஜுகல் கிஷோருடன் வந்த வாலிபன் உணர்ச்சி மிக்கவனாயிருந்தான். அவனுக்கு ஜுகல்கிஷோரின் அந்தப் பேச்சு சிறிதும் ருசிக்கவில்லை. எனவே, "கொஞ்சம் பண்போடு நல்ல படியாகப் பேசக் கூடாதா?" என்று கேட்டான்.

"இதோ பார், அப்பா! நீயோ ஒரு கவிஞனாக இருந்திருக்கிறாய்! அதனால் உனக்குக் கற்கண்டாகப் பேச வருகிறது. ஆனால் நானோ ஒரு சாதாரணமான மனுஷ்யன். அதனால் தோன்றியதைத் தோன்றியபடி சொல்லி விட்டேன். உள்ளொன்று வைத்துப் புறமொன்று சொல்லும் திறன் எனக்கு வரவில்லை. நான் ஒன்றும் திட்டாமல் விட்டேனே, அதே பெரிதென்று எண்ணிக் கொள்!" என்றான் ஜுகல் கிஷோர்.

"திட்டுவதா? என்ன அப்பா தாறுமாறாகப் பேசுகிறாய்? தெய்வத்துக் கொப்பான அந்த அம்மாளைத் திட்டுவதா? என்ன அப்பா நாக்கில் நரம்பில்லாமல் பேசுகிறாய்?"



"இந்த அம்மாளைத் தெய்வம் என்று ஒப்புக் கொள்ள என்னால் ஆகாது. என்னைக் கேட்டால், இவளும் என்னைப் போல் உன்னைப் போல் ஒரு மனுஷ்யப் பிறவி தான் என்பேன்!" என்றான் ஜுகல் கிஷோர்.

"இப்படி நீ பேசுவது ரொம்பத் தவறு. இந்த அம்மாளுடைய பரிசுத்தமான தூய தவவாழ்க்கை எங்கே? நாம் எங்கே? நமக்கும் இந்த அம்மாளுக்கும்..." என்று இழுத்தான்.


"...ஏணி வைத்தால்கூட எட்டாது என்று தானே சொல்லப் போகிறாய்? என்னைக் கேட்டால் ஒன்றும் பெரிய வித்தியாசம் இருந்துவிட முடியாது என்றுதான் சொல்வேன்! தெரிந்ததா?" என்றான் ஜுகல் கிஷோர், இளங்கவிக்கு இன்னும் கோபம் மூட்டும் எண்ணத்துடன்.

சட்டென்று சூடேறிக் கோபிக்காத மனிதன் கவிஞனாக இருக்க முடியாது. இதுதான் உண்மைக் கவிஞனின் லட்சணம். வெளியுலகத்துப் போக்கைக் கண்டு எவனுடைய உள்ளம் சட்டென்று ஒரு பதில் கொடுக்கத் தயாராகிறதோ, அந்த உள்ளத்தைத்தான் உண்மைக் கவி யுள்ளம் படைத்தது என்று சொல்ல வேண்டும். ஜுகல் கிஷோரின் அந்த வார்த்தையைக் கேட்டதும் கவியுள்ளம் படைத்த அந்த வாலிபனுக்குக் கரை மீறிய கோபம் வந்து விட்டது. "அதிக வித்தியாசம் ஒன்றும் கிடையாது என்பதை நீங்கள் நிரூபித்துக் காட்டி விட்டால் நான் உங்கள் சொற்படி நடப்பதற்குச் சித்தமாயிருக்கிறேன்!" என்று ஜுகல் கிஷோருக்குச் சவால் விடுத்தான்.

"சரி! என்றைக்காவது ஒருநாள் நிரூபித்துக் காட்டுகிறேன்!" என்று சொன்ன ஜுகல் கிஷோர் தன் பேச்சுக்கு அத்துடன் முற்றுப் புள்ளி வைத்து விட்டான். அதற்குக் காரணம், அவர்கள் இருவரும் பங்களாவை மிகவும் நெருங்கி விட்டதுதான்.

அங்கே வந்திருந்தவர்கள் அனைவரும் அன்றிரவு சாந்தி குடீரத்தில் கூடி நாட்டின் நலனுக்கான பல விஷயங்களைப் பற்றிக் கலந்து ஆலோசித்தனர். நாட்டிலே நெடுநாட்களாக உறங்கிவிட்ட நாட்டுப் பற்றையும் சுதந்திர உணர்ச்சியையும் விழிப்புறச் செய்வதற்காக அந்தக் குழுவினர் இதுபோல் அடிக்கடி கூடிக் கலந்தாலோசிப்பது வழக்கம். அன்றும் அதே போலத்தான் ஏதோ முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசி முடிவு செய்வதற்காக அங்கே கூடி யிருந்தனர்.

மனோஹர் பெரும் பணக்காரத் தந்தையின் புதல்வன். அவன் தந்தை அவனது அறியாப் பருவத்திலேயே வீட்டை விட்டு வெளியேறி விட்டார். அவர் என்ன ஆனார், எங்கே போனார் என்பது யாருக்குமே தெரியாது. தந்தையில்லாக் குறையைத் தாயாரே தீர்த்து வைக்கும்படியாகி விட்டது. அதன் பலனாக மனோஹர் தன் தாயார் சாந்தா கௌரியின் மேற்பார்வையிலும் பராமரிப்பிலும் வளர்ந்து பெரியவனானான். சகல விதத்திலும் தகுதி வாய்ந்த அவன் தாயார் அவனுக்கு உயர் கல்வி யளித்தாள். அதுமட்டும் அல்ல; அவனது வளரும் இளம் உள்ளத்திலே தேசப் பற்று, சுதந்திர உணர்ச்சி என்னும் வித்திட்டுப் பேணிப் பாதுகாத்து வளர்த்தும் விட்டாள். அதன் பலனாக அவனுக்குத் தன் தாயாரிடம் நல்லெண்ணம் மட்டும் அல்ல; வழிபாடு செய்து வணங்கும் குல தெய்வ உணர்ச்சியும் உண்டாகி விட்டது. அவன் தன் தாயாரிடம் வைத்திருந்த சிரத்தையை இவ்வளவு-அவ்வளவு என்று கணக்கிட்டுச் சொல்ல முடியாது. 'தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை.' 'தந்தை சொல்



மிக்க மந்திரமும் இல்லை' என்ற முது மொழியை அவன் எழுத்துக்கு எழுத்துக் கடைப் பிடித்து வந்தான். தனக்குத் தாயும் தந்தையுமாக விளங்கிய தாயாரின் உத்தரவின்றி அவன் யாரிடமும் எதுவும் அதிகமாகப் பேச்சு வைத்துக் கொள்வதில்லை யென்றால், அவன் தன் தாயாரிடம் காட்டி வந்த அபார பக்தியின் பெருமை விளங்கவில்லையா?

மனோஹர் பெரிய வீட்டுப் பிள்ளை; பணக்கார வீட்டுப் பிள்ளை. இந்தக் காரணத்தினால் அவன் சிறு வயது முதலே மாபெரும் தேச பக்தர்களுடனும் தேசத் தலைவர்களுடனும் வெகு ஸௌஜன்யமாகவும் சுதந்திரமாகவும் பேசிப் பழகும் வாய்ப்பைப் பெற்றிருந்தான்.

அவனுடைய உடலமைப்பு பூப்போன்றிருந்தது. செல்வவந்தரின் வீட்டுச் செல்லப் பிள்ளையின் உடல் பூப்போல் இல்லாமல் வேறு எப்படி இருக்கும்? உடை உடுத்தும் விஷயத்தில் அவன் மிகவும் எளிமையை மேற்கொண்டிருந்தான். ஆனால் அவனுடைய அந்த எளிமையினால் அவன் உடுத்தும் உடையின் துல்லியமான தூய ஒளியையோ, உடலின் சுத்தத்தையோ, உடை உடுத்தும் விஷயத்தில் அவன் அநுஷ்டித்து வந்த அவனுக்கே உரித்தான அந்த அழகிய முறையையோ மூடி மறைக்க முடியவில்லை. அவன் கண்களை அலங்கரித்த மூக்குக் கண்ணாடியும் சற்றுப் பகட்டாகவேதான் தோற்றமளித்தது. கண்ணாடியில் ஏதும் புதுமை இல்லை. அதற்குப் போட்டிருந்த 'பிரே'மில் ஒருவேளை புதுமை இருக்குமோ, என்னவோ? இல்லாவிட்டால் பணக்காரப் பெண்கள் போடும் வெள்ளைத் தோடு வைரத் தோடாகவும், ஏழைப் பெண்கள் போடும் வைரத் தோடு வெள்ளைத் தோடாகவும் காட்சி அளிக்கும் கதையாக அவன் போட்டிருந்த சாதாரண 'பிரேம்' அசாதாரணமாகக் காட்சி அளித்ததோ?

அவன் நிறம் நல்ல சிவப்பு. ஆனால் ரத்தக் குறைவினாலோ அல்லது சோப்பை அதிகமாக உபயோகப் படுத்தியதனாலோ பார்ப்பவர் கண்களுக்கு அவனுடைய அந்தச் சிவப்பு கொஞ்சம் அருவருப்பை அளித்தது. சிவப்பில் ஏறியிருக்கும் வெளுமைக்கு ஒரு கணக்கு வேண்டாமா? நிறக் கலவை நல்ல முறையில் அமைந்தால் தானே அழகு அழகாகக் காட்சி அளிக்கும்?

அவன் குரலும் கொஞ்சம் கனரகத்தைச் சேர்ந்தது. அதிக நேரம் அவனுடைய அந்தக் கரகரப்பான பேச்சைக் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருக்க முடியாது. அப்படித் தலைவிதியே என்று கேட்க நேர்ந்தால் தலைவலியே வரலாம்.

இந்த உலகத்தில் மக்களின் மனத்துயரைத் தீர்க்க எத்தனையோ பேர் முன் வருகிறார்கள். அத்தகையவர்கள் மக்களுடன் நெருங்கிப் பழகி, கலந்து ஒன்றி அவர்களுக்குள்ள கஷ்ட நஷ்டங்களை உணர்ந்து அப்புறம் அதைத் தீர்க்க வழி தேடினால் அல்லவா வெற்றி காண முடியும்? மக்களின் மனத் துயரத்தையே அறியாமல் அவர்களுடன் ஒன்றி வாழாமல் தனித்து நின்று மக்களின் மனக் கவலையை மாற்ற முயற்சிக்கிறேன் என்று கூறினால் அது எங்கேயாவது நடக்கக்கூடிய காரியமா? செல்வத்தில் புரளும் சீமானான மனோஹரின் மன நிலையிலே இம்மாதிரியான போக்குத்தான் தாண்டவமாடிக் கொண்டிருப்பதாகத் தோன்றியது.

அங்கே கூடியிருந்தவர்களில் அநேகர் விருந்து உண்ண உட்கார்ந்திருப்பவர்களைப்

போல் உட்கார்ந்திருந்தனர். ஏனெனில் அப்பொழுது அங்கே கூட்டம் நடக்கவில்லை. கூட்டம் நடந்தால் அல்லவா ஒரு முறையுடனும் கட்டுப்பாடுடனும் உட்கார வேண்டும்? சும்மா உட்கார்ந்து லோகாபிராமமாகப் பேசிக் கொண்டிருப்பதற்கு விசேஷமான ஒரு முறை தேவையில்லையல்லவா? அதனால் தான் அவர்கள் தங்களுக்குத் தோன்றியபடி மேஜைக்கு இருவராகவோ, நால்வராகவோ உட்கார்ந்திருந்தனர். கூடியிருந்த நண்பர்களில் மூன்று-நான்கு பேர் சிகரெட் குடித்துக் கொண்டிருந்தனர். அந்தப் பழக்கம் இல்லாத ஒரு தேச பக்தருக்கு அவர்கள் அப்படிப் புகை. பிடித்துக் கொண்டிருந்தது பிடிக்கவில்லை. எனவே, "நாம் பிறரைத் திருத்தப் பார்க்கிறோம். ஆனால் நம்மை நாமே திருத்திக் கொள்ள முன் வருவதில்லை. இதோ பாருங்களேன்! சிகரெட் பிடிக்கும் கெட்ட பழக்கம் நம்மில் எத்தனை பேருக்கு இல்லை? இதை நினைத்தாலும் விட்டொழிக்க முடிகிறதா?" என்று கேட்டார்.

"என்னை இம்மாதிரி தீய பழக்கம் உள்ளவர்களில் ஒருவனாக எண்ணி விடாதீர்கள்! நான் நினைத்தால் இந்தச் சிகரெட் குடிக்கும் பழக்கத்தை நிறுத்தி விட முடியுமாக்கும்!" என்றார் ஒருவர், புகையைச் சுருள் சுருளாக வெளியே விட்டு அது உயர எழும்பிப் போவதை வேடிக்கை பார்த்துக் கொண்டே.

பொடி, பீடி, புகையிலை என்று உபயோகிக்கும் ஒவ்வொருவரும், தமக்கும் இத் தீய பழக்கங்களுக்கும் வெகு தூரம், நினைத்தால் தம்மால் நிறுத்தி விட்டு வாழ முடியும் என்று எண்ணுகிறார்கள். 'போனால் போகிறது, பாவம்! பிழைத்துப் போகட்டும்!' என்று தீய பழக்கங்களிடம் கருணை கூர்ந்து அருள் பாலிப்பவர்கள் போல் பேசுகிறார்கள். ஆகா! எவ்வளவு நல்ல எண்ணம் அவர்களுக்கு! 'உங்கள் கருணை அவற்றுக்கு வேண்டாம். அப்படி மடிந்தால் அவை மடிந்து தொலையட்டும்!' என்று சொல்லிப் பாருங்கள்! அப்பொழுது அவர்களுடைய வண்டவாளங்கள் வெளியாகும்.

"உன் மூளை இருக்கிறதே, அது ஒரு உலக்கைக் கொழுந்து! எப்பொழுதுமே இதுமாதிரி ஏதாவது தாறுமாறாகப் பேசுகிறாய்; தவறாகப் புரிந்து கொள்கிறாய்! தேச சேவை செய்கிறேன் என்று ஒருவன் முன் வந்தால், அவன் பெரிய மகாத்மாவாகி விட்டான் என்று பலரும் எண்ணத் தொடங்கி விடுகிறார்கள். என்னைக் கேட்டால் இதைப் போல் முட்டாள்தனம் வேறு இல்லை என்பேன். தேசத் தொண்டு செய்வது வேறு, மகாத்மாவாவது வேறு. இதற்கும் அதற்கும் துளிக்கூடத் தொடர்பு கிடையாது. இன்றைக்குச் சிகரெட் குடிப்பது தவறு என்கிறாய்! நாளைக்கு, 'நீ ஏன் தேநீர் குடிக்கிறாய்? காப்பி குடிக்கிறாய்? பால் குடிக்கிறாய்? நடந்து போவதற்கு என்ன? வண்டியில் ஏன் போகிறாய்?' என்று கேட்பாய்! நாளை மறுநாள் 'நீ

ஏன் சாப்பிடுகிறாய்? ஏன் தூங்குகிறாய்? ஏன் சிரிக்கிறாய்?' என்று நீ கேட்டாலும் ஆச்சரியப் 'படுவதற்கில்லை. இதெல்லாம் ஒரு பெரிய விஷயமா? தவறில்லாத முறையில் ஆனந்தமும், குற்றமற்ற முறையில் இன்பமும் கிடைத்தால் ஏன் அப்பா அநுபவிக்கக் கூடாது? உடலில் ரத்தம் ஓடுகிறது. பாவம், அது என்ன அப்பா, தவறு செய்தது? அது கொஞ்சம் தன் இச்சையாக ஓடக் கூடாதா? சுதந்திரத்துக்காகப் பாடுபடுகிறோம் என்று சொல்லும் நாம் இந்தச் சின்னச் சுதந்திரத்துக்கே இடங் கொடுக்க முன் வரவில்லை என்றால்......" என்றான் வக்கீல் சுகபால்.

அதற்குள் ஒருவன் அவனை இடைமறித்து, "அடடா! பேசுவது வக்கீல் சுகபாலா? நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான்! ஆமாம், நீங்கள் என்னவோ வக்கீல் தொழிலுக்குத் தலை முழுகி விடப் போகிறேன்; அப்புறம் முழு நேரமும் தேசத் தொண்டில் ஈடுபடப் போகிறேன் என்று சொன்னீர்களே, அது என்னவாயிற்று?" என்று கேட்டான்.

"ஆமாம், சொன்னேன்! சொல்லவில்லை என்று நான் எங்கே மறுத்தேன்?"

"சொல்லைச் செயலில் காட்டக்காணோமே என்று கேட்கிறேன்!"

"செயலில் காட்டுவது என்ன சிரமமான காரியமா? ஆனால் ஒன்று. நண்பர்களுக்குச் சுமையாக நான் இருக்கக் கூடாது, பார்! நான் வக்கீல் தொழிலை விட்டு விட்டால் என்னைக் கவனித்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு நண்பர்களாகிய உங்களுக்கு அல்லவா வந்து சேரும்? அதை நான் அடிகாள் முதற் கொண்டே விரும்ப வில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். பத்தாயிரம் பதினையாயிரம் என்று ரூபாயைச் சேர்த்துக் கொண்டு அப்புறம் இந்தத் தொழிலை விட்டு விடலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். அப்படிச் செய்து விட்டால் என்னைக் கட்டிப் பிடிக்கவோ அதட்டிக் கேட்கவோ ஆள் இருக்க முடியாது. நான் முற்றிலும் சுதந்திர புருஷனாகி விடுவேன். என்ன, நான் சொல்வது?" என்றான்.

"உங்களுக் கென்ன, பத்தாயிரம் ரூபாய் தானே வேண்டும்? அதை இப்பொழுதே நான் தங்களுக்குத் தந்து விடுகிறேன். அப்புறம் நீங்கள் என்ன செய்வீர்கள், சொல்லுங்கள்!" என்று கேட்டான் மனோஹர்.

சுகபாலைப் போன்ற நல்ல நாவன்மை படைத்தவனும் அறிவாளியுமான தலைவனை அவன் ஈடுபட்டிருக்கும் தொழிலிலிருந்து விடுவித்து அதிலிருந்து வரும் பயனை நாட்டுக்கு அளிக்க வேண்டும் என்ற நல்லெண்ணமும் ஆர்வமும் தான் மனோஹரை அப்படிப் பேச வைத்தன.

மனோஹரின் அந்தப் பேச்சைக் கேட்டதும் சுகபால் யோசனையில் ஆழ்ந்தான். மற்றவர்கள் வியப்புடன் மனோஹரையே கண் கொட்டாமல் பார்க்கலாயினர். சிறிது நேரத்துக் கெல்லாம் சுகபால் ஒரு வேண்டாச் சிரிப்பு சிரித்து, "அடாடா! நான் சொல்வது முழுவதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் பேசுகிறீர்களே! வக்கீல் தொழில் தவறான தொழில் அல்லவே! பார்க்கப் போனால் அதுவும் ஒரு சுதந்திரமான தொழில் தானே? வக்கீலை யாரும் அடக்கி ஆள முடியாது. அதனால் வக்கீல் தொழிலைச் செய்த வண்ணமே ஒருவன் சுதந்திரமாகத் தேச நலனுக்கான காரியங்களையும் கவனிக்கலாம். மக்களிடையே தேசப் பற்றையும் சுதந்திர தாகத்தையும் எழுப்பலாம். வக்கீலாகவும் தேசத் தொண்டனாகவும் இருந்தால் இன்னொரு சௌகரியமும் இருக்கிறது. சர்க்காரைக்கூட அடிபணிய வைக்கலாம். வக்கீல் தொழிலை விடாமல் தேசத் தொண்டுக்கான செயலிலும் ஈடுபட்டால் நாட்டுக்குப் பல நலன்கள் ஏற்படக் கூடும். அதைத் தான் யோசிக்கிறேன். பத்தாயிரம் பதினையாயிரம் என்று பணம் சேர்க்கலாம் என்று ஒரு பேச்சுக்காகச் சொன்னேனே யொழியப் பணத்துக்கு ஆசைப்பட்டு நான் அப்படிச் சொல்லிவிட வில்லை!" என்றான்.

"இல்லை, இல்லை! இதெல்லாம் நமக்குச் சொல்லும் வெறும் சாக்குப் போக்குகள்! இவருக்கு வக்கீல் வேலையை விட இஷ்டம் இல்லை!" என்று ஒருவன் ஆட்சேபித்தான்.

"சரி! நீங்கள் சொல்கிறபடியே நான் வக்கீல் தொழிலை இன்றைக்கே விட்டு விடுகிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்புறம் நான் செய்ய வேண்டியது என்ன, சொல்லுங்கள்!" என்றான் சுகபால்.

"கிராமங்களுக்குச் சென்று மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தலாமே!"

"ஏற்படுத்தலாம்! பணம் இன்றிக் கிராமங்களுக்குப் போனால் பலன் ஏற்படுமா? தேசபக்தி சம்பந்தமான பாடல்களைப் பாடிக் கொண்டு கிராமங்களுக்குச் செல்ல வேண்டும். முதலில் அதற்கு ஒரு பஜனை கோஷ்டி தயார் செய்து கொள்ள வேண்டும்!"

"உண்மையான வார்த்தை! பாடல்கள் மூலம்தான் மக்களின் மனத்திலே இடம் பெற முடியும். தென்னாட்டிலே புகழ் பெற்றிருக்கும் சித்தர்பாடல்கள் இதற்குச் சான்று. பட்டினத்தார், கபீர்தாஸ் போன்ற அடிகளார்களும் மக்களிடையே பக்தியையும் சமூக சீர்திருத்தத்தையும் பரப்ப இதே முறையைத் தான் கையாண்டார்கள். என்னிடம் பல பாடல்களும் தேசபக்தி தோய்ந்த கவிதைகளும் தயாரா யிருக்கின்றன. அவற்றைத் தாராளமாக உபயோகப் படுத்திக் கொள்ளலாம்!"—இளங்கவி சந்தர்ப்பத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தன் பாடல்களைப் பற்றிச் சொன்னான்.

"இதெல்லாம் வீண் முயற்சிகள். உலகம் வாயுவேக மனோவேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. ஆகாய விமானத்தில் பறந்து கொண்டிருக்கிறது. இம்மாதிரி சமயத்தில் நாம் கஞ்சிராவும் ஜாலராவும் கையில் எடுத்துக் கொண்டு பஜனைகள் பாட உட்



சென்னை முத்தியாலுப் பேட்டையிலுள்ள ஸ்ரீ கலா நிகேதன் ஆதரவில் பவழக்காரத் தெருவிலுள்ள ஸ்ரீ கிருஷ்ணன் கோவிலில் ஸ்ரீ எம்பார் விஜயராகவாச்சாரியார் ராமாயண ஹரிகதா காலட்சேபம் ஒரு மாத காலமாகத் தொடர்ந்து நடத்தி வருகிறார். சென்ற ஆகஸ்டு மாதம் 18-ம் தேதி 'கல்கி' ஆசிரியர் தலைமையில் 'குஹனும்—பரதனும்' என்னும் பொருள் பற்றி, அவர் அருமையான கதா காலட்சேபம் செய்தார்.

கார்ந்தால் உருப்பட்டாற் போலத்தான்! பலகாலம் நம் நாட்டிலே பக்தி பரவி பகவன் நாமமே ஒலித்துக் கொண்டிருந்தது. அதனால் நாம் கண்ட பலன் என்ன? நம் அன்னையின் கைகளில் விலங்கு பூட்டப்பட்டதும் நாம் அடிமைகளாகி விலங்குகளாக வாழ நேர்ந்ததும்தானே? அதனால் நான் சொல்வதைக் கேளுங்கள். இந்தப் பேச்சை யெல்லாம் ஒருபுறம் மூட்டை கட்டி வைத்து விட்டு விஞ்ஞான ரீதியில் முன்னேற முயற்சி செய்யுங்கள். வேறு வழிகளில் வீணாகச் செலவாகும் பணத்தைப் புதுப் புது ஆராய்ச்சி சாலைகள் நிறுவுவதில் செலவிடுங்கள். அப்படிச் செய்தால் நம் நாட்டில் வேண்டிய விஞ்ஞானிகள் தயாராவார்கள். அப்புறம் நம் நாடு எப்படி முன்னேறுகிறது என்று பாருங்கள். இந்தத் திட்டத்தைத் தயாரிக்கும் பொறுப்பை என் கையில் விட்டால் நான் கன கச்சிதமாகத் தயாரித்துத் தருகிறேன்!" என்றார் ஒரு விஞ்ஞானி.

"உங்களுக்கு விஞ்ஞானத்தில் மிகுந்த பற்று இருக்கிறாற் போலிருக்கிறது. நியாயமான விஷயம். இருக்க வேண்டியதுதான். ஆனால் இந்த விஞ்ஞானம்தானே இந்த உலகத்தையே அழித்துக் குட்டிச்சுவராக்கியது. தர்மம் சீரழிந்து கெட்டதற்குக் காரணம் இந்த விஞ்ஞான வளர்ச்சிதானே? சரி, அது எப்படியாவது போகட்டும். நான் கேட்கிறேன் என்று கோபித்துக் கொள்ளாதீர்கள். விஞ்ஞானம் வளர்ந்ததனால் இன்று விமான மயமாகக் காட்சி யளிக்கும் நாடுகள், அணுகுண்டும் ஜலவாயு குண்டும் தயாரித்துக் குவித்து வைத்திருக்கும் நாடுகள், நம் நாட்டைக் காட்டிலும் அதிக சுகமாக இருக்கின்றன என்பதைத் தாங்கள் நம்புகிறீர்களா? அப்படி நம்பினால் தங்களால் அதை நிரூபிக்க முடியுமா?" என்று கேட்டார் விஞ்ஞானத்தை வெறுக்கும் ஒரு நபர்.

"விஞ்ஞானம் வளர்ந்த நாடுகள் உங்களைக் காட்டிலும் சுகமாயிருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன? நமக்கு எதற்கு இந்த உருப்படாத வீண் வம்பெல்லாம்? நடக்கிறபடி நடந்து விட்டுப் போகட்டுமே!" என்றார் ஒரு அசிரத்தைப் பேர்வழி.

"நம் கொள்கை இப்படி யெல்லாம் வழ வழாவென்று இருக்கக் கூடாது. ஒரு நிச்சயமான கொள்கை நமக்கு வேண்டும். விஞ்ஞான ரீதியிலும் நாம் முன்னேற வேண்டும். நமது தர்ம கர்மங்களையும் நாம் மறக்கக் கூடாது!" என்றார் ஒரு மிதவாதி.

"வாஸ்தவம். நாம் நமது சநாதன தர்மத்திலிருந்து வழுவியது முதற்கொண்டுதான் இப்படித் தாழ்மையுற்றோம். எனவே தர்மமே ஜயிக்கும் என்ற நம்பிக்கையுடன் காரியத்தில் இறங்க வேண்டும்!" என்று கூறிய ஒரு சநாதனி, "அறம் வெல்க! மறம் ஒழிக!" என்று கோஷமிட்டார்.

"ஆமாம். எல்லோரும் பெரிய பெரிய மனிதர்களாக இங்கே கூடியிருக்கிறீர்களே! சநாதன தர்மம் என்றால் என்ன? அது ஏதாவது மாயமா, மந்திரமா? தர்மத்துக்கும் அரசியலுக்கும் என்ன சம்பந்தம்? இரண்டையும் ஒன்று சேர்த்து எதற்காகக் குட்டை குழப்புகிறீர்கள்? தர்மத்தையும் அரசியலையும் தனித் தனியாகப் பிரித்து நோக்காத வரையில் உங்கள் சண்டை ஒரு நாளும் தீராது; நாடும் கடைத்தேறாது. தெரிந்ததா?" என்றார் வேறு ஒருவர்.

"நீங்கள் பேசுவதைப் பார்த்தால் சநாதன தர்மம் என்றால் என்ன என்றே உங்களுக்குத் தெரியாது போலிருக்கிறதே!" என்றார் சநாதனி சற்றுச் சூடேறிய குரலில்.

"அதன் ரகசியத்தைத் தெரிந்து கொண்டு நீங்கள் என்ன பெரிதாகப் புரட்டி விட்டீர்களாம்? உங்கள் உடலில் உறுதி ஏற்படாத வரையில் இதெல்லாம் வீண். அதனால் நான் சொல்லுவதைக் கேளுங்கள். ஒவ்வொரு நகரத்திலும் ஒவ்வொரு கிராமத்திலும் வீதி தோறும் உடற்பயிற்சிச் சாலைகள் நிறுவுங்கள்!" என்று தமது அகன்ற மார்பைப் பார்த்தவாறு ஒரு பயில்வான் சொன்னார்.

"நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான். சிற்சில விஷயங்கள் நமக்குத் தேவையானவை; சிற்சில தேவையற்றவை. யானையின் உருவத்தைத் தெரிந்து வரப் புறப்பட்ட குருடர்களின் கதையாக நாம் எதற்கு இப்படி ஒருவருக்கொருவர் தோன்றியதைப் பேச வேண்டும்?" என்றார் ஒரு சமாதான வாதி.

இதே சமயம் ஒரு ஆள் வந்து மனோஹரை வெளியேவருமாறு அழைத்தான். (தொடரும்)

இதோ உங்களுக்கொரு லாபகரமான முதலீடுத் திட்டம்

பதினைந்து வருடங்களுக்கு மாதாமாதமும்
வருமானவரி கழிவின்றி நல்ல வருமானம் பெறுவதற்கு

ஒரு அன்னியுடி சர்டிபிகேட் வாங்கிவிடுங்கள்

வெளியீடு விலை	மாத வருமானம்	தவறாமல்
ரூ. 3,500/-	பிரதி மாதமும் ரூ. 25/-	15 வருட காலத்திற்கு ஒவ்வொரு மாதமும், முதலீடு தேதியிலிருந்து ஒரு மாதம் பூர்த்தியான தேதி முதல் ஆரம்பித்து வழங்கப்படும் திருப்பிக் கொடுக்கப்படும் மூலதனத்தின் ஒரு பகுதியும், சுமார் 3¼ சத விகிதம் தொடர் வட்டியும் சேர்ந்ததே இந்த மாதாந்தரத் தொகையாகும்.
ரூ. 7,000/-	பிரதி மாதமும் ரூ. 50/-	
ரூ. 14,000/-	பிரதி மாதமும் ரூ. 100/-	
ரூ. 28,000/-	பிரதி மாதமும் ரூ. 200/-	

இந்த சர்டிபிகேட்டுகளில் முதலீடு செய்யக்கூடிய உயர்ந்தபக்ஷத் தொகை:—

வயது வந்த நபர் ஒருவருக்கு ரூ. 28,000
வயது வந்த இரு நபர்கள் கூட்டாக வாங்கினால் ரூ. 56,000
ஒவ்வொரு மைனரின் சார்பிலும் ஒரு கார்டியன் வாங்கக்கூடியது ரூ. 28,000

விண்ணப்பங்கள், பம்பாய், கல்கத்தா, டில்லி, சென்னை மற்றும் பெங்களூரிலுள்ள ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா ஆபீஸ்களிலும், ஹைதராபாத் ராஜ்யத்திற்குள் இருக்கும் ஹைதராபாத் ஸ்டேட் பாங்கின் கிளைகளிலும், மைசூர், மாண்டியா, சித்தல் துர்க்கம், சிக்மகளூர், ஷிமோகா, டும்கூர், மற்றும் ஹாஸனிலிருக்கும், பாங்க் ஆப் மைசூர் லிமிடெட் கிளை ஆபீஸ்களிலும், இந்தியாவில் இதர ஊர்களிலுள்ள இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா கிளை ஆபீஸ்களிலும், சர்க்கார் கஜானா அலுவல்களை நடத்தும் மேற்குறித்த எந்த பாங்கின் கிளை ஆபீஸும் இல்லாத ஊர்களானால் அங்குள்ள சர்க்கார் ட்ரெஷரி அல்லது சப்டிரெஷரிகளிலும் கிடைக்கும்.

இந்திய அரசாங்கம்


15 வருட அன்னியுடி சர்டிபிகேட்டுகள்

நாட்டிற்கு சுபிட்சம் - உங்களுக்கும் லாபம்

இதர விவரங்களுக்கு மேற்குறித்தபடி விண்ணப்பங்களை வாங்கும் ஆபீஸ்களில் ஏதாவதொன்றுக்கு மனுச்செய்க. அல்லது உங்கள் இராஜ்யத்தைச் சேர்ந்த ரீஜனல் நேஷனல் சேவிங்ஸ் ஆபீஸரிடம் விசாரிக்கவும். அல்லது - நேஷனல் சேவிங்ஸ் கமிஷனர், ரயில்வே போர்டு பில்டிங், ஸிம்லா-3 விலாசத்திற்கு எழுதவும்.

AC. 578

B. I. S. N. கம்பெனி லிமிடெட்



S. S. ரஜுலா

சென்னை - நாகப்பட்டினம் - பினங்கு - சிங்கப்பூர்

மேற்படி கப்பல் கீழ்க்கண்ட தேதி வாக்கில் புறப்படும்

சென்னையிலிருந்து 18 - 9 - 1954 - நாகப்பட்டினத்திலிருந்து 19 - 9 - 1954

மாறுதலுக்கு உட்பட்டது

ஸலூன் இடவசதி முழுவதும் புக் ஆகிவிட்டது. ஆனால் கம்பெனியின் ஏஜண்டுகளிடமிருந்து உணவுடனோ அல்லது உணவு இன்றியோ பர்த் வசதி இல்லாத பிரயாண டிக்கெட்டுகள் கிடைக்கும்.

கீழ்க்கண்ட பிரயாண மற்றும் ஆரோக்கிய பத்திரங்கள் தேவையாகும்.

1. மலேயா அல்லது சிங்கப்பூரில் உள்ள குடியேற்ற அதிகாரிகளால் கையெழுத்திடப்பட்ட அனுமதி பர்மிட்டுடன் கூடியதும் செல்லக் கூடியதுமான ஒரு பாஸ்போர்ட். பாஸ்போர்ட்டில் கையெழுத்திடப்படா விட்டால், ஒரு தனி அனுமதி பர்மிட்டோ அல்லது குடியேற்ற அதிகாரிகளால் அளிக்கப்பட்ட விஸிட்டர்ஸ் பாஸை பாஸ்போர்ட்டுடன் கொடுக்க வேண்டும். அல்லது மலேயா அல்லது சிங்கப்பூரில் உள்ள குடியேற்ற அதிகாரிகளால் அளிக்கப்பட்ட ரீ-எண்ட்ரி பர்மிட். (பாரம் I-D-64 அல்லது 65)

2. எல்லா ஸலூன், பர்த் வசதி இல்லாத பிரயாணிகளும் வருமான வரி ஆபீஸர்கள் ஒருவரிடமிருந்து (வெளி நாட்டுப் பிரிவு) முழு வருமான வரி செலுத்தியதற்கான அல்லது வரி விலக்கு சர்ட்டிபிகேட்டை, அவர்கள் வசிக்கும் வட்டாரத்து வருமான வரி ஆபீசரிடமிருந்து "ஏ" பாரம் வாங்கிக் கொண்ட பிற்பாடு பெற்றுக் கொண்டு வரவேண்டும்.

3. சுகாதார சர்டிபிகேட்டுகள்: 1-7-54 தேதி முதல் எல்லா ஸலூன் மற்றும் பர்த் வசதியற்ற பிரயாணிகள் காலரா தடுப்பு ஊசியும் வைசூரி அம்மை வராமலிருப்பதற்காக ஊசியும் போட்டுக் கொண்டதற்கு இந்திய அரசாங்கத்தினரால் வெளியிடப்பட்டுள்ள புதிய பாரங்களில் சர்டிபிகேட் பெறுவதுடன் அதில் கீழ்க்கண்டுள்ள சுகாதார அதிகாரிகளில் ஒருவருடைய அத்தாட்சியும் பெற்றிருக்க வேண்டும்.

டைரக்டர், டிபுடி டைரக்டர், டிபுடி அஸிஸ்டெண்ட் டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் அல்லது கார்ப்பொரேஷன் முனிஸிபாலிடி, ஸ்தல ஸ்தாபனங்களின் சீப் மெடிகல் ஆபீஸர்ஸ், அட்மினிஸ்ட்ரேடிவ் மெடிகல் ஆபீஸர்ஸ், டிஸ்ட்ரிக் மெடிகல் ஆபீஸர்கள் அல்லது கவர்ன்மெண்ட் முனிஸிபல் மற்றும் டிஸ்ட்ரிக்போர்ட் அலோபதிக் ஆஸ்பத்திரிகள், டிஸ்பென்ஸரிகளின் மெடிகல் ஆபீஸர்-இன்-சார்ஜ்.

மேற்கண்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளில் ஒருவரின் அத்தாட்சி பெற்ற சர்டிபிகேட்டுகளே பிரயாண டிக்கட்டுகள் வழங்குவதற்கு உரியதென ஒப்புக் கொள்ளப்படும்.

பினங், போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலான இடங்களுக்கு நேரடியாக சரக்குகளின் ஏற்றுமதி ஏற்றுக் கொள்ளப்படும். சிங்கப்பூரில் மாற்றி பாங்காக்கிற்கு அனுப்புவதற்கான சரக்குகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றுமதி விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதுக:

பின்னி & கோ., (மதராஸ்) லிட். 7, அரமனைக்காரத் தெரு, சென்னை-1	**மதுரா கம்பெனி லிமிடெட்** முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்



பங்கஜத்தின் தியாகம்

எஸ். ராமன்



"பாஸ்கர்" என்ற குயிலினும் இனிய குரல் கேட்டு அச்சிறுவன் திரும்பினான். மாதவனும் தன் மோன நிலையினின்றும் மீண்டவனாய்க் கண் விழித்தான். தோப்பை யடுத்திருந்த கூரை வீட்டிலிருந்து ஓடி வந்து கொண்டிருந்தாள் சிறுமி நளினி. மாதவன் நளினியைத் தன்னிரு கரங்களாலும் வாரி யணைத்துக் கொண்டான். நளினி தன்னை மாதவனிடமிருந்து விடுவித்துக்கொண்டு சிறுவனை நோக்கி ஓடினாள். சிறுவன் கரத்தைப் பற்றிக் கொண்டு, "பாஸ்கர், நீ இரண்டு நாளாக எங்கே போயிருந்தாய். நீ இல்லாமே நான் ரொம்பக் கஷ்டப் பட்டேன். நீ ஏன் வீட்டை விட்டு ஓடிப் போய் விட்டாய்!" என்றாள்.

"நளினி! உங்க அப்பாதான் என்னை வீட்டை விட்டுப் போய் விடு, என்று சொன்னாரே!"

"அப்பா கோபத்திலே சொன்னால், அதுக்கு நீ இப்படித்தான் ஓடணுமா?"

"எனக்குப் பாட்டு வரவில்லை என்று அப்படி அடிச்சாரே! அதனால்தான் நானும் கோபத்திலே ஓடிப்போனேன்!"

"இனிமேல் அப்பா அப்படி அடிக்க மாட்டார். நீயும் இனிமேல் ஓடிப் போகக் கூடாது!"

மேற்கண்டவாறு அவ்விளம் பாலகர்களிடையே நடந்த சம்பாஷணையைக் கேட்ட மாதவன் மனமுருகி "நளினி, பாஸ்கரன்! இரண்டு பேரும் வீட்டுக்கு வாருங்கள், சாப்பிடலாம்!" என்று சொன்னான்.

வீட்டுக்கு நடந்து கொண்டே நளினி மாதவனைப் பார்த்து, "அப்பா, இனிமேல் நீ அத்தானை அடிக்கவே கூடாது!" என்று சொன்னாள்.

"இல்லை, அம்மா! நான் இனிமேல் அவனை அடிக்கவே மாட்டேன்!" என்றான் மாதவன்.

பாஸ்கரன் தாயற்ற சிறுமியான நளினியின் அத்தை மகன். மாதவன்தான் அவர்கள் இருவரையும் வளர்த்து வந்தான். நளினி பெயருக்

கேற்ப வளப்பு உள்ளவளாகத் திகழ்ந்தாள். பாஸ்கரன், நளினி இவர்களிடையே ஓர் தெய்வீக அன்பு பரிணமித்தது. மாதவன் ஒரு கலைப் பித்தன். சங்கீதத்தில் அளவில்லாத பிரேமை. அவன் குழலில் எப்படி தேர்ச்சி பெற்றிருந்தானோ, அதேபோல் தன் பெண் நளினியும் வீணையில் வாணியோ என்று ஐயுறும்வண்ணம் திறமை பெற்றிருப்பதைக் கண்டு விம்மிதம் அடைந்தான். ஆதலால் நளினியை வாழ்க்கைத் துணைவியாக அடையக் கூடியவனும் ஓர் உயர்ந்த கலைஞனாகத் திகழ வேண்டும் என்று எண்ணியதில் வியப்பில்லை. தன் சகோதரி மகனான பாஸ்கரனையும் குழலில் வல்லவனாகச் செய்துவிடில் அவன் நளினிக்குக் கணவனாகத் தகுந்தவன் என எண்ணமிட்டான். ஆனால் பாஸ்கரனுக்குக் குழலூதுவதில் ஊக்கமோ திறமையோ இல்லை. அவனுக்குக் குழல் கற்றுக் கொடுத்து அலுத்துப் போன மாதவன் ஒருநாள் பாஸ்கரனை கையைப் புடைத்து 'வீட்டை விட்டுப் போ' என்று சொன்னான். அதன் விளைவாகத் தான் பாஸ்கரன் இரண்டு நாள் வீட்டுப் பக்கமே தலைகாட்டவில்லை. பாஸ்கரனைப் பிரிந்த நளினி ஏங்கித் தவித்தாள். மாதவன் தன் தவறை உணர்ந்தான். இனி எக்காரணம் பற்றியும் பாஸ்கரனை அடிப்பதில்லை என்று தன்னுள்ளே உறுதி செய்து கொண்டான்.

பாஸ்கரனும் வீடு திரும்பிய தினத்திலிருந்து நளினியே அவனுக்கு வீணை கற்றுக் கொடுக்க ஆரம்பித்தாள். முதலில் தன்னைவிடச் சிறியவளிடம் வீணை கற்றுக் கொள்வதில் தயக்கம் கொண்டான். எனினும் அவன்மேலுள்ள அன்பு அத்தயக்கத்தைப் போக்கி விட்டது. நாட்கள் பறந்தன. பாஸ்கரன் இன்னும் சரளி வரிசையே தான் பயின்று கொண்டிருந்தான். நளினி ஒவ்வொரு சமயம் பொறுமை யிழந்ததற்கு அறிகுறியாக நெற்றியைச் சுருக்கிக் கொள்வாள். நாளாவட்டத்தில் வீணைப் பாடம் நின்றது. பாஸ்கரன் மன நிம்மதியுடன் வாழலானான்.

* * *

பாஸ்கர் வீட்டுக் கூரையைப் பார்த்தவண்ணம் படுத்திருந்தான். அவன் பரந்த மார்பும் விரிந்த புஜங்களும், அவன் பெரிய சக்கரவர்த்தியாக வேண்டியவன் என்று சொல்வன போலிருந்தன. நெற்றியில் புரண்ட கருங் கேசம் அவன் பொன்னிற முகத்தை அழகுப் படுத்தின. ஆனால் இன்று அவன் ஓர் இளங் காளை. முகத்திலே இளமையின் சோபை திகழ்ந்தது. அவன் மனமோ தன் வருங்கால மண வாழ்க்கையைப் பற்றிய சிந்தனைக் கடலிலே மிதந்தது. மனம் சந்தோஷத்தினால் துள்ளியது.

இவ்வண்ணம் கற்பனை உலகிலே சஞ்சரிக்கும்போதுதான் சிரிப்பின் ஒலி கேட்டு இப் பூவுலகை அடைந்தான். எதிரே நளினியைக் கண்டான். தேவலோகத்தி லிருந்த கற்பனைப் பெண்ணே தன் எதிரே வந்து நிற்பதாக அவன் எண்ணினான்.

நளினி 'களுக்'கென்ற சிரிப்புடன் பாஸ்கரனை ஏளனமாகப் பார்த்துவிட்டு, இமைக்கும் பொழுதில் அங்கிருந்து மறைந்தாள். நளினியின் சிரிப்புக்கும், பார்வைக்கும் காரணம் தேடினான். சிந்தனை ஓடவில்லை. மேற் கூரையை நோக்கினான். கூரையிலே, ஒரு சிலந்தி தனக்கு ஒரு வீடு கட்ட முயற்சி செய்து கொண்டிருந்தது. பாதி கட்டும் போது கீழே விழுந்து விட்டது. வீடும் கலைந்து விட்டது. மறுபடி அதே முயற்சி. மறு முறையும் தோல்வி. இவ்வண்ணம் பன்முறை. பன்முறையும் தோல்வி. படு தோல்வி. ஆனால் நெஞ்சம் கலங்கவில்லை. மறுபடியும் முயன்றது. இப்பொழுது திடீரென நளினியின் செய்கைகளுக்குக் காரணம் கண்டான் பாஸ்கரன். சிந்தனை கலைந்தான். நெஞ்சு குமுறிற்று. முதலில் கோபம், பிறகு சமாதானம்—இவ்விரண்டுக்குமிடையே ஊசலாடியது அவன் இளம் வாலிப உள்ளம். யோசனையில் ஆழ்ந்தவாறே மறுமுறை கூரையை நோக்கினான். சிலந்தி இன்னும் முயன்றுகொண்டுதா னிருந்தது. முயற்சி......தோல்வி......இப்படியே வெகு நேரம். கடைசி முறையாகக் கண் விழித்து மேல் நோக்கினான் பாஸ்கர். அங்கு சிலந்தி வீடு கட்டி, அதில் அமர்ந்து வெற்றி முரசு கொட்டிக் கொண்டிருந்தது. பாஸ்கர் உள்ளத்திலே ஓர் புத்துணர்ச்சி. அவன் உடலிலே ஓர் ஆவேசம்.

* * *

“நளினா, கண் கலங்காதே. கூடிய சீக்கிரத்திலே சிற்பக் கலையிலே நான் வல்லுவனாகி, உன் கைப் பிடிப்பேன்.”

“அத்தான்! நீங்கள் இதற்காக என்னைவிட்டுச் செல்ல வேண்டுமா! நான் உங்களுடன் வருகிறேன். நீங்கள் போகுமிடம் காடானாலும், மலையானாலும் நான் உங்களைப் பிரியேன்.”

“நளினா, தெரியாமல் பேசுகிறாய். நீ அருகில் இருந்தால் என் மனம் வேறு எதையாவது நாடுமா! நான் ஏகாக்ர சித்தமாய்க் கலை பயில வேண்டாமா! நளினா, நான் துஷ்யந்தனைப் போல் மறதி உள்ளவனல்ல. எனக்கு மலர் முகத்துடன் விடை கொடு.”

“மாமா, நான் வருகிறேன், நமஸ்காரம்.”

பாஸ்கரன் சென்ற திக்கையே கண்களில் நீர் சோரப் பார்த்துக்கொண் டிருந்தாள் நளினி. மாலைக் கதிரவனை இருளெனும் மாயை மூடியது. அக் கூரை வீட்டிலிருந்து வீணையுடன் இழைந்து, இழைந்து ஓர் இனிய குரல் சோக கீதத்தை எழுப்பிக்கொண் டிருந்தது.

* * *

“பாஸ்கரன்! பாஸ்கரன்!”

டங்! டங்! டங்! கல்லுளியின் நாதம்.

“பாஸ்கரா! பாஸ்கரா!” மறுபடி அதே குரல்.

பாஸ்கரன் திரும்பினான். கற்சிலையிலிருந்து தன் நாட்டத்தை எதிரில் நிற்பவர்மேல் செலுத்தினான். எதிரே மதிவாணர் நின்றுகொண் டிருந்தார்.

“என்ன, பாஸ்கரன், நான் கூப்பிட்டது உன் காதில் விழவில்லையா!”

“இல்லை, ஸ்வாமி! இப்போதுதான் உங்கள் குரல் என் காதில் விழுந்தது. மன்னிக்க வேண்டும்.”

“பாஸ்கரா, நீ சிற்பக் கலையிலே படிப்படியாக முன்னேறி, இன்று அக்கலையிலேயே இணையற்றவனாகத் திகழ்கின்றாய். அன்று பங்கஜா வந்ததைக் கூடக் கவனியாமல் நீ சிலை சமைப்பதிலே ஈடுபட்டிருந்தாய். அன்றுதான் நான் உன் கலை ஆர்வத்தை—கலைப் பண்பை உண்மையில் உணர்ந்தேன். நாளைக் காலை ஒரு வித்வத் சபை கூட்டி, உனக்கு ஓர் விலை மதிப்பற்ற பரிசை உரிமையாக்குவேன்” என்றார் மதிவாணர்.

“எல்லாம் உங்கள் ஆசியின் மகிமை!”

* * *

மாலை நேரம். புள்ளினங்கள் தத்தம் கூட்டை அடைந்ததினால் ஏற்பட்ட ஓர் அமைதி.

தடாகத்தின் கரையிலே, சிந்தனையில் ஆழ்ந்து அமர்ந்திருந்தான், சிற்பி பாஸ்கரன். அவன் முகத்திலே கவலையின் ரேகை படர்ந்திருந்தது. இளம்

தெரியாத ஓர் துயரம் அவன் மனத்தைத் துளைத்துக்கொண்டிருந்தது. குவிந்த தாமரையினுள் இருந்து பாடும் வண்டின் கீதம், பிரிவால் வாடும் சோக கீதமாகத் தொனித்தது அவன் காதிலே. மணம் கமழும் தென்றல், வேதனையை உண்டு பண்ணியது அவன் உள்ளத்திலே. செக்கர் வானம், பிரிவினால் வாடும் காதலியின் ரத்தக் கண்ணீராகக் காட்சி யளித்தது அவன் கண்களுக்கு!

தோகை மயில் நாணும் கருங் கூந்தல் புரளப் பங்கஜம் அங்கு வந்தாள். தாழம் பூவை ஒத்த அவள் வெளிர் மேனி, செங்கதிரவனின் ஒளியினால் கோமேதகம் போல் காட்சி யளித்தது. ஆற்றில் உல்லாசமாய் மிதந்து வரும் அன்னம் போல் அவள் நடை பயின்றாள். அம் மாலை நேரம் அவள் உள்ளக் கடலிலே ஓர் உவகைப் புயலை உண்டு பண்ணியது. கரு வண்டின் கீதம், அன்பின் அணைப்பில் கட்டுண்ட காதலரின் பிரேம கீதமாக ஒலித்தது. செக்கர் படர்ந்திருந்த வானம், ஒரு வேளை, தனக்கும் பாஸ்கரனுக்கும் நடக்கவிருக்கும் திருமணத்துக்கு மங்கள ஆலத்தி எடுக்கிறதோ என்று எண்ணலுற்றாள். தென்றலின் குளுமையும், மணமும் அவளுக்கு ஓர் இனம் தெரியாத இன்ப போதையை மூட்டின.

"எந்தக் கோட்டையைப் பிடிப்பதாக உத்தேசம்!" என்று இனிய குரலில் வினவினாள்.

பேச்சுக் குரல் கேட்டுத் திரும்பினான் பாஸ்கர்.

"யாரது பங்கஜமா!"

"ஏன் நான் இங்கு வந்தது உங்களுக்குப் பிடிக்கவில்லையா!" என்றாள்.

"தனிமையாக, இருட்டும் வேளையிலே இங்கு வந்ததின் காரணம்!"

"நான் உங்களை மனமாற நேசிப்பதை நீங்கள் அறியவில்லையா! இங்கு தனிமையை நாடி நீங்கள் வந்ததன் காரணத்தை நானறியலாமா! ஏன் இன்று இவ்வளவு சோகம்! இந்தப் பத்து வருடங்களாகத்தான் கலை, கலை என்று அன்னம் தண்ணீர் இல்லாமல் பாடு பட்டீர்கள். இப்போது தான் உங்கள் லட்சியம் நிறைவேறி விட்டதே! இனியும் என்ன சிந்தனை!"



"பங்கஜம்! நான் இங்கு வந்து பத்து வருஷங்கள் கடந்து விட்டனவா!"-அவன் குரலிலே ஓர் வியப்புத் தொனித்தது.

"கல்லுடன் பழகிப் பழகி உங்கள் மனமும் கல்லாகி விட்டதா! ஜீவ களை ததும்பி நிற்கும் சிலை வடிவங்களைச் செதுக்கும் உங்கள் முகம் ஏன் இன்று களை யிழந்து இருக்கிறது! நளினமான நாரீமணிகளின் உருவத்தைச் செதுக்க வல்ல நீங்கள் ஏன் என்னிடம் இவ்வளவு கடினமாக இருக்கிறீர்கள்!"

"நளினம்!...நளினம்!...ஆஹா! நளினா, என் பாழும் கலை ஆர்வத்திலே உன்னையும் மறந்து போயிருந்தேன்! நளினா, என் பிரிவினால் எப்படி வாடுகின்றாயோ!" — பாஸ்கரன் கண்களில் நீர் முட்டி, ஆறாகப் பெருகியது.

பங்கஜம் ஒன்றும் புரியாமல் திகைத்துக் கற்சிலையென நின்றாள்.

"பங்கஜா, நான் உன்னை நேசிப்பது உண்மைதான். ஆனால் என் இருதயத்தில் நிறைந்திருப்பது நளினாதான்."


"நான் இனி மேல் யாரையும் கண்ணெடுத்தும் காணேன். என் தெய்வம் நீங்கள். உங்களிடம் நான் கொண்ட அன்பு தூய்மையானது. அந்த அன்பையே துணையாகக் கொண்டு வாழ்வேன். நீங்கள் எங்கு சென்றாலும் நானும் உங்களைப் பின் தொடருவேன். இது சத்தியம்" என்று சொல்லி விட்டுப் பங்கஜம் நீர் மல்கும் கண்களுடன் பாஸ்கரனைப் பார்த்தாள். நளினியின் நினைவில் அமிழ்ந்திருந்த பாஸ்கரன் பங்கஜத்தைப் பரிதாபமாகப் பார்த்தான்.

** ** **

பாஸ்கரன் கலை பயிலச் சென்ற தினம் முதல் நளினி, ஓர் கையை இழந்தவள் போலானாள். ஒவ்வொரு நாளும் அவன் வரவை நோக்கி ஏங்கினாள். முன்பு இருந்த குறும்புச் சிரிப்பு ஓடி ஒளிந்தது. தன் கர்வம்தான் இப்பிரிவுக்குக் காரணம் என்று வீணையைக் கையால் தொடக் கூட அஞ்சினாள். மாதங்களும் வருஷங்களும் போட்டி யிட்டுக் கொண்டு ஓடின. ஊர் ஜனங்கள் முதலில் நளினியின் மன உறுதியைப் புகழ்ந்தனர். பிறகு நளினிக்கு வயதாகிறது என்று கவலைப் பட்டனர். நாட்கள் செல்லச் செல்லக் கவலை அனுதாபமாய் உருவெடுத்தது.







சென்னை, பிரபல வழக்கறிஞரான திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்களின் உருவப் படத்தைச் சென்னை அட்வகேட் சங்கத்தில் ஆகஸ்டு 16ம் தேதி முன்னாள் சுப்ரீம் கோர்ட் பிரதம நீதிபதி ஸ்ரீ பதஞ்சலி சாஸ்திரியார் அவர்கள் திறந்து வைத்தார். சாஸ்திரியார், ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் சில காலம் திருவாங்கூர் ராஜ்யத்தில் பிரதம நீதிபதியாக இருந்து புரிந்த அரும் பணியைப் பாராட்டியும், வக்கீல் தொழிலைப் புரிந்து வரும் போது திருமுருகன் புகழைப் பாடும் பெரும் பணியையும் இடையறாது செய்து மக்கள் உள்ளத்தில் 'திருப்புகழ் மணி' என்று இடம் பெற்று விட்ட அவருடைய பக்தியையும் பாராட்டிப் பேசினார். சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீ ரங்கநாத சாஸ்திரி வந்தனோபசாரம் கூறினார்.

நளினியின் மனசை ஏக்கம் அரிக்க ஆரம்பித்தது. படுத்த படுக்கையாகி விட்டாள். காச நோய் அவளைப் பற்றியது. சிவந்த மேனி கறுத்து இளைத்தது. கண்கள் குழிவிழுந்தன. வருஷங்கள் ஓடி மறைந்தன. நளினி பேசக்கூட சக்தி அற்றவளானாள். எப்பொழுதும் 'அத்தான், அத்தான்' என்று பிதற்ற ஆரம்பித்தாள். மாதவன் மனம் நொந்து பிரமை பிடித்தவன் போலானான்.

"மாமா! மாமா!........." இக் குரல் மாதவன் காதில் விழுந்ததும் பிரமை நீங்கி, கதவைத் திறந்தான். உள்ளே பாஸ்கரனும், பங்கஜமும் நுழைந்தார்கள். நளினியை அக் கோலத்தில் கண்ட பாஸ்கரன் துடித்துப் போனான்.

மாதவன் பாஸ்கரனையும் பங்கஜத்தையும் மாறி மாறிப் பார்த்தான். அவன் விழிகளிலே அளவு கடந்த வெறுப்பு இருந்தது. பங்கஜத்தைக் கோபமாக நோக்கினான். பங்கஜத்தை, நளினியின் வாழ்வைக் கெடுக்க வந்த கரு நாகமாகக் கருதினான். நளினி இன்று குற்றுயிராயிருக்க, பங்கஜம் தான் காரணமென எண்ணியது அவன் மனம். நளினியின் வாழ்வைக் கெடுத்தவள் பங்கஜம் என்று அவன் உடல் துடித்தது.

பங்கஜம் கண்ணீர் பெருக, "அக்கா, இதோ பாருங்கள். நான் தான் உங்கள் சகோதரி பங்கஜம். உங்கள் கண்களைத் திறந்து என்னை ஒரு முறையாவது பார்க்க மாட்டீர்களா!" என்று கனிவோடு கேட்டாள். பங்கஜம் உடனே மாதவனை நோக்கி, "அப்பா, நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் நளினிக்குப் பணிவிடை செய்கிறேன். அக்கா எப்படியும் பிழைத்து விடுவாள்" என்றாள். இதைச் சொல்லும் போது அவள் கண்கள் நீரைப் பெருக்கின. இவ் வார்த்தைகளைக் கேட்டு, மாதவன் வெட்கித் தலை குனிந்தான். அவன் மனம் அவனையே நிந்தித்துக் கொண்டது. அவன் குரல் தழதழத்தது.

நளினியின் உடம்பு நாளுக்கு நாள் குணமடைந்தது. பங்கஜமும் இரவும், பகலும் இதே நினைவாய் நளினியைப் பாதுகாத்து வந்தாள். நளினி பூரண குணமடைந்தாள். ஆனால் பங்கஜத்தின் உடல் நாளுக்கு நாள் மெலிந்தது. இராக் கண் விழித்தது, அவள் உடலைப் பாதித்தது. நளினியின் காச நோய், பங்கஜத்தைப் பற்றிக் கொண்டது. அவள் மனத்திலே சொல்ல முடியாத ஒரு ஏக்கம் அவளைப் புழுப்போல் அரித்தது. தன் நோயைப் பற்றி ஒருவருக்கும் சொல்லாமல், பாஸ்கரனுக்கும், நளினிக்கும் தொண்டு செய்வதையே தன் கடமையாகக் கொண்டாள். எத்தனை மறைத்தும் அவளால் தாள முடியாமல் போய் விட்டது. சோர்வு அவளைப் படுக்கையிலே வீழ்த்தியது.

இரவு வந்தது. வெளியே காற்றும் மழையும் குமுறின. மின்னல் கண்ணைப் பறித்தது. வீட்டினுள் கட்டிலில் பங்கஜா படுத்திருந்தாள். பக்கத்தில் பாஸ்கரனும், நளினியும் அமர்ந்திருந்தனர். பங்கஜம் புரண்டு படுத்தாள். "அக்கா" என்று ஈன ஸ்வரத்திலே கூப்பிட்டாள். துக்கம் நெஞ்சை யடைத்தது. ஜாடையினால் பாஸ்கரனையும் அருகே யழைத்தாள். இருவர் கையையும் ஒன்று சேர்த்தாள். இருவர் முகத்தையும் பார்த்துப் புன்னகை பூத்தாள். முகத்திலே அசாதாரணஒளி திகழ்ந்தது.

மறுகணம் எங்கும் அமைதி. ஒரு கோரமான அமைதி. தூரத்திலே சல சல என்ற சப்தத்துடன் மழை நீர் ஓடிக்கொண்டிருந்தது. கூரை வீட்டிலிருந்து ஏக காலத்தில் "பங்கஜம்!" என்ற தீனக் குரல்கள் கேட்போர் மனம் துடிக்கும்படி ஏக காலத்தில் எழுந்தன.

** ** **

"நளினா, வா! நாம் கோயிலுக்குச் செல்லலாம்." நளினியும், பாஸ்கரும் கையில் புஷ்பக் கூடையுடன் ஆற்றின் கரையோர மிருந்த நந்த வனத்தை நோக்கிச் சென்றனர். அங்கே இனிய தாயும், மதியைத் தெளிவிக்கும் உன்னத மண முள்ளதாயும், வஸந்த காலப் பூக்கள் பூத்திருந்தன. அந்த வனத்தின் நடுவே ஒரு சிறு கற்கோயில் அமைக்கப் பெற்றிருந்தது. அதில் ஒவ்வொரு சிற்பமும் அமரசிற்பி, பாஸ்கரன் செதுக்கியது. கோயிலினுள்ளே அகில் புகையின் மணம் கமழ்ந்தது. உள்ளே வெளிர்மேனியுடன் தாமரைப் புஷ்பத்திலே பங்கஜம் வீற்றிருந்தாள்.

உள்ளே நுழைந்த நளினி, 'பங்கஜா' என்று கதறிக் கொண்டே அவ்வுருவச் சிலையின் பாத கமலங்களிலே வீழ்ந்து நமஸ்கரித்தாள். பாஸ்கர் உணர்ச்சிவசப்பட்டவனாய் அசையாமல் நின்றான். இருவரும் புஷ்பங்களை அச்சிலையின் பாதத்திலே சமர்ப்பித்தனர். அப்பாத கமலங்களில் புஷ்பங்களுடன் நீர் முத்துக்களும் வீழ்ந்து அழகுற்றன.

வட்ட மேஜை

வேலை தேடித்தரும் ஸ்தாபனம்

தற்போது நாட்டில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் அல்லல்படும் படித்த வாலிபர்களில் நானும் ஒருவன். வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தில் பதிவு செய்து கொண்டால், வேலை கிடைக்கலாம் என்ற எண்ணத்தோடு அவ்வாறு செய்தேன்.

எண்ணியது போலவே அங்கிருந்து எனக்கு அழைப்பு வந்தது. கடன் வாங்கிக் கொண்டு ஆவலுடன் சென்றேன். அங்கு சென்று ஆபீஸில் அந்த வேலையின் விவரம் கேட்டபோது, அது எங்கள் ஊரில் (புதுக்கோட்டை) உள்ள கோர்ட்டில் ஒரு தற்காலிகமான வேலை என்று பதில் கிடைத்தது. இம்மாதிரி, எங்கள் ஊரிலேயே உள்ள வேலைக்குத் திருச்சிக்கு அழைத்து வீணாகச் செலவு வைப்பது ஏனோ தெரியவில்லை.

மற்றொரு தடவை இதே போல் அழைப்பு வந்தது. மீண்டும் இரண்டு மூன்று ரூபாய் செலவு செய்து கொண்டு சென்றேன். என்னை அழைத்த காரணம் மிக வேடிக்கையாயிருந்தது. அதாவது சில தினங்களுக்கு முன்பு தினசரிப் பத்திரிகையில் பிரசுரமாயிருந்த ஒரு விளம்பரத்துக்கு என்னை மனுப்போடச் செய்வதற்காக அழைத்தார்களாம். மறுபடி என் முகத்தைப் பார்ப்பதற்காக ஒரு தடவை அழைப்பார்களோ என்று அஞ்சுகிறேன்.

புதுக்கோட்டை
13—8—54 எஸ். சாமிநாதன்

●

யாருடைய குற்றம்?

ஜூன் மாதம் 20-ம் தேதி "யாருடைய குற்றம்!" என்னும் தலைப்பில் தாங்கள் எழுதியதை மிகவும் உற்சாகத்துடன் படித்தேன். பரீட்சைகளில் மாணவர்களுக்கு ஏற்படும் தொல்லைகளைத் தாங்கள் அவ்வப்போது எடுத்துக் கூறி வருகிறீர்கள். போற்றுதற்குரியதுதான். பரீட்சைகளில் தோல்வி யடைவதால் மனமுடைந்து விடக்கூடாது என்று தெளிவாக எடுத்துக் கூறுகிறீர்கள்; மெச்சத் தக்கதுதான். பரீட்சையில் தேறியும் வேலை கிடைக்காமல் திண்டாடும் மாணவர்களுக்கு அவ்வப்போது அருமையான புத்திமதிகள் கூறி வருகிறீர்கள். அதுவும் மகிழ்ச்சிக்குரியதே. ஆனால், மாணவர்களை உற்சாகப் படுத்தும் போக்கில் பரீட்சாதிகாரிகளைத் தூற்றுவதுதான் வருந்தத் தக்கது. நான் ஒரு கல்லூரி ஆசிரியன் என்ற முறையில் சில விஷயங்களைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

முதலாவதாக, மாணவர்களின் தாள்களைத் திருத்தும் பரீட்சாதிகாரிகள், தங்கள் மேலதிகாரிகள் போடும் சட்ட திட்டங்களுக்கேற்பத் தான் திருத்த வேண்டும்.

இரண்டாவதாக, எஸ். எஸ். எல். ஸி., இ. எஸ். எல். ஸி., போன்ற பரீட்சைகளில் கொடுக்கப்படும் கேள்விகள் (சிலவற்றைத் தவிர) அனேகமாகச் சிறியவையே. அதாவது இக் கேள்விகளுக்கு விடைகள் அனேகமாகப் பத்து அல்லது பதினைந்து வாக்கியங்களுக்கு மேல் போகா. அவற்றிற்கு அளிக்கப்படும் மார்க்குகளும் ஐந்து அல்லது பத்து மார்க்குகளுக்கு மேல் இருப்பதில்லை. அப்படிப்பட்ட ஒவ்வொரு விடைக்கும் ஒரு மாணவன் பத்து அல்லது பதினைந்து தப்புகள் வீதம் செய்தால், பரீட்சாதிகாரிதான் என்ன செய்வார்!

மூன்றாவதாக, இப் பரீட்சைகளில் அனேகமாக ஒவ்வொரு கேள்வித்தாளும் இரு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு அவை வெவ்வேறு பரீட்சாதிகாரிகளால் திருத்தப்படுகின்றன. மாணவனொருவன் ஒரு பாகத்தில் மிகக் குறைவாக மார்க்குகள் வாங்கினால் மற்றொரு பாகத்தைத் திருத்தும் பரீட்சாதிகாரி என்ன செய்ய முடியும்!

நான்காவதாக, பரீட்சாதிகாரி மாணவனின் மார்க்கைச் சரியாக முப்பத்து நான்கு தான் என்று எவ்வாறு எடை போடுகிறார் என்று வியப்படைகிறீர்கள். ஐந்து அல்லது பத்து மார்க்குகளுக்கு மேல் போகாத சிறிய கேள்விகள் இருக்கும்போது எடை போடுவது சுலபம்தான். ஒவ்வொரு தப்புக்கும் அரை அல்லது கால் மார்க்குக் குறைத்துப் போடலாம். ஆனால், ஒரு கதைப் போட்டியில் குறிப்பிட்ட கதைதான் முதற் பரிசுக்குத் தகுந்ததென எவ்வாறு எடை போடுகிறார்கள் என்பது இன்னும் வியப்பல்லவா!

திருப்பதி
16—7—54 ஜே. இலட்சுமி நரசிம்மன்

[குறிப்பு:— ஒரு கதை முதற் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்படாததால் ஒருவருடைய வாழ்க்கை பாழாகப் போவதில்லை. இளம் மாணாக்கர்களின் நிலைமை அப்படியன்று. பரீட்சைத் தாள்களைத் திருத்துவோரை மட்டும் நாம் குறை கூறவில்லை. இப்போதுள்ள பரீட்சை முறையையே ஆட்சேபிக்கிறோம். —ஆசிரியர்]

●

கவனிப்பார்களா!

யுத்தத்துக்குப் பிறகு நாட்டில் உணவுப் பஞ்சம் மிகக் கடுமையாக இருந்தது. அப்போது அதிக உணவு உற்பத்திப் பெருக்குத் திட்டத்தின் கீழ், சேலம் ஜில்லா கலெக்டராக இருந்த ஸ்ரீ சிவசங்கரம் பிள்ளை அவர்கள் காவேரி இன்ஜின் பம்பு செட் மூலம் நதியிலிருந்து தண்ணீர் இறைத்துப் பாய்ச்சி உணவு உற்பத்தியைப் பெருக்குங்கள் என்று தீவிரப் பிரசாரம் செய்து வந்தார். அதே சமயம் தஞ்சாவூரில் ஆர். ஸி. டிவிஷன் சூப்பிரின்டெண்டிங் இன்ஜினீயராக இருந்த ஸ்ரீ ராமசுந்தரம் அவர்களும் அந்தப் பிரசாரத்துக்கு ஆதரவாக இருந்தார். அவர்களின் பிரசாரத்தையும், சொல்லையும் நம்பி, சேலம் ஜில்லா காவேரி ஓரம் அனேக விவசாயிகள் பல ஆயிரக் கணக்கான ரூபாய்கள் செலவு செய்து காவேரி நதியிலிருந்து இன்ஜின் பம்பு செட்டு மூலம் தண்ணீர் எடுத்துச் சாகுபடி செய்து வருகிறார்கள்.

அதிகாரிகளின் பிரசாரம் வெறும் ஏமாற்றமாகவே போய் விட்டது. அவர்களின் பிரசாரத்தை நம்பிய விவசாயிகள் பூமியைச் சாகுபடிக்கு லாயக்குள்ளதாக்கப் பல ஆயிரக் கணக்கான ரூபாய்களைத் தங்கள் சக்திக்கும் மீறிக் கடன் வாங்கிச் செலவு செய்திருக்கிறார்கள். தற்போது விவசாயப் பொருள்களின் விலைவாசிகள் இறங்கி வரும்போது விவசாயி வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கும் நிலையில் இல்லாமலிருக்கிறான். உழுத மாட்டை நுகத்தால் இடிப்பது போல் சர்க்கார் நடவடிக்கை இருந்து வருகிறது. காவேரித் தண்ணீர் எடுத்துப் பாய்ச்ச முறைப்படி விண்ணப்பங்கள் செய்து பல வருஷங்களாகியும் அதிகாரிகளால் கவனிக்கப்படவில்லை. இருந்தாலும் 'ஸ்டாண்டிங்

ஆர்டரில்' கண்ட அளவில் அதாவது ஏக்கர் 1க்கு வருஷத்துக்கு ரூ. 255 தண்டத் தீர்வையும் தண்ணீர்த் தீர்வையுமாக வசூல் செய்யத் தவறவில்லை. இதற்கு ஜில்லா கலெக்டரை அணுகிக் கேட்டதற்குத் தாம் ஒன்றும் செய்வதற்கில்லை என்கிறார்.

எல்லா இடங்களிலும் அணை கட்டி, வாய்க்கால் வெட்டிப் பல கோடி ரூபாய்கள் செலவு செய்து பாசனத்துக்குத் தண்ணீர் கொடுக்கும் சர்க்கார், சொந்த முயற்சியில் அதுவும் ஜில்லா அதிகாரிகளின் பிரசாரத்தை நம்பிச் செலவு செய்து சாகுபடிக்குக் கொண்டு வந்த நிலத்துக்கு ஏக்கர் ஒன்றுக்கு 255 ரூபாய் தீர்வை விதித்தால் ஏழை விவசாயிகளின் கதி என்ன!

விட்டம் பாளையம்
4—8—54 வி. டி. சேதுராமலிங்கம்

●

கல்கத்தா மெயில்

சென்னையிலிருந்து புறப்படும் கல்கத்தா மெயிலில் மூன்றாம் வகுப்புக்கு ரிஸர்வேஷன் செய்யாமலிருப்பது மிகவும் கஷ்டத்தைக் கொடுக்கிறது. கல்கத்தாவிலிருந்து புறப்படும் மதராஸ் மெயிலில் மூன்றாவது வகுப்பு ரிஸர்வேஷன் செய்யும் பொழுது இங்கிருந்து கிளம்பும் மெயிலில் ஏன் செய்வதில்லை! இதனால் ரயில்வேக்கு அதிக வருமானம்; ஜனங்களுக்கும் சௌகரியம்.

"ஹௌரா பிரயாணிகளுக்கு மட்டும்" என்று எழுதியுள்ள வண்டித் தொகுதியில் நடுவில் இறங்கும் பிரயாணிகளும் ஏறுகிறார்கள். ஹௌரா வரையில் டிக்கட் பரிசோதகர் ஒருவரும் வருவதில்லை யாதலால் டிக்கட்டில்லா பிரயாணிகளும் ஏறிக் கூட்டத்தை அதிகமாக்குகிறார்கள்.

கல்கத்தாவிலிருந்து புறப்படும் மதராஸ் மெயிலிலும், மதராஸிலிருந்து புறப்படும் கல்கத்தா மெயிலிலும் தூரப் பிரயாணிகள், சௌகரியத்தை முன்னிட்டு "ஹௌரா—மதராஸ், மதராஸ்—ஹௌரா பிரயாணிகளுக்கு மட்டும்" என்று தனியாக ஒரு சிறிய பெட்டியை ஒதுக்கவேண்டும். இரு தரப்பிலும் இடம் ரிஸர்வ் செய்ய வசதி வேண்டும். வண்டி புறப்படுவதற்குப் பத்து நிமிடங்களுக்கு முன் அந்தப் பெட்டியில் ரிஸர்வ் பிரயாணிகள்தான் பிரயாணம் செய்கிறார்களா என்று பரிசோதிக்க வேண்டும். பெஜவாடா, வால்டேர் போன்ற ஜங்ஷன்களில் டிக்கட் பரிசோதகர்கள் விஜயம் செய்து டிக்கட்டில்லாப் பிரயாணிகளை இறக்கிவிட வேண்டும்.

சர்க்காருக்கு மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளால்தான் அதிக வருமானம் ஏற்படுகிறது என்பதை உணர்ந்து அவர்களுக்கு அதிக சௌகரியங்கள் செய்து கொடுக்க அதிகாரிகள் முன்வர வேண்டும்.

கல்கத்தா
19-7-54 வ. கி. ஜ. நாதன்

●

பௌத்த சந்நியாசிகளா?

இலங்கை சிங்கள தேசிய காங்கிரஸ் கூட்டமொன்றில், இரண்டு பௌத்த சந்நியாசிகள் பேசியிருப்பதைப் பார்த்தால் அவர்கள் அஹிம்சா மூர்த்திகளா என்று கேட்கத் தோன்றுகிறது.

"இந்தியாவிலுள்ள போர்த்துகீசியரையும் பிரஞ்சுக்காரர்களையும் வெளியேறுமாறு இந்திய பிரதம மந்திரி நேரு கோருவதைப் போல், இலங்கைப் பிரதமர் இந்தியர்களை வெளியேறக் கோருவதில் தவறொன்றுமில்லை" என்று மிரிஸே சந்திர ஜோதி தேரோ என்பவர் கூறியிருக்கிறார்.

போர்த்துகீசியரும், பிரஞ்சுக்காரர்களும் எந்த விதத்தில் இந்தியாவின் ஒவ்வொரு பாகங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள்! அதே போன்று இலங்கையிலுள்ள இந்தியர்கள் எந்த விதத்தில் இலங்கை நாட்டை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள்! இவை இரண்டுக்கும் உள்ள பாகுபாட்டை விளக்கிக் காட்ட வேண்டும்.

மற்றுமொரு சந்நியாசியான குணரத்ன தேரோ என்பவர் "இந்த ஸ்தாபனம் அரசியல் பற்றற்றது. ஆனால் இந்தியா, பாகிஸ்தான் பிரஜாவுரிமைச் சட்டத்தைக் கண்டிப்பதுதான் இதன் நோக்கம்" என்று முன்னுக்குப் பின் முரணாகப் பேசியிருக்கிறார். பிரஜா உரிமையைக் கண்டிப்பது என்றாலும், அதுவும் அரசியலில் சம்பந்தப்பட்ட வார்த்தைகள் தானே! அவருக்கோ, அந்த ஸ்தாபனத்துக்கோ அரசியலில் அக்கறையில்லையென்றால், இந்தியா, பாகிஸ்தான் என்ற பேச்சுக்கு அங்கு இடமில்லை. மற்றொன்று அங்குள்ள ஈழ நாட்டுத் தமிழர்களும் அன்னியர்களாம்!

இன்று இலங்கை நாடு மற்ற நாடுகளைப் போல் செல்வாக்குப் பெற்று விளங்குவது யாரால்! யாருடைய உழைப்பின் பயனால்! என்பதை நெஞ்சிலே கை வைத்துச் சொல்லுங்கள் பார்க்கலாம்! வெள்ளை ஏகாதிபத்தியம் இலங்கையிலிருந்து கோடிக் கணக்கில் சுரண்டிக் கொண்டு போனது போல் இந்தியர் இலங்கையைச் சுரண்டிக் கொண்டு போக வரவில்லை. காடுகளை வெட்டிப் பல தோட்டங்களைச் செப்பனிட்டான் இந்தியன். நாடுகளின் மத்தியிலே பல நகரங்களையும் கட்டி வைத்தான் இந்தியன். பகலென்றும் இரவென்றும் பாராமல், வெய்யிலிலும் மழையி

லும், பனியிலும், குளிரிலும் மாடுகளைப் போல் உழைத்தான் இந்தியன். இன்னும் உழைத்துக் கொண்டுதான் இருக்கிறான். அத்தகையவனுக்கு இன்று நீங்கள் கொடுக்கும் பரிசுகள் என்ன! சுரண்ட வந்தவன், சுயநலக்காரன், ஒண்ட வந்தவன், 'ஓடடா ஊரை விட்டு' என்ற நச்சு வார்த்தைகள்தான், கருணை நிறைந்த புத்தரின் பெயரால், நீங்கள் கொடுக்கும் பரிசு.

சென்னை
12-8-54 வி. சுப்பையா

●

முகாந்தரம் வேண்டும்!

நீங்கள் 'கல்கி'யில் வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தைப் பற்றி வந்த கடிதங்களைப் படித்தேன். மற்றோர் ரசமான விஷயத்தை இங்கு கூறுகிறேன். நான் மேற்படி ஸ்தாபனத்தில் எனது பெயரைப் பதிந்து வந்து சரியாக ஒரு வருடம் ஏழு மாதங்களாகின்றன. என்னை இதுவரை ஒரு இன்டர்வியூவுக்குக் கூட அழைக்கவில்லை. நானும் தவறாமல் புதுப்பித்துக் கொண்டுதான் வருகிறேன். தற்சமயம் எங்கள் தாலுக்கா (நிலக்கோட்டை) ஆபீஸில் செக்ஷன் ரைட்டர் ஸ்தானம் காலியாக இருக்கிறது. அதற்கு வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தார் என்னை அனுப்பவில்லை. ஆனால் எனக்குப் பின் பதிந்து கொண்டவர்களுக்கு இன்டர்வியூ கார்டு அனுப்பியிருக்கிறார்கள். எனக்கு ஏன் அனுப்பவில்லை என்பதற்கு வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தார் சரியான முகாந்தரம் கூறுவார்களா!

சோழவந்தான்
17—8—54 வாசுதேவன்

●

சர்க்காரின் கடமை

இலங்கை அரசாங்கத்தின் நாடு கடத்தும் கொள்கையினால் உருவாகியுள்ள அவசர நிலைமையை உத்தேசித்து, சென்ற ஜூலை மாதம் 14ம் தேதி சென்னை, நுங்கம்பாக்கத்தில் இருக்கும் "வேலை தேடித் தரும் ஸ்தாபன"த்துக்கு வேலைக்காக என்னுடைய பெயரைப் பதிவு செய்ய மனுக் கொடுத்திருந்தேன். அம்மனுவில் இந்தியாவில் நான் வசிக்கும் என்னுடைய நிரந்தர விலாசத்தையும், அப் பகுதியில் நான் பெற்ற கல்வியின் தராதரத்தையும், இதர யோக்கியதாம்சங்களையும், மற்றும் இவ்விடம் நான் அடைந்துள்ள முந்தைய அநுபவங்கள் பற்றியும், தற்போது இவ்விடம் பார்க்கும் வேலையைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தேன்.

அம் மனுவை மேற்படி ஸ்தாபனத்தார் நான் நிரந்தரமாய் வசிக்கும் ஊராகிய கருங்குளம் சமீபமாக உள்ள திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த பாளையங் கோட்டையில் இருக்கும் 'வேலைத் தேடித் தரும் ஸ்தாபன'த்துக்கு அனுப்பி யிருக்கிறார்கள். பாளையங்கோட்டையிலுள்ள மேற்படி ஸ்தாபனத்தின் அதிகாரி, அம் மனுவுக்குப் பதில் கொடுக்கும் அடையாளமாக, முன் கூட்டியே இப்படியான மனுக்கள் வெளி நாடுகளிலிருந்து வரும் என்று எதிர்பார்த்து அதற்குரிய முறையில் பதில்கள் 'டைப்' அடித்து வைத்திருந்தபாரங்களில் ஒன்றை எடுத்து, தேதியை மட்டும் (22-7-54) பூர்த்தி செய்து எனக்குரிய விலாசத்துக்கு அனுப்பியிருந்தார். அவர் முன் கூட்டியே 'டைப்' பண்ணித் தயாராக வைத்திருக்கும் பதிலை நேயர்கள் அறிவார்களானால் ஆச்சரியப்படுவார்கள்.

"இந்திய யூனியனில் எங்களுடைய உதவியை நாடி தேதி......யிட்ட வேலைக்கான மனுவை நாங்கள் பெற்றுக் கொண்டோம். நீங்கள் இந்திய யூனியனுக்கு வெளியில் வசிப்பதினாலே உங்களுக்குப் பயன் அளிக்கக் கூடிய உதவி செய்ய முடியாமல் இருப்பதைப் பற்றி வருந்துகிறோம். இருந்தாலும் நீங்கள் இந்தியாவில் வசிக்கும் சமயத்தில் உங்கள் பக்கத்திலுள்ள 'வேலை தேடித் தரும் ஸ்தாபன'த்துக்கு விண்ணப்பிக்கலாம். அப்போது உங்களுக்குக் கூடுமான உதவிகள் எல்லாம் செய்யப்படும்" என்று ஜில்லா வேலை தேடித் தரும் ஸ்தாபன அதிகாரி குறிப்பிட்டிருந்தார்.

திரும்பவும் அவர் எழுதிய கடிதத்துக்கு என் நிலைமையை விளக்கி எழுதினேன். "இலங்கை சர்க்கார் தற்காலிக வாச பர்மிட் எடுத்தவர்களுடைய காலத்தவணை முடிந்த 25,000 பேர்களை நாடுகடத்தத் திட்டமிட்டிருக்கிறது. முதலில் 5,000 பேர்களை அக்டோபர் மாதத்தில் அனுப்புவதென்றும், மீதியுள்ளவர்களைப் படிப்படியாக நாடு கடத்தவும் உத்தேசித்துள்ளது. இந் நிலைமையில் என்னுடைய தற்காலிக வாசபெர்மிட் இந்த வருஷம் நவம்பர் மாதத்தில் காலத் தவணை முடிவடைகிறது. நான் இந்தியாவுக்குத் திரும்ப வேண்டியிருப்பதால், தயவு செய்து என்னுடைய பெயரைத் தங்களுடைய ஸ்தாபனத்தில் வேலைக்காகப் பதிவு செய்து கொள்ள வேண்டும்" என்று எழுதியிருந்தேன். அதற்குத் திரும்ப அந்த அதிகாரியிடமிருந்து, எங்கள் காரியாலய 22-7-54 கடிதத்துக்கு மேற்கொண்டு நடவடிக்கை இந் நிலைமையில் எடுக்க முடியாமல் இருப்பதைப் பற்றி வருந்துகிறேன் என்று தபால் கார்டில் பதில் வந்தது.

இலங்கையிலிருந்து நாடு கடத்தும் கொள்கையினால் அதிகக் கஷ்டத்துக்குள்ளாகி இருப்பவர்கள் பெரும்பாலும் சென்னை மாகாணத்தைச் சேர்ந்த எளிய சிப்பந்திகள்தான். வேலை யிழந்து தங்கள் தாய் நாட்டுக்குத் திரும்புகிற சிப்பந்திகளை அங்கு வேலை கொடுத்து உதவ வேண்டியது சென்னை சர்க்காரின் விசேஷ கடமையாகும்.

கொழும்பு
16-8-54 தோ. வி. தங்கையா பூபாலராயன்

●

எங்கள் குறை தீருமா?

நான் சென்ற 1953ம் ஆண்டில் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் தேர்ச்சி பெற்றேன். டைப்ரைட்டிங் லோயர்கிரேட் பரீட்சையிலும் தேர்ச்சி பெற்றேன். தந்தி அடிக்கும் பயிற்சியும் பெற்றேன். நான் எஸ். எஸ். எல். ஸி.யில் தேறிய சில தினங்களிலேயே என்னுடைய பெயரைக் குமாஸ்தா பதவிக்கு வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தில் பதிவு செய்து கொண்டேன் அங்கு பதிவு செய்து ஒன்றரை வருடத்துக்கு மேல் ஆகிறது. அங்கிருந்து எனக்கு எந்தவிதமான அழைப்பும் இதுவரை வரவில்லை.

என் போன்ற ஏழைகளின் கதிதான் என்ன! வேலை கிடைக்காமல், வீட்டில் சாப்பிட்டுக் காலம் கடத்தும் என் போன்ற தோழர்கள் பெற்றோரிடமிருந்து கிடைக்கும் கடும் சொற்களுக்கு ஆளாக நேரிடுகிறது. எங்கள் குறையைத் தீர்க்க எந்த அரசியல் கட்சிகளும் முயற்சி எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

செங்கல்பட்டு
15-8-54 ஜி. கேசவன்

போட்டிக் கதை :

அதிகார தோரணை



சுகுண

நான் பாங்கி ஒன்றில் குமாஸ்தா. என்னுடன் சக - குமாஸ்தாக்கள் நால்வர். நாங்கள் தின வரவுப் பகுதியில் வேலை செய்து கொண்டிருந்தோம். எங்கள் பகுதித் தலைமைக் குமாஸ்தா வேலையிலிருந்து ஓய்வெடுத்துக் கொள்ள இன்னும் ஆறு மாத காலமே இருந்தது. ஆனால் அவர் விடாப்பிடியாக இன்னும் எத்தனை நாள் இருப்பாரோ, யார் கண்டது? என் வரையில் அவர் வெகு கண்டிப்பான மனிதர். ஏனெனில், என் வேலையில் ஏதாவதொரு பிசகு கண்டு பிடிப்பது அவரது முக்கியமான தினசரி அலுவல்களில் ஒன்று.

சின்னஞ் சிறு விஷயத்துக்கும் கூடப் பிரமாதமாகக் கடிந்து கொள்வார். என் சக - குமாஸ்தாக்களுக்கு முன்னிலையிலேயே என்னை ஒருவர் கண்யக் குறைவாக நடத்தினால் எனக்குக் கோபமும் தாபமும் வெறுப்பும் விரக்தியும் ஏற்படாமல் என்ன செய்யும்?

எனக்குத் தன் மான உணர்ச்சி என்பது இடையாதா? சுயமதிப்புக்கும் மரியாதைக்கும் பங்கம் ஏற்பட எந்த நாகரிக உள்ளம் தான் இடம் கொடுக்கும்? நான் என்ன அப்படி சுயபுத்தியற்ற சாதுவா? அல்லது, மான - அவமான உணர்ச்சியற்ற ஜடமா? அந்தப் பாங்கியில் உத்தியோகமேற்றுப் பதினைந்து வருடங்கள் குப்பை கொட்டி அநுபவம் பெற்றுள்ள என்னைத் தனியாகக் குறிப்பிட்டு அந்த மனிதர் ஏன் அப்படி நடத்த வேண்டும்? நான் அந்தப் பகுதியிலுள்ள மற்றக் குமாஸ்தாக்களை விட வேலை அதிகம் கற்றவனாய் இருக்க என்னை ஏன் அவர் அப்படி அடிக்கடி துன்புறுத்த வேண்டும்? அது எனக்குக் கௌரவக் குறைச்சலில்லையா? அவர் மனத்தில் ஏதோ சூதிருக்கிறது! அதன் காரணமாகச் சுயநலங் கொண்டு என்னைக் கெடுக்க வழி தேடுகிறார். இப்படியெல்லாம் என் சிந்தனை ஓடியது.

நானும் மற்ற சககுமாஸ்தாக்கள் நால்வரை விடக் கல்லூரிப் படிப்புப் படித்துப் பெரிய பட்டங்கள் பெற்று விடவில்லை. ஆயினும் என் நான்பட்ட அனுபவமும் என்ன ஆவது? வெறும் ஏட்டுப் படிப்புக்கும் அனுபவத்துக்கும் வித்தியாசமில்லையா?

எனவே, என் வேலையில் அவர் சமயா சமயமின்றிப் புகுந்து குறுக்கிடுவது எனக்குப் பல சமயங்களில் அருவருப்பை ஊட்டும். என்னையும் மீறி அவருடைய அனுவசியமான குறுக்கீட்டைக் கண்டித்து, அவமரியாதையுடன், அவர் முகத்துக் கெதிரிலேயே பேசினால் என்ன என்று கூடத் தோன்றும். நெஞ்சில் குமுறி வரும் ஆத்திரத்தை யெல்லாம் கொட்டி வார்த்தைகளால் அவரைச் சுட்டுப் பொசிக்கித் தள்ளினால் என்ன என்று எண்ணுவேன். ஆனால், இந்த வெட்கக் கேட்டை என்ன வென்று சொல்வது? நேரிடையாக அவர் என் எதிரில் வந்து விட்டால் முகத்தில் அறைந்தாற்போல் பேச எனக்குத் தைரியம் வருவதில்லை. இந்தப் பயங்கொள்ளித் தனம் எங்கிருந்து வந்தது என்றுதான் புரியவில்லை.

தப்பித் தவறி 'ஆமாம், இல்லை' என்பது போன்ற இரண்டொரு வார்த்தைகள் வாயிலிருந்து வெளி வருவதே பிரும்மப் பிரயத்தனமாகி விடும்.

இந்த மனோ பலவீனம் ஏன்? தன்னம்பிக்கையை இழந்ததனால் ஏற்பட்ட தாழ்வு மனப்பான்மையால் தானே?

நான் உத்தியோகமேற்றுப் பதினைந்து வருஷங்கள் உழைத்தாகி விட்டது. இந்த வேலையை நம்பி மணம் செய்து கொண்டு இரு குழந்தைகளுக்குத் தந்தையுமான நான் இதைக் கை விட்டு மறுபடியும் உத்தியோக வேட்டையில் இறங்க இஷ்டப்படவில்லை—அப்படியே நான் இஷ்டப் பட்டாலும் எனக்குத் தைரியம் உண்டாகவில்லை. அதனால் அந்த மனிதருக்குப் பயந்து வந்ததை அனுபவித்துக் கொண்டு சும்மாயிருப்பதைத் தவிர வேறொரு வழியும் எனக்குப் பிடிபடவில்லை.

இப்படித்தான் ஒரு நாள் என்னைத் தேடிக் கொண்டு வந்த ஒரு உறவினருடன் அரை மணி நேரம் போய்ப் பேசும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அப்படிப் பேசிவிட்டுத் திரும்பி வந்த என்னைப் பார்த்து மானேஜர் 'அவர் எங்கே?' என்று கேட்டதாகவும் அதற்கு அவரிடம் உண்மையைச் சொல்லி விட்டதாகவும் இனிமேல் தன்னுடைய உத்தரவின்றி என் இடத்தை விட்டுப் போகக் கூடாது என்றும் எங்கள் தலைமைக்

குமாஸ்தா கட்டளை இட்டார். அதிகார தோரணையில் பயமுறுத்தினார்.

எனக்கு அளவு கடந்த ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது.

"ஏனையா! நான் ஒருவன் தானா உமக்குப் பயமுறுத்த அகப்பட்டேன்? என்னை ஏன் நீர் தொடர்ந்து விரட்டுகிறீர்? ஒரு அரை மணியில் வேலை தடைப்பட்டா போய் விடும்? ஒருவர் பார்த்துப் போக வந்தால் அவரிடம் எப்படிப் பேசாமல் இருப்பது? நான்பயந்த சுபாவமுடையவனாயிருக்கிறேன் என்பதற்காக ஓட ஓட விரட்டுகிறீரே! சும்மா நிறுத்தும், ஐயா!"

இப்படி உள்ளத்திலிருந்து சீறி யெழுந்த வார்த்தைகள் தொண்டையைத் தாண்ட மறுத்து விட்டன. "சரி, சார்!" என்று அவருக்குச் சமாதானமான பதிலையே சொல்லி வைத்தேன்.



அன்று சனிக்கிழமை. காரியாலயம் இரண்டு மணி வரைதான். அப்படியிருந்தும் வேண்டுமென்றே அவர் என்னைத் தொந்தரவு செய்து நிர்ப்பந்தித்தது எனக்கு அளவில்லாத வெறுப்பைத் தந்தது. என்ன செய்வது? நான்தான் வாயற்றபிண்டமாயிற்றே! அவரிடம் வாதாட எனக்குத் தைரியம் ஏது? என்னைப் பார்த்து எக்களித்துச் சிரித்துக் கொண்டு செல்லும் மற்ற சக-குமாஸ்தாக்களின் நகையாடலைப் பொருட்படுத்தாமல் பாழும் தலையெழுத்தைப் பலதரம் நொந்துகொண்டு அவர் இட்ட வேலையைச் செய்து முடித்தேன். கடிகாரத்தில் மணியும் ஒன்றன் பின் ஒன்றாக நான்கு அடித்தது.

அப்பொழுதுதான் எனக்கு வீட்டின் நினைவு வந்தது. அடாடா! குழந்தைகளை இன்று கடற்கரைக்கு அழைத்துப் போவதாகச் சொல்லி யிருந்தேனே! எனக்காக எவ்வளவு ஆவலுடன் காத்திருப்பார்கள்? அழகாக ஆடை அணிந்து கொண்டு வாசலை எட்டிப் பார்த்துக் கொண்டிருப்பார்களே? இனி நாம் இங்கிருந்து புறப்பட்டுப் பஸ் பிடித்து வீட்டுக்குப் போய்ச் சேருவதற்குள் மணி ஆறு அடித்து விடப் போகிறது. அப்புறம் புறப்பட்டுக் கடற்கரைக்குப் போய்க் குழந்தைகளுக்கு என்ன காட்ட முடியும்? இருட்டிய பின் கடற்கரையில் என்ன காண இருக்கப் போகிறது? நாம் கடற்கரைக்குப் போய்ச் சேருவதும் மற்றவர்கள் அங்கிருந்து திரும்புவதுமாயிருக்கும்!

சே! இந்தத் தலைமைக் குமாஸ்தாவுக்கு என்னிடம் என்ன இத்தனை வைரம்? மற்றவர்கள் எல்லோரையும் காரியாலயம் முடிந்ததும் வீட்டுக்கு அனுப்பி விட்டு, என்னிடம் மட்டும் செக்கு மாடாக வேலை வாங்குகிறாரே! நானும் அவர்களைப்போல் குழந்தை குட்டிக்காரன்தானே? எனக்கும் குடும்பத்தாருடன் குஷியாகஇருக்க ஆசை இராதா?

இந்த எண்ணம் எனக்குத் தலைமைக்குமாஸ்தாவின் மீது ஏகப்பட்ட ஆத்திரத்தைக் கிளப்பி விட்டது. இந்தக் காரியாலயத்தை விட்டு இவன் சீக்கிரம் தொலையமாட்டானா? அல்லது நமக்குத்தான் வேறு விடிவு காலம் ஏற்படாதா? இவ்வாறு எண்ணியவாறே வீட்டை அடைந்தேன். நான் நினைத்தபடி நன்றாக இருட்டி விட்டது. அப்புறம் குழந்தைகளை அழைத்துக் கொண்டு கடற்கரைக்கு எங்கே போவது?

எனக்குத் தலைமைக் குமாஸ்தாவின் மீது ஆத்திரம் வந்தது போலவே குழந்தைகளுக்கு என்மீது ஆத்திரமாக வந்தது. மனைவி வேறு என்னைக் குத்திக் காட்டினாள்.

இரவு படுக்கையில் படுத்த எனக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. தலைமைக் குமாஸ்தாவின் மீது வந்த ஆத்திரம், அவரை நம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்று தோன்றவே காரியாலயத்தின் மீது பாய்ந்தது, பெண்டாட்டியைக் கோபித்துக் கொண்டு பிள்ளையை அடித்த கதையாக.

இடைத் தூக்கத்தில் கண் விழித்த என் மனைவி, "என்ன, இன்னும்நீங்கள் தூங்க வில்லையா?" என்று மிகுந்த பரிவுடன் கேட்டாள்.

"சரஸு, ஒரு சமாசாரம்" என்றேன்.

"என்ன?"

"சரசு இதோ பார்! நான் சொல்வதைக் கவனி. தூங்கி வழியாதே. திங்கட்கிழமை நான் காரியாலயம் போனவுடன் நேராக மானேஜரிடம் சென்று ஒரு கால் கடுதாசியில் என் ராஜிநாமாவை எழுதிக் கொடுக்கப் போகிறேன். ஆமாம். நிச்சயமாகத்தான். படைத்த கடவுளுக்குச் சோறு போடத் தானா தெரியாது? நீ மிரண்டு விடாதே! நாமும் குழந்தைகளும் பட்டினியாய்க் கிடந்து செத்துப் போக மாட்டோம். இன்றைக் கில்லா விட்டால் இன்னொரு நாள் வேலை கிடைக்காமலா போய் விடும்? நான் அந்த மகா பாவி தலைமைக் குமாஸ்தாவின் முகத்தில் விழிக்காமல் ராஜிநாமாவை மட்டும்

பராமுகம் ஏனோ?

சிங்களத் தீவில் உள்ள இந்தியர்களுக்கு ஈழத்துச் சர்க்கார் இழைத்து வரும் இன்னல்கள் நாளுக்கு நாள் அதிகமாகி வருகின்றன. இந் நிலையில் இங்கு ஒரு கூட்டத்தார் 'மூச்சிங்கள முன்னணி' என்னும் நாமதேயத்துடன் வகுப்பு வெறியைத் தூண்டி இங்கேயும் ஒரு நவகாளியைச் சிருஷ்டிக்கக் கங்கணங் கட்டிக் கொண்டிருக்கின்றனர். இதை ஈழத்து அரசியலாரும் பார்த்துக் கொண்டிருக்கின்றனரே யன்றி அடக்கும் வழியைக் காணோம். சில தினங்களுக்கு முன் இக் கோரத் தாண்டவம் மாவனல்லை போன்ற இடங்களில் மூண்டது குறிப்பிடத்தக்கது. ஆகவே தான் இலங்கையிலுள்ள இந்தியர்கள் யாவரையும் திரும்பி யழைத்துக் கொள்ளும்படி முழு மனதுடன் நேருஜியைக் கோருகிறோம்.

முப்பத்தாறு கோடி ஜனங்கள் வசிக்கும் பாரதத்தில் கேவலம் பத்து லட்சம் இலங்கை இந்தியர்களுக்குத்தானா இடத்துக்குப் பஞ்சம் ஏற்பட்டு விடும்! இலங்கை இந்தியர் நலனில் அக்கறை காட்டும் யாவரும் இந்தக் கோரிக்கையை முழு மனத்துடன் வரவேற்பார்கள் என்பதில் எங்களுக்குச் சிறிதும் ஐயமில்லை.

அஸ்ஸாம் அகதிகளுக்கும், கொரியா கைதிகளுக்கும் மற்றும் நலங்காண நாடிவரும் எவர்க்கும் புனர் ஜன்மம் அளிக்க நல்வரவு கூறும் பெருமை மிக்க பாரதம், இலங்கை இந்தியர்களான சொந்த மக்கள் விஷயத்தில் மட்டும் கருணை காட்டாத தேனோ!

தஞ்சம் என வருவோரைத் தட்டிக் கொடுத்து 'அஞ்சேல்' என ஆதரவு கூறும் அருமைத் தமிழகமும் கூட அல்லவா எங்கள் மீது கருணை காட்டாமல் இருக்கின்றது!

தொழிலாளர் நலனுக்காகப் பாடுபடுகிறோம் என்றியம்பிய இ. இ. கா. ஸ்தாபனங்கூட கடைசி நிமிடத்தில் கையை விரித்து விட்டது. இவர்களும் தற்போது எங்களை யெல்லாம் இந்தியாவுக்குப் போகச் சொல்லி, துண்டுப் பிரசுரங்கள் வெளி யிட்டிருக்கின்றனர்.

எனவே, மத்திய சர்க்காரும் மாகாண சர்க்காரும் மேலும் அசட்டையா யிராது, எங்கள் மேல் கருணை காட்டக் கோருகிறோம்.

கருணையுள்ளங் கொண்ட எங்கள் நேருஜி இதைக் கவனிப்பார் என்றே நம்புகிறோம்.

இலங்கை
19-8-54

பி. சுப்பையா

கொடுத்து விடப் போகிறேன். நீ என்ன சொல்கிறாய்?" என்றேன், என் மனக் கிலேசத்தைச் சரி பாதியாய்ச் சரசுவிடம் பங்கிட்டுக் கொள்வதற்காக.

"சரி, உங்கள் இஷ்டம். அர்த்த ராத்திரியில் அதைப் பற்றிப் பேசுவானேன்? அதற்கு இப்பொழுதே என்ன அவசரம் வந்து விட்டது? நாளைக்கு ஞாயிற்றுக் கிழமை தானே! விடிந்து எழுந்து யோசித்துக் கொள்ளலாம். இப்பொழுது பேசாமல் தூங்குங்கள்" என்று சொல்லி விட்டுக் கண்களை மூடிக் கொண்டாள். என் மனப் போராட்டத்தில் நான் எப்படித் தூங்க முடியும் என்பது சரசுவுக்குத் தெரியாததல்ல. வேளையும் காலத்தையும் அனுசரித்து நடக்கப் பெண்களுக்குச் சொல்லிக் கொடுக்கவா வேண்டும்.

'ராஜிநாமா!... ஆம், அதை எப்படி எழுதுவது? என் வயிற்றெரிச்சலைக் கொட்டி என்னை ஏவலஞ்ஞையாகவும் மரியாதைக் குறைவாகவும் நடத்தும் என் பகுதி தலைமைக் குமாஸ்தாவின் இறுக்குத்தனத்தையும் போக்கிரித் தனத்தையும் பற்றித் தலைமைக் காரியாலயத்துக்கு ஏன் எழுதக் கூடாது? அப்படிச் செய்தால் என் வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டதாகாதா? இது போன்ற கெட்ட எண்ணங்கள் என்னுடைய மனத்தில் அலை பாய்ந்து வந்தன.

'சீ, இது என்ன பைத்தியக்கார எண்ணம்? உனக்கு வேலையை ராஜிநாமா செய்ய வேண்டுமானால் செய்து விட்டுப் போயேன். அதற்குப் பிறரை ஏன் குறைகூற வேண்டும்? அதுவும் மறைமுகமாக இது கோழைகளின் செயல் அல்லவா? அவனவன் செய்யும் கொடுமைகளுக்கு அவனவன் அனுபவித்து விட்டுப் போகிறான். அதனால் உனக்கு ஏன் இந்தப் பழி வாங்கும் எண்ணம்?' என்று என் உள்ளுணர்ச்சி அறிவுறுத்தியது. ஆகவே ஒரு கடுதாசியில் என் ராஜிநாமாவை எழுதிச் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டேன்.

திங்கட்கிழமை அன்று எனக்கிருந்த கிலேசத்தில் வேலை ஓட வில்லை. எப்பொழுது மானேஜர் ஓய்வாக இருப்பார்? எப்பொழுது அவரை நேரில் கண்டு ராஜிநாமாவைக் கொடுக்கலாம் என்ற சிந்தனைதான் மனசை வருத்து எடுத்துக் கொண்டிருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் ஆபீஸ் பையன் மானேஜர் அழைப்பதாக என்னைக் கூப்பிட்டான். நான் நுழைகிறேன்.

நான் எழுதி வைத்த ராஜிநாமாக் கடிதம் இருக்கிறதா என்று பையைத் தடவிப் பார்த்துக் கொண்டே மானேஜர் அறைக்குள் சென்றேன். அவர் அதிகமாய்க் கேட்டால் எனக்கும் தலைமைக் குமாஸ்தாவுக்கும் ஒத்து வரவில்லை என்ற ஒரே வார்த்தையில் என் அபிப்பிராயத்தைத் தெரிவித்து விடுவது என்று திடசங்கல்பம் செய்து கொண்டேன். அப்படி அவர் எனக்காக இரங்கினால் வேறொரு பகுதிக்கு என்னை மாற்றி விடும்படி கேட்டுக் கொள்வது. இல்லையேல் ராஜிநாமாவை அங்கீகரிக்கும்படி சொல்வது என்றும் முடிவு செய்து கொண்டேன்.

முகத்தில் ஒரு கவனமும் இல்லாமல் என்றும் இருப்பது போல் அமைதிக் குறியே மானேஜர் முகத்தில் காணப்பட்டது. அவருக்கு என் வணக்கத்தைத் தெரிவித்து விட்டு மேஜையருகில் போய் நின்றேன். என்னை நிமிர்ந்து நோக்கி, அவர் புன்சிரிப்புடன்,

"மிஸ்டர் ...... உங்களைப் பற்றி ஸ்ரீ நாதன் சொல்லியிருக்கிறார் !" என்றார்.

"ஆமாம், சார் ! எனக்கும் அவருக்கும் பொருத்தம் இல்லை. என்மேல் ஏதாவது அபாண்டமாகச் சொல்லி யிருப்பார். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நான் என்ன பாவம் செய்தேனோ, என்னை அவருக்குப் பிடிக்க வில்லை. நான் வேலையை ராஜிநாமாச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை. அத னால் நீங்கள் ......" என்று அதற்கு மேல் பேச முடியாமல் திணறி மூச்சு அடைக்க என் ராஜிநாமாக் கடிதத்தைப் பையிலிருந்து எடுத்து அவரிடம் நீட்டினேன்.

கையில் வாங்கிக் கொண்ட அக் கடிதத் தைச் சில நிமிஷங்கள் அவர் கூர்ந்து படிப்ப தைக் கவனித்தேன். அந்தச் சில நிமிஷங்கள் எனக்கு ஒரு யுகமாகத் தோன்றின. திடீ ரென்று அவரிடமிருந்து அறையைக் கிழித் துக் கொண்டு கிளம்பிய சிரிப்பொலி என் னைத் திகைக்கச் செய்து விட்டது. நான் மிரள மிரள விழித்து அவரைப் பார்த்தேன். அவர் சிரிப்பை அடக்க முடியாமல் "ஏன் ஐயா, இந்தக் கடிதத்தைப் பார்த்தீரா ?" என்று இடி இடி என்று சிரித்துக் கொண்டே அந்தக் கடிதத்தைத் திருப்பி என்னிடம் கொடுத்தார்.

அதைக் கண்ணுற்ற எனக்குத் திக்கென் றது. வியப்பால் கண்கள் விரிந்தன. ஏனெ னில் அந்தக் கடிதம் நான் எழுதியதல்ல :


ஐயா,

இந்தக் கடிதம் கொண்டு வரும் என் கணவர் ஏதேதோ என்னிடம் சொல்லி வேலையை ராஜி நாமாச் செய்து விடுவதாக என்னிடம் பயமுறுத்து கிறார். அவர் மனச் சோர்வில் இப்படிச் செய்து விட்டால் அது எங்கள் குடும்பத்துக்குப் பேரிடி யாக முடியும். அவர் மனச் சங்கடத்தில் ராஜி நாமாவை எழுதியும் வைத்து விட்டார். நான் தான் அதற்குப் பதில் இந்தக் கடிதத்தை எழுதத் துணிந்தேன். அவருக்கு நான் இப்படி எழுதப் போவதாக முன்னமேயே தெரிவித்திருந்தால் அதற்குச் சிறிதும் இணங்கி இருக்க மாட்டார். அதனால் தயவு செய்து நீங்கள் பெரிய மனசு பண்ணி அவரை மன்னித்து வேலையில் வைத்துக் கொள்ள வேண்டும். இப்படிக்கு,

ஸ்ரீமதி சரஸ்-சங்கரன்.

அவமானமும் வெட்கமும் ஒன்றை யொன்று போட்டி போட்டுக் கொண்டு என்னைத் தாக்கவே இன்னது சொல்வ தென்று தெரியாமல் திரு திருவென்று விழித்தேன். "இல்லை, சார் ! ஏதோ தெரி யாத்தனமாகத் தவறுதல் ஏற்பட்டு விட் டது. மன்னிக்கணும்" என்று சொல்வதற் குள் என் நாக்கும் உடலும் பட்ட பாட்டைக் கண்ட அவர் மீண்டும் சிரிக்கத் தொடங்கினார்.

"நல்ல வேடிக்கை மனிதர் ஐயா, நீர் ! நான் உங்களைக் கூப்பிட்ட விஷயத்தைச் சொல்வதற்குள் நீர் வாயில் வந்ததைப் பிதற்றி ஒரு கடிதத்தையும் என்னிடம்



மயிலாப்பூரில் நெடுங் காலமாக நடைபெற்று வந்த ஸ்ரீ ராமகிருஷ்ண மாணவர் இல்லம், சென்ற மகாயுத்தத்தின் போது, செங்கற்பட்டுக்கு மாற்றப்பட்டது. செங்கற்பட்டிலிருந்து ஆத்தூருக்குப் போகும் வழியில் அழகான இயற்கைச் சூழ்நிலையில், புகழ்பெற்ற பிரமுகர் ஸர் வி. பாஷ்யம் அய்யங்கார் அவர்களின் வேனிற்கால இல்லத்தில் இப்போது நடத்தப் பட்டு வருகிறது. மிகச் சிறந்த இலட்சியங்களுடன் நடத்தப்பட்டு வரும் இந்தப் பள்ளிக்குக் "கல்கி" ஆசிரியரும், செங்கற்பட்டு சேவா சங்கத்தாரும் சென்றிருந்த போது, உடற்பயிற்சி ஆசிரியரும் மாணவர்களும் சில அபூர்வ தேகப்பயிற்சி முறைகளைச் செய்து காட்டினார்கள்.

கொடுத்து விட்டீரே! உமக்குத் தெரியுமா மிஸ்டர் நாதன் சொன்ன விஷயம்? அவர் வேலையிலிருந்து ஓய்வெடுத்துக் கொள்ள இன்னும் ஆறு மாதங்களே இருக்கின்றன. அதை யொட்டி அவர் இப்பொழுதே ரஜாவில் செல்கிறார். அவருடைய ஸ்தானத்துக்கு உம்மைத் தவிர அனுபவசாலி வேறு யாரும் இடையாது என்றும் உம்மையே அவர் ஸ்தானத்துக்கு நியமிக்கும்படியும் உம்மைப் பற்றி வெகுவாய்ப் புகழ்ந்து எனக்குப் பிரத்தியேகமாக ஒரு கடிதம் வேறு எழுதியிருக்கிறார். நீர் என்னடா வென்றால் அவர்மேல் பழியைச் சொல்லி வேலையை ராஜிநாமாச் செய்வதாகப் பிதற்றுகிறீர்.' நான் உம்மை அவருடைய ஸ்தானத்துக்கு மாற்றி விட்டதாகத் தலைமைக் காரியாலயத்துக்கு எழுதியிருக்கிறேன். உமக்குச் சம்மதமா இல்லையா? சொல்லும்" என்றார்.

இதைக் கேட்ட எனக்கு ஆச்சரியமும், அதிர்ச்சியும், வியப்பும், திகைப்பும் மாறி மாறி ஏற்பட்டன. இந்த எதிர்பாராத அதிர்ஷ்டம் என்னை உயரத் தூக்கிச் சென்று ஆகாயத்தில் பவனி வருவதாகத் தோன்றியது. அப்பொழுது இருந்த படபடப்பில் இன்னது செய்வது, சொல்வது என்று விளங்காமல் அவருக்கு என் நன்றியைத் தெரிவித்து அறையை விட்டு வெளியேறினேன்.

'என்ன தவறு செய்து விட்டோம்? புடம் போட்ட பத்தரை மாற்றுத் தங்கம் போன்ற இருதயம் படைத்த தலைமைக் குமாஸ்தாவை அவருடைய வெளி மிரட்டலையும் உருட்டலையும் கண்டு நிந்தித்தேனே! நான் அல்லவா மூடன்! இந்த அற்புதமான குணத்தையுடைய அவர் ஏன் வெளியுலகில் தன்னை நிந்திக்கும்படி செய்து கொள்ளுகிறார்? இது ஒருவித அதிசய மனப் பண்பாட்டின் அறிகுறி போலும். உள் அன்பினால் செய்யும் பணியை மறைவில் செய்து கைம்மாறு கருதாமல் தன்னை வெளியுலகம் தூற்றும்படி தோன்றச் செய்வது ஒருவித மனப்பான்மை போலும்!' என்று பலவாறு எண்ணி என் நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்க மிஸ்டர் நாதன் இருக்குமிடத்தை அணுகினேன்.

"சார், என்னை மன்னிக்கணும். இத்தனை வருஷங்களாக உங்களோடு நான் முழுவதும் நெருங்கிப் பழகியும் உங்களுடைய தங்கமான குணத்தை என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை.

"மேலுக்கு நீங்கள் கடுமையான சுபாவம் உள்ளவராகத் தோன்றினாலும் பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்னும் எண்ணமும் உங்களிடம் இருக்கிறது என்பதை என்னால் உணரவே முடியவில்லை. உங்களைக் கொடிய மனிதராகவே என் மனத்தில் தீர்மானித்து இது வரையில் உங்களிடம் வெறுப்பையே கொண்டிருந்தேன். என் மனசுக்குள் பலமுறை உங்களை நிந்தித்தேன். இப்பொழுது என் மனம் அடைந்திருக்கும் வேதனையில் எவ்விதம் உங்களிடம் மன்னிப்புக் கோருவது என்று தெரியவில்லை. இப்பொழுது நீங்கள் எனக்காகச் செய்த உதவிக்கு நான் என்றும் கடமைப்பட்டிருக்கிறேன். உங்களுக்கு என் நன்றி. என் வந்தனத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று நான் பணிவுடன் சொல்லியும் தலை நிமிராமல் கவனியாதவர் போல் அவர் அசட்டையாக இருந்தார்.

"நீர், முதலில் போய் உம்மிடத்தில் உட்காரும்" என்றார். அதிகார தோரணையில் அந்தப் பழைய கண்டிப்பு சிறிதும் குறைந்ததாகத் தெரியவில்லை. உமது முகஸ்துதியும் நன்றியும் எனக்குத் தேவை இல்லை என்பது போல இருந்தது, அவருடைய அந்தப் பேச்சு. இந்த அதிசய மனிதரை எப்படித் தான் நெருங்குவது என்று எனக்கு விளங்காததால் ஆச்சரியத்துடன் அதற்குமேல் ஒன்றும் பேச முடியாமல் என் இடத்தில் போய் உட்கார்ந்து கொண்டேன்.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press,
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madrrs-10.

சீர்தூக்கிப் பாருங்கள்



விளம்பரதாரர்களே...

நீங்கள் உபயோகிக்கும் பத்திரிகையைப் பற்றிய உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள்!

ஆடிட் பீரோ ஆப் சர்குலேஷன்ஸ் என்ற ஸ்தாபனந்தான் சுருக்கமாக ஆங்கிலத்தில் **ABC** என்று சொல்லப்படுகிறது. இந்த **ஏபிஸி** ஸ்தாபனத்தில் இந்தியா, பாகிஸ்தான், சிலோன் ஆகிய நாடுகளில் 13 பாஷைகளில் நடத்தப்படும் 175க்கு மேற்பட்ட பிரதான பத்திரிகைகள் அங்கம் வகிக்கின்றன.. இந்தப் பத்திரிகைகளின் விற்பனை கணக்கு எந்த சமயத்திலும் **ஏபிஸி** ஸ்தாபனத்தின் ஆடிட்டர்களால் பரிசோதிக்கப்பட்டு, அந்தந்த பத்திரிகையின் நிகர விற்பனை எண்ணிக்கை சர்டிபிகேட்டை ஆறு மாதத்திற்கு ஒரு முறை **ஏபிஸி** ஸ்தாபனத்தின் அங்கத்தினர்களுக்கு அனுப்பப்படுகிறது. ஒரு விளம்பரதாரர் என்ற முறையில் நீங்கள் **ஏபிஸி** ஸ்தாபனத்தின் அங்கத்தினராக இருந்தால் உங்களுக்கும் அந்த சர்டிபிகேட் அனுப்பப்படும். அப்போது உங்கள் விளம்பரத்திற்கு நீங்கள் உபயோகிக்கும் பத்திரிகையின் உண்மை நிகர விற்பனையை நீங்கள் அறிந்து கொள்வதுடன் நீங்கள் செலவழிக்கும் ஒவ்வொரு ரூபாய்க்கும் எத்தனை வாசகர்களைப் பெறுகிறீர்கள் என்ற உண்மையும் தெரிய வரும்.

ஆடிட் பீரோ ஆப் சர்குலேஷன்ஸ் லி-ட்.

பாரத் ஹவுஸ், அபோலோ தெரு :: கோட்டை, பம்பாய்

கீழ்க்கண்ட விளம்பரதாரர்களும் விளம்பர ஏஜண்டுகளும் ஏற்கனவே ABC யின் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள்.

விளம்பரதாரர்கள் —

அல்லைட் போட்டோகிராபிக்ஸ் லி-ட்., ஆயுர்வேதாஸ்ரமம் பார்மஸி லி-ட்., இ. எம். ஆல்காக் அண்டு மொஹாட்டா லி-ட்., அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லி-ட்., பாமர் லாரி அண்டு கம்பெனி லி-ட்., பம்பாய் மியூச்சுவல் லைப் அஷ்யூரன்ஸ் சொஸைட்டி லி-ட்., பூட்ஸ் ப்யூர் ட்ரக் கோ. (இந்தியா) லி-ட்., பர்மா ஷெல் ஆயில் ஸ்டோரேஜ் அண்டு டிஸ்ட்ரிபியூட்டிங் கோ. ஆப் இந்தியா லி-ட்., கால்டெக்ஸ் (இந்தியா) லிட்., உ போர்டு, கார்ன் ப்ராடெக்ட்ஸ் கோ. (இந்தியா) லி-ட்., டன்லப் ரப்பர் கோ. (இந்தியா) லி-ட்., கிளாக்ஸோ லாபரட்டரீஸ் (இந்தியா) லி-ட்., கோத்ரேஜ் அண்டு பாய்ஸ் மானுபாக்சரிங் கோ., லி-ட். இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லி-ட்., இம்பீரியல் டொபாகோ கம்பெனி ஆப் இந்தியா லி-ட்., இந்தியா டயர் அண்டு ரப்பர் கோ. (இந்தியா) லி-ட்., லிவர் பிரதர்ஸ் (ஸிலோன்) லி-ட்., லிவர் பிரதர்ஸ் (இந்தியா) லி-ட்., லிப்டன் லி-ட்., ஜே.எல். மாரிஸன் ஸன் அண்டு ஜோன்ஸ் (இந்தியா) லி-ட்., ஸி & இ. மார்ட்டன் (இந்தியா) லி-ட்., மூல்லர் & பிப்ஸ் (இந்தியா) லி-ட்., நாஷனல் கார்பன் கோ. (இந்தியா) லி-ட்., பார்லி ப்ராடெக்ட்ஸ் மானுபாக்சரிங் கோ. லி-ட்., பஞ்சாபி சந்து ஹல்வாய், வேல்ஸ் ப்ராடெக்ட்ஸ் ஓவர்ஸீஸ் லி-ட்., ஷாலிமார் பெயிண்ட், கலர் அண்டு வார்னிஷ் கம்பெனி லி-ட்., டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லி-ட்., வால்காட் பிரதர்ஸ்.

விளம்பர ஏஜெண்டுகள் —

அட்வர்டைஸிங் & ஸேல்ஸ் பிரமோஷன் கோ., ஈஸ்டர்ன்ஸ், எபிஷியண்ட் பப்ளிஸிட்டிஸ் லி-ட்., எவரெஸ்ட அட்வர்டைஸிங் லி-ட்., கிராண்ட் அட்வர்டைஸிங் இன்க்., க்ரீன்ஸ் அட்வர்டைஸிங் சர்வீஸ் ஏஜண்ட்ஸ், இந்தியா அட்வர்டைஸிங் சர்வீஸ், டி. ஜே. கீமர் அண்டு கோ. லி-ட்., லின்டாஸ் லி-ட். பி. எஸ். மணி அண்டு கம்பெனி, நேஷனல் அட்வர்டைஸிங் சர்வீஸ் லி-ட்., பிரஸ் ஸிண்டிகேட் லி-ட்., ரஞ்சித் சேல்ஸ் அண்டு பப்ளிஸிட்டி லி-ட்., ஸில்பி லி-ட்., ஸின்டாஸ் லி-ட்., எப். டி. ஸ்டுவர்ட் லி-ட்., எல். ஏ. ஸ்ட்ரோனக் அண்டு கோ. (இந்தியா) லி-ட்., ஜே. வால்டர் தாம்ஸன் கம்பெனி (ஈஸ்டர்ன்) லி-ட்.

இதைப் பிரசுரித்தவர்கள் :

ABC ஸ்தாபனத்தின் அங்கத்தினரான 'கல்கி' பத்திரிகை சொந்தக்காரர்கள்

REGISTERED No. M. 4392
Registered as a news paper in Ceylon



மூன்று மணி நேரத்தில் நான் ஒரு அதிசயத்தைச் செய்யவேண்டியிருந்தது!

முத்தியமான வேனிலில் வெப்பம் தாங்காமல் சற்று கண் அயர்ந்தேன். அப்பொழுதுதான் ஆபீஸ்பையன் கதவைத்தட்டி ஒரு சீட்டைக் கொடுத்துவிட்டுப் போனான். அடபாவமே! என் கணவர் அவரது மேலதிகாரியை சாப்பாட்டிற்கு அழைத்துவருகிறாராம்! அவர்கள் சாப்பிடவர சரியாக மூன்று மணி நேரம் தானிருந்தது. நான் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தேன்.

அச்சமயம் தபால்காரன் ஒரு பெரிய கவறை என்னிடம் கொடுத்துவிட்டுப்போனான். அதனுள் புத்தம்புதிய டால்டா சமையல் புத்தகம் காட்சி அளித்தது. சமய சஞ்சீவிபோல் அப்புத்தகத்தில் சீக்கிரமே தயாரிக்கமுடிகிற பிரத்தியேக தின்பண்டங்களின் செய்முறைக் குறிப்புகள் பல இருந்தன. உடனே சமையலறைக்குச் சென்று டால்டா வனஸ்பதி உபயோகித்து அவசர அவசரமாக தின்பண்டங்களைத் தயாரித்தேன்.

நான் பட்ட சிரமத்திற்கு சீரிய பலன் கிடைத்தது. சாப்பிடும்போது என் கணவரின் முகம் பெருமையால் பூரித்தது. அந்த மேலதிகாரி என் சமையலை புகழ்ந்து பேசினதை நீங்கள் கேட்டிருக்கவேண்டும்.

டால்டா வனஸ்பதி தின்பண்டங்களின் இயற்கைருசியை வெளிக் கொண்டுவருகிறது. பொரித்தல், தாளித்தல், தித்திப்புப் பண்டம் தயாரித்தல் இவைபோன்ற எல்லா சமையல் வேலைகளுக்கும் டால்டா வனஸ்பதி பயன்படுகிறது. மேலும் டால்டா வனஸ்பதியில் இப்பொழுது விடமின் 'ஏ' 'டி' இருக்கிறது.

கடையில் சில்லறையாக விற்கப்படும் தாவரக் கொழுப்பை வாங்குவது அபாயகரமானது. ஏனென்றால் மிகவும் விலையுயர்ந்த கொழுப்பும் கலப்படம் செய்யப்பட்டதாக இருக்கலாம். மேலும் எப்பொழுதுமே திறந்து வைத்திருப்பதால் தூசிபடிந்ததாகவும், ஈமொய்த்ததாகவும் இருக்கலாம். இதை சாப்பிட்டால் வியாதிவர கேட்கவாவேண்டும்?

ஆரோக்கியமாயிருக்க ஒவ்வொருவருடைய உணவிலும் தேவையான சுத்தமான கொழுப்பை டால்டா வனஸ்பதி அளிக்கிறது. காற்றுப் புகாத சீல் செய்த டின்களில் கிடைக்கும் டால்டா வனஸ்பதியையே கேட்டு வாங்குங்கள். இது 10 பவுண்டு, 5 பவுண்டு, 3 பவுண்டு, 1 பவுண்டு டின்களில் தேவைக்குத் தகுந்தபடி கிடைக்கிறது. இன்றே ஒரு டின் வாங்குங்கள். படங்கள் கொண்ட டால்டா சமையல் புத்தகம் தமிழ், ஹிந்தி, வங்காளி, ஆங்கிலம் என்ற பாஷைகளில் கிடைக்கிறது. 300 செய்முறைக் குறிப்புகள், சமையலறை பராமரிப்பு, ஊட்டம் முதலானவைகளைப்பற்றிய விவரங்களடங்கிய இப்புத்தகத்தின் விலை ரூ. 2/- தான். தபால் செலவு அணா 12 தனி. உங்கள் பிரதிக்கு இன்றே எழுதுங்கள்:

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1.



மர அடையாளமுள்ள டின்னைப் பார்த்து வாங்குங்கள்.

டால்டா வனஸ்பதி

சிறந்த சமையல் — குறைந்த செலவு

HVM. 210-50 TM